Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 12 சனிக்கிழமை (26-06-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:4

### லயன் ஏயர் பயணிகளின்

## 'எட்டுத் தடயப் பொருள்கள் அடையாளம் காட்டப்பட்டன

கொழும்பு, ஜுன்26

இரணைதீவு கடற்பகுதியில் கடந்த வருடம காணாமற்போன 'லயன் ஏயர்' விமானத்தில் இருந்து மீட்கப் பட்ட 44தடயப் பொருள்களில் நேற்று எட்டுப் பொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத் தில் நேற்று வைக்கப்பட்டிருந்த இந் தப பொருள்களில் எட்டுப்பொருள்கள் அந்த விமானத்தில் பயணம் செய் தவர்களின் உறவினர்களால் அடை யாளம் காட்டப்பட்டன.

இன்றும் நாளையும் இந்தத தடயப் பொருள்கள் அங்கு மக்கள் பார் வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

ஏற்கனவே மன்னாரில் வைத்து ஒருவரின் தடயப் பொருள் அடையா ளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-3)

## யாழ்.மாவட்ட படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் வசந்தா பெரேரா?

### லொஹான் குணவர்த்தன கொழும்புக்கு மாற்றப்படலாம்

யாழ். மாவட்டப் படைகளின் தள பதியாக மேஜர் ஜெனரல் வசந்தா பெரேரா விரைவில் நியமிக்கப்பட விருப்பதாக பாதுகாப்பு வட்டாரங் களை மேற்கோள்காட்டி கொழும் புச செய்திகள் தெரிவித்தன.

தற்போது வடக்கில் படைகளின் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன வின் இடத்திற்கே அவர் நியமிக்கப்பட வுள்ளார்.

அமெரிக்காவில் பயிற்சி பெறு வதற்காகச் சென்றிருந்த மேஜர் ஜென ரல் வசந்தா பெரேரா கடந்த வாரம் நாடு திரும்பியுள்ளார்.

புதிய நியமனம் குறித்த அறி விப்பை இராணுவத் தலைமையகம் விரைவில் விடுக்கும் என்று செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேஜர் ஜெனரல் லொஹான் குண வர்த்தன கொழும்புக்கு இடமாற்ற லாகிச் செல்லவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## புதையல் தோண்ட முயன்றோர் கைது

கட்டுப்பெத்த பகுதியில் புதையல் தோண்டுவதற்காகப் பூசை நடத்திக் கொண்டிருந்த ஐவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

புதையல் இருப்பதாக மந்திரவாதி ஒருவர் தெரிவித்த ஓரிடத்தில் நேற்று முன்தினம் இவர்கள் பூசைகளை ஆரம் பித்ததாகவும் -

இந்தத்தகவல் கிடைத்ததும அங்கு விரைந்த பொலீஸார் ஐவரைக் கைது செய்ததுடன் சில பொருள்களையும் கைப்பற்றியதாகவும் - தெரிவிக்கப் பட்டது. (ஐ-3)

# நிலக்கண்ணிகளை அகற்றும் பணிக்கு ஒத்துழைக்கப் புலிகள் இணக்கம்

### ஐ.நா. அதிகாரி கொழும்பில் தகவல்

கொழும்பு,ஜுன்26

**யாழ்.குடாநாட்டில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று ஐ.நா.அபிவிருத்தித் திட்ட தொடர்பு அதிகாரி செல்வி லெஸ்லா கெல்லர் தகவல் வெளியிட் டிருக்கின்றார்.**

**கொழும்பில் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளி யிட்டார்.**

"கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்பாக உத்தியோகப்பற்றற்ற முறையில் விடுதலைப் புலிகளுடனும் மற்றும் தமிழ்க் குழுக்களுடனும் பேச் சுக்கள் நடத்தினோம்.

"அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட வுள்ள கண்ணிவெடி அகற்றும பணிக்கு விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் ஒத்துழைப்புத் தருவதாக உறுதி அளித்துள்ளன."

- இப்படி அவர் மேலும் தெரிவித் தார்.

இந்தப்பணிக்கென நான்கு மோப்ப நாய்கள் சிம்பாப்வேயிலிருந்து யாழ்ப் பாணம் கொண்டு செல்லப்படவிருக் கின்றன என்றும் -

அந்த நாட்டு நிபுணர்களும் இந்தப் பணிக்காக யாழ். செல்வர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## தமிழ் இளைஞர் கைதுகள் மன்னாரில் அதிகரிப்பு

மன்னார்,ஜுன 26

மன்னாரில் வகைதொகையின்றி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் படும் சம்பவங்கள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் மன்னார் சனி விலேஜ் என்ற இடத்தில் கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் இடம்பெற் றதை அடுத்து நேற்றுவரை அங்கு 45 தமிழ் இளைஞர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என்றும் -

இவர்களில் பலர் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் கிடைக்கவில்லை என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமும் மூர் வீதியில் வைத்து யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இளைஞர்கள் கைது செய்யப்படும் நிலை தொடர்வதை அடுத்து மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசெப் மன்னார் இணைப்பதிகாரி பிரிகேடியர் ரஞ்சித டி சில்வாவுடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ-3)

### வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்

## வைத்தியர் சங்கத்தின் பிரமுகர்களான 12 டாக்டர்களை கைதுசெய்ய உத்தரவு!

கொழும்பு, ஜுன்26

அரச மருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தத்துக்கு எதிராக நீதி மன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவை மீறியமைக்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தின் நிறைவேற்றுக்குழுவைச் சேர்ந்த பன்னிரண்டு உறுப்பினர்களையும் கைது செய்யுமாறு கொழும்பு மாவட்ட நீதிபதி டபிள்யூ.ஏ.சலாம் நேற்று உத் தரவு பிறப்பித்துள்ளார்.

மகரகமவைச் சேர்ந்த சட்டத் தரணி சுமேத சேனநாயக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த நீதிபதி டாக்டர்களின் வேலை நிறுத்தத்துக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தர வைப் பிறப்பித்திருந்தது தெரிந்ததே.

இந்த உத்தரவை உதாசீனம் செய்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர்ந்து வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டு வருகிறது.

இதனை அடுத்தே கைது உத்த ரவை நீதிபதி நேற்றுப் பிறப்பித்துள் ளார். (உ-3)

### ஊர்காவற்துறைக்கான

## 'ரமோனா' படகுச் சேவை மன்னார் செயலக பொறுப்பில்

மன்னார்,ஜுன்26

மன்னாருக்கும் ஊர்காவற்றுறைக் கும் இடையில் அடுத்த மாதம் முதல் சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க் கப்படும் 'ரமோனா' பாதைப் படகு எதிர்வரும் 28ஆம் திகதி மன்னார் செயலகத்தின் பொறுப்பில் ஒப்படைக் கப்படவுள்ளது.

இந்தப் பாதைப் படகைச் சேவை யில் ஈடுபடுத்துவதற்கான சகல அனு மதிகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் இருந்து தாம் பெற்றுவிட்டதாக வும்-

எதிர்வரும் 28ஆம் திகதி பாதைப் படகைச் செயலகத்தில் ஒப்படைத்த பின்னர் எப்போது சேவையை ஆரம் பிப்பது என்பது குறித்து மன்னார் செய லகம் முடிவு செய்யும் என்றும் -

அந்தப்படகின் உரிமையாளர் தெரி வித்தார். (உ-3-164)

## கைது உத்தரவுக்கு அடிபணியோம்!

### டாக்டர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜுன்26

நீதிமன்றத்தின் கைது உத்தரவு நடவடிக்கைகளைப் பொருட்படுத் தாது வேலைநிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபடப் போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதி ஒரு வர் நேற்றிரவு தெரிவித்தார்.

தமது நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களைப் பலவந்தமாகக் கைது செய்தால் தற்சமயம் தாம் மேற்கொண்டுவரும் அவசர வைத் திய சேவையையும் நிறுத்த வேண் டிய நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

இதற்கிடையில் -

அரச வைத்திய அதிகாரிகள் சங் கப் பிரதிநிகளுடன் பேச்சுக்கள் நடத்தி இணக்கப்பாட்டைக் காண்பதற் காக நியமிக்கப்பட்ட மூன்று அமைச் சர்களுக்கும்தமது முயற்சியை உடன் கைவிடுமாறு ஜனாதிபதி நேற்று [illegible] விடுத்துள்ளார்.

இதேவேளை -

அரசவைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரி வித்து சுகாதார சேவையைச் சேர்ந்த 10 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத் தத்தில் குதிக்க முயற்சி எடுத்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஆஸ்பத்திரி ஜெனரேற்றருக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜுன்26

யாழ்.போதனா வைத்தியசாலை யில் இயங்கிவரும் மின் விநியோக சாதனங்களுக்கு இராணுவப் பாது காப்பு அளிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் இந்த இராணுவப் பாதுகாப்பு இரவு பகலாக வழங்கப் படுவதாகத் தெரியவந்துள்ளது. (ஐ)

## அரசியல் நோக்கத்துக்கு அரசு அடிபணியாது!

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜுன்26

"அரசியல் நோக்கத்தைக் கொண்ட டாக்டர்களின் வேலை நிறுத்தத்துக்கு அரசு அடிபணியாது" என்று ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடா ளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தத்தின் பின் னணியில் ஐ.தே.க., ஜே.வி.பி., வீரவி தான அமைப்பு ஆகியன செயற்படு கின்றன என்று ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட எந்த அதிகாரத்தையும் அரசு வாபஸ் பெறமாட்டாது. மாகாண சபைக்கு சுகாதார சேவை தொடர் பாக வழங்கப்பட்ட அதிகாரத்தை வாபஸ் பெறுமாறு இந்தச் சங்கம் கோருவது நியாயமற்றது என்றும் ஜனாதிபதி கூறினார். [illegible]

## மாணவர் குழுக்கள் வவுனியாவில் மோதல்

வவுனியா,ஜுன 26

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பைச் சேர்ந்த இரு மாணவர் குழுக்களுக் கிடையில் நேற்று மோதல் இடம் பெற்றுள்ளது.

இந்த வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் 1999ஆம் ஆண்டு மாணவர்களுக்கும், 2000ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றதாகத் தெரி விக்கப்படுகிறது.

வவுனியாவில் தமிழ்க் குழுக்க ளுக்கு ஆதரவு தெரிவித்து முன்பு இயங்கிய மாணவர் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கிடையிலேயே மோதல் வெடித்ததாகவும் -

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# குடாநாட்டின் நுழைவாயிலில் குவியும் கவனம்

1992 ஜூலையில் ஆனையிறவுப்படைத் தளம் மீது புலிகள் மேற்கொண்ட 'ஆகாய கடல் வெளிச்சமர்' என்ற பாரிய தாக்குதல் நடவடிக்கை இடம்பெற்று சுமார் எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. அச்சமயம் குடாநாடு புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. தற்பொழுது அது படையினரின் பிடியில் உள்ளது. மீண்டும் ஆனையிறவுத் தளத்தை புலிகள் தாக்கப்போகின்றனர் என்ற செய்தி பரபரப்பாக அடிபடத் தொடங்கி உள்ளது.

பரந்தன் - ஆனையிறவுப் பிரதேசத்தில் உள்ள படையினரைக் கூண்டோடு அழித்து அப்புறப்படுத்தும் பெரியதொரு தாக்குதலை புலிகள் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது. கிளிநொச்சி நகரம் மற்றும் பரந்தன் பகுதிகளில் அமைந்திருந்த படைமுகாம்களை கடந்த ஆண்டு செப்ரெம்பரில் தாக்கி அழித்து நிர்மூலமாக்கிய 'ஓயாத அலைகள் - 2' போன்ற ஒரு பெரும் தாக்குதல் இடம்பெறலாம் என ஆய்வாளர்களும் அவதானிகளும் எதிர்பார்க்கின்றனர். படைத்தரப்பில் இருந்தும் புலிகளின் திட்டம் குறித்த எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

"....ஆம் பெரும் தாக்குதல் நடப்பதற்கு சாத்தியமுள்ளது. நாங்கள் அதை எதிர்பார்க்கிறோம்... எதிர்கொள்ளத்தயாராக இருக்கிறோம்..." என்று தெரிவித்திருக்கிறார் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க. முன்னாள் இராணுவப் பேச்சாளரான இவர் தற்பொழுது ஆனையிறவு வாடி வீட்டைத் தலைமையகமாகக் கொண்ட 54 ஆவது படையணியின் கட்டளையிடும் அதிகாரியாகப் பொறுப்பு வகிக்கிறார். ஆனையிறவுப் பிரதேசத்தில் (பளை, பரந்தன் உட்பட) நிலை கொண்டுள்ள ஏழு படைப் பிரிவுகளை வழி நடத்தும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் இராணுவப் பேச்சாளராக இருந்து கொண்டு இராணுவம் சம்பந்தப்பட்ட செய்திகளை செய்தியூடகங்களுக்கு வெளியிட்டுக் கொண்டிருந்தவர் சரத்முனசிங்க. அச்சமயம் அவர் பிரிகேடியர் தரத்தில் இருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலக ஊடகவியல் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்த அவருக்கு பத்திரிகையாளர்கள் தொடுக்கும் கேள்விக் கணைகளுக்குப் பதில் கொடுக்க முடியாமல் திக்குமுக்காடுவதைத்தவிர சிக்கலான வேறு பணிகள் அப்போது இருக்கவில்லை. ஆனால் இன்று நிலைமை வேறு.


கிளிநொச்சியில் அரசபடைகள் சந்தித்த மோசமான - வரலாறுகாணாத - தோல்விக்குப் பின்னர் சரத் முனசிங்க கூடுதல் பொறுப்புக்கள், பதவி உயர்வு என்பவற்றுடன் 54ஆவது படைப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாக நியமனம் பெற்றிருக்கின்றார். சிறிது காலம் அச்செழுவைத் தலைமையமாகக் கொண்ட - வலிகாமம் மற்றும் தீவகம் பகுதிக்குப் பொறுப்பான - 52 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக பணியாற்றியபின் அவர் 54ஆவது படையணியின் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்.

அதுவரை 54 ஆவது படையணியின் பிரதம கட்டளை அதிகாரியாக விளங்கியவர் மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன. அவரது காலத்திலேயே கிளிநொச்சி மீதான புலிகளின் பெரும் தாக்குதல் இடம்பெற்றது. அத்தாக்குதலில் இருந்து அவர் தப்பிவந்த போதிலும் அவரது பொறுப்பின் கீழ் இருந்த படையணியின் கணிசமான பகுதி அழிந்தது.

இராணுவத்தில் மிகவும் மதிக்கப்படும் சிரேஷ்ட அதிகாரியான லொஹான் குணவர்த்தனவுக்கு அதன்பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட்டு தற்போது யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரியாக பலாலியில் இருந்து அவர் பணிபுரிகிறார்.

குடாநாட்டின் வாயிலில் உள்ள ஆனையிறவுப் பிரதேசத்தைப் பாதுகாத்துவரும் படைகளுக்கு தற்போது பொறுப்பாக உள்ளவரான சரத் முனசிங்கவின் பணி மிகவும் சிக்கலானது. அப்பகுதியில் நிலைகொண்டுள்ள சுமார் 10 ஆயிரம் படையினரில் சுமார் 4 ஆயிரம் பேர்வரை இராணுவத்தில் இருந்து தப்பியோடிப் பிடிபட்டு பின்னர் மீண்டும் படையில் இணைக்கப்பட்டவர்கள். அவர்களை வழிநடத்தும் பொறுப்பு சிக்கலானது என்பதை படை வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. அவர்களிடையே ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணுவதில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. எனினும் இந்தப் பகுதியில் கடந்த சில வாரங்களாகப் படையினர் எந்நேரமும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். 'ஆனையிறவு மீது புலிகள் எந்த நேரமும் பாரிய தாக்குதலைத் தொடுக்கலாம்' என்ற செய்தியை நாட்டுக்குத் தெரிவிப்பதில் படையினர் தயக்கம் காட்டவில்லை என்பது தெரிகிறது.

பதற்றம் நிறைந்த இந்தப் பகுதி நிலைமை குறித்து மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார்.




...சுமார் 77 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் பரந்துள்ள ஆனையிறவுத் தளம் நீண்ட பெட்டி போன்ற வடிவில் அமைந்துள்ளது. குடநாட்டின் நுழைவாயிலான இத்தளத்தைக் காப்பாற்றுவதற்காக சுமார் 10 ஆயிரம் படையினர் எந்நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். புலிகளின் அச்சுறுத்தலை எதிர் கொள்வது மட்டுமன்றி தனது பொறுப்பின் கீழ் உள்ள துருப்புக்களை வழிநடத்துவதும் கூட இப்பகுதிக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கவுக்கு சிக்கலான பணிதான். ஏனெனில் அங்குள்ள படையினரில் சுமார் 4ஆயிரம் பேர் இராணுவத்தைவிட்டு தப்பிஓடி, பிடிபட்டு பலவந்தமாக மீண்டும் படையில் இணைக்கப்பட்டவர்கள்....

".....இந்த முகாம் பகுதியில் தினமும் புலிகளின் ஊடுருவல்கள் இடம்பெற்றுவருவதால் அடிக்கடி சிறுமோதல்கள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தளத்தின் முக்கியத்துவத்தைப் புலிகள் நன்கு உணர்ந்துள்ளனர். இந்தத் தளத்தை கைப்பற்றினால் முழுக் குடாநாடுமே அவர்கள் கையில் வீழ்ந்துவிடும். இதற்காக பிரபாகரன் தனது உறுப்பினர்களுக்கு நெருக்குதல் கொடுத்து வருகிறார். இதனாலேயே இப்பகுதியில் அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இது மிகக் கடினமானதொரு யுத்தமுனையாகும். நாம் தினமும்

## மறுபக்கம் வகக்பாழுவ ▶ வார விமர்சனம் ◀

நல்லூர் தாஸ்

நெருக்குதலுக்குள்ளாக்கப்படுகிறோம். புலிகள் எந்தநேரத்திலும் தாக்குதலை நடத்தலாம். எனினும் நாம் தயாராக இருக்கிறோம்...." என்கிறார் முனசிங்க.

குடாநாட்டைத் தொடர்ந்தும் தமது பிடியில் தக்கவைப்பதில் உள்ள வெற்றி ஆனையிறவு நுழைவாயிலைப் பாதுகாப்பதிலேயே தங்கியுள்ளது என்பதை அவரது கருத்து புலப்படுத்துகிறது.

கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆனையிறவுத் தளம் பெரும் அச்சுறுத்தலின் கீழ் இருந்து வருகிறது. இந்தப் பகுதியில் மோதல்கள் தினமும் இடம்பெறுகின்றன. மோதல் இன்றி ஒரு நாள் கூடக்கழிவதில்லை எனக் கூறும் அளவிற்கு அண்மைக் காலமாக இங்கு சிறுமோதல்கள் அதிகரித்துள்ளன.

"வேவு பார்க்கும் [illegible] களே சிறுமோதல்களுக்கு காரணமாகின்றன.

பெரிதாக ஊதி செய்வதற்குப் புலிகள் திட்டமிடுகின்றனர் என்பதையே இந்த ஊடுருவல்கள் காட்டுகின்றன" என்று படை வட்டாரங்கள் கூறுகின்றன.

ஊடுருவல்கள் முறியடிக்கப்பட்டதாக படைத்தரப்பு கூறும் சம்பவங்கள் சில வருமாறு:-

* ஜூன் 12 - இரு படையினர் தமது முகாமுக்கு அருகே நடந்து சென்று கொண்டிருந்த சமயம் புதர்களின் மறைவில் ஓடி ஒளிந்து கொண்ட புலிகளைக் கண்டு சரமாரியாகச் சுட்டனர். மறுநாள் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய போது தரையில் சில இரத்தக் கறைகளைப் படையினர் அவதானித்தனர். ஆறு நாட்கள் கழித்து அப்பகுதியில் புலி உறுப்பினர் ஒருவர் இறந்து கிடந்தார்.
* ஜூன்14 - ஆனையிறவின் மேற்குப் பகுதி முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் ஒருமரத்தின் கிளைகள் சந்தேகத்துக்கிடமான வகையில் வழமைக்கு மாறாக அசைவதைக் கண்டனர். உடனடியாக அப்பகுதி நோக்கி சரமாரியாகச் சுட்டனர். உருமறைப்பு ஆடை அணிந்த நிலையில் புலி உறுப்பினர் ஒருவர் மரத்தில் இருந்து வீழ்ந்து பலியானார். அவரிடம் இரண்டு கைக்குண்டுகள் காணப்பட்டன.
* ஜூன் 16 - வெற்றிலைக்கேணிப் பகுதியில் காவல்நடவடிக்கையாக ரோந்து சென்ற படையினர் நான்கு புலி உறுப்பினர்களைக் கண்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதில் மூவர் பலியாகினர். நான்காவது நபர் தப்பிவிட்டார். அவர்களிடம் இருந்து ரீ - 56 ரகத் துப்பாக்கி, இரவுப்பார்வை சாதனங்கள், அதி உயர் சக்தி கொண்ட வானொலிக் கருவிகள், உணவுப் பொதிகள் என்பனவற்றைப் படையினர் மீட்டனர்.

ஆனையிறவுப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி முதல் இம்மாதம் வரையான காலப்பகுதியில் மட்டும் ஊடுருவிய விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் 244 புலிகளைத் தாங்கள் கொன்றுள்ளதாக 54 ஆவது படையணியின் உதவிப் பிரதம கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் கே.பி. எகொடவெல தெரிவித்துள்ளார். படைத்தரப்பு கூறும் இந்த எண்ணிக்கை சரியானதுதானா என்பது வேறு விடயம். ஆயினும் புலிகள் இந்தப் பகுதிக்குள் தங்கள் ஊடுருவல்களை, வேவுப் பணிகளை அதிகரித்துள்ளனர் என்பதை இது காட்டுகிறது.

மேற்கூறிய காலப்பகுதியில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஓர் அதிகாரி உட்பட 20 படையினர் பலியாகியதாகவும் பிரிகேடியர் எகொடவெல தெரிவித்திருக்கிறார்.

கண்டி வீதியை மையமாகக் கொண்டு ஆனையிறவு முதல் பரந்தனின் ஒரு பகுதியை உள்ளடக்கியதாக சுமார் 77 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் ஒரு நீள் சதுரவடிவில் இந்தப் படைத்தளம் அமைந்துள்ளது. பல ஆயிரக் கணக்கான படையினர் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளில் சதா செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தளத்தின் வடபகுதி குடாநாட்டுடன் தொடர்புபட்டிருக்கிறது. இந்தப் பக்கத்தில் இருந்தும் வடகிழக்கே வெற்றிலைக்கேணிப் பக்கமாக இருந்தும் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்கள் மிக அரிதே. ஆனால் கிழக்கு, தெற்கு, மேற்கு பகுதிகள் புலிகளின் தாக்குதல் முனைகளாக உள்ளன. தென் [illegible] தென்மேற்குப் பகுதிகளில் புலிகள் பலமாக நிலைகொண்டுள்ளனர். [illegible] குடாக்கடல் ஏரி வழியாக கடற்புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற வாய்ப்புள்ளது.

குடாநாட்டில் இருந்து தரைவழியாக உதவிகளை விரைந்து அனுப்ப வசதி உள்ள போதிலும் புலிகளின் தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்கும் புவியியல் ரீதியான பாதுகாப்பு அம்சங்கள் இப்பகுதியில் கிடையா. இந்தத் தளத்தை தாக்கும் திட்டம் புலிகளிடம் இருக்குமானால் அதன் ஒரு பகுதியாக கடும் ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களையும் படையினர் சந்திக்க நேரிடும் எனப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அகோர ஷெல் மழையைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டால் பரந்த வெளிகளில் படையினர் அமைந்துள்ள பாதுகாப்பு அரண்கள் அதைத் தாக்குப்பிடிக்கப் போதுமானவையாக இல்லை என்று கூறப்படுகிறது.

மேலே ஆகாயம், கீழே பொட்டல்வெளி, உப்புக்கடல் - இவைதான் ஆனையிறவுப் பிரதேசம். கட்டடங்களோ வேறு இயற்கை அரண்களோ கிடையா. வானத்தில் இருந்து தரை நிலைவரத்தை நன்கு அவதானிக்கலாம். இத்தகைய புவியியல் நிலைவரம் புலிகளுக்கு ஒருபோதும் சாதகமாக இராது என்ற கருத்து படை நிபுணர்களிடையே முன்பு நிலவியது.

92 ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் திகதி முன்னிருட்டு வேளை ஆனையிறவுத்தளம் மீதான முற்றுகைச் சமரை புலிகள் தொடுக்கும் வரை ஆனையிறவுத் தளத்தை எப்படியாவது பாதுகாத்து விடலாம் என்ற நம்பிக்கை அப்போதைய இராணுவ உயர் பீடத்திடம் இருந்தது.

புலிகள் ஆனையிறவுத் தளத்தை தாக்கப் போகிறார்கள் என்ற தகவல் முன்கூட்டியே தெரியவந்தால் படையினர் அதைப் பகிரங்கமாக அறிவித்தும் இருந்தனர். ஆனால் தகவல் கசிந்தவுடன் நிறுத்திக் கொள்ளும் திட்டமாக புலிகளின் 'ஆகாய கடல் வெளிச்சமர்த் திட்டம்' தீட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் படையினர் வேறுவிதமாகக் கணித்தனர். புலிகள் உடனடியாகத் தாக்கமாட்டார்கள் அப்படித் தாக்கினாலும் அப்பகுதி புவியல் நிலைவரம் அவர்களுக்கு பாதகமாகவே இருக்கும். வெளியில் முன்னேறும் புலிகளை வான்படை உதவியவுடன் தாக்கி விரட்டி விட முடியும் என்று அவர்கள் கணக்குப் போட்டனர்.

புலிகளின் தாக்குதல் ஆரம்பிக்கப்பட முன்னரே சுமார் இருவார காலமாக தளத்தை அண்டிய பகுதிகள் மீது பரவலான விமானக் குண்டு வீச்சுக்கள் முடுக்கிவிடப்பட்டன.

"உப்புத் தரவை மண்ணில் பதுங்குகுழிகளை அமைக்க முடியாது. அரையடி தோண்டியதுமே கடல்நீர் ஊறிவிடும். தரையில் புலிகள் பதுங்குவது எப்படி?" என்று கேள்வி எழுப்பினார் படை உயர்அதிகாரி ஒருவர். ஆனால் புலிகளின் முற்றுகைச் சமரோ படையினரின் கணிப்புக்களை தவிடுபொடியாக்கியது.

ஈழப்போரில் புலிகள் பெயர் சூட்டி நடத்திய முதலாவது சமர் 'ஆகாய கடல் வெளி முற்றுகைச் சமரே' ஆகும். ஒருமாத காலப் பகுதிக்கும் மேலாக நீடித்த இச்சமரே புலிகளுக்கு அனுபவங்களை அள்ளிக்கொடுத்த முதலாவது மரபு வழிச்சமராகவும் அமைந்தது.

சுமார் 8 ஆயிரம் படையினருடன் ஆயிரத்துக்கும் குறைந்த எண்ணிக்கையிலான புலிகள் ஒருமாதகாலம் சமர் புரிந்தனர். போர்க்கோலம் பூண்டிருந்த குடாநாட்டில் மக்கள் வழங்கிய பின்புல ஆதரவு அவர்களுக்கு உற்சாக மூட்டியது.

ஆனையிறவுத் தளத்துக்கு ஆபத்து ஏற்பட்டால் அருகே வான் வழியாகத் தரையிறக்குவதற்கு தரைநிலவரம் வாய்ப்பானது என்று அதுவரை எண்ணியிருந்த படையினரின் எண்ணம் பிழைத்துப்போனது.

புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல் காரணமாக ஆனையிறவுத் தளத்துக்கான வான்வழி உதவிகள் கூட முற்றாகத் தடைப்பட்டன. காயமடைந்த பல நூற்றுக்கணக்கான படையினர் இரத்தப்பெருக்கினால் இறந்தனர். உணவு, தண்ணீர் இன்றி சுமார் மூன்றுவார காலம் திண்டாடவேண்டி ஏற்பட்டது.

ஆனையிறவு முகாமில் இருந்த சாதாரண சார்ஜன்ட் ஒருவர் பலாலியிலிருந்து வயர்லெஸ் மூலம் சத்திரசிகிச்சை டாக்டர் ஒருவர் வழங்கிய செய்முறை விளக்கங்களை காதில் வாங்கியபடி காயமடைந்த படையினருக்கு சத்திரசிகிச்சை அளித்தார். இச்சம்பவத்தை தென்னிலங்கை பத்திரிகைகள் கட்டம் கட்டி வெளியிட்டன.

இறுதியில் ஆனையிறவுக்கு வட கிழக்கே வெற்றிலைக்கேணிப் பகுதியில் மீட்புப்படையினரை தரையிறக்கி புலிகளின் முற்றுகையை முறியடிக்கும் பெரும் படை நடவடிக்கை அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டது.

'ஒப்பரேசன் பலவேகய'(Operation Balavegaya) என அந்நடவடிக்கைக்குப் பெயரிடப்பட்டது. அந்த மீட்புப் படையணி பலத்த இழப்புக்களுடன் முன்னேறி - சுமார் மூன்றுவார காலத்தின் பின்னர் - ஓகஸ்ட் 3ஆம் திகதி ஆனையிறவுத் தளத்தை சென்றடைந்தது.

இரு தரப்புமே பெரும் உயிர் இழப்புக்களை சந்தித்தன. எனினும் புலிகள் அமைப்பை ஒரு மரபுவழிப்படையாக சர்வதேச சமூகம் அடையாளம் கண்டது.

ஆகாய கடல் வெளிச் சமரின் எட்டாவது ஆண்டு நினைவு நாள்கள் அடுத்த மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ளன. அத்துடன் எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி புலிகளின் 'கரும்புலிகள் நாள்' ஆகும். இந்த இரு நினைவு தினங்களையும் ஒட்டிய காலப் பகுதியில் புலிகளின் பெரும் தாக்குதல் இடம்பெறலாம் எனப் படை வட்டாரங்களில் எதிர்பார்ப்பு நிலவுகிறது. குடாநாட்டில் படை உயர் அதிகாரிகளின் நடமாட்டங்களை இலக்கு வைத்து கரும்புலித் தாக்குதல்கள் இடம்பெற வாய்ப்புள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்திருப்பதாக அறியவருகிறது.

'ஆகாய கடல் வெளிச் சமர்' நடந்த காலத்துடன் ஒப்பிடும்போது புலிகள் தற்போது மிகப் பலம் பெற்று விளங்குகின்றனர். தற்சமயம் புலிகளிடம் விமானஎதிர்ப்பு ஏவுகணைகளும், விசேட படைப்பிரிவுகளும், ஆட்லறி சக்தியும் ஆள்பலமும் உள்ளன. இவை யுத்தத்தின் போக்கில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஆனையிறவுத் தளம் மீது புலிகள் நடக்

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளிலிருந்து பாகிஸ்தானை தனிமைப்படுத்திய கார்கில் பிரச்சினை

கார்கில், டிராஸ், பட்டாலிக் பகுதிகளில் ஊடுருவல்காரர்களை விரட்டி அடிக்கும் நடவடிக்கையில் இந்தியப் படைகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இதுவரை நடைபெற்ற சண்டைகளில் 150இற்கு மேற்பட்ட இந்தியப் படைகள் கொல்லப்பட்டுள்ளனர். ஊடுருவல்காரர்களில் 300இற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இன்னும் 800 முதல் 900 வரையான ஊடுருவல்காரர்கள் இப்பகுதியில் நிலைகொண்டிருக்கலாம் என்று இந்தியா கருதுகின்றது.



நவாஸ் ஷெரீப்

இந்தச் சண்டைகளில் முக்கிய சிகரங்கள் சிலவற்றை இந்தியப் படைகள் கைப்பற்றியுள்ளன. இந்தியா அரபிக் கடலில் தனது கடற்படையையும் உஷார் நிலையில் வைத்துள்ளது. இந்தச் சண்டைகள் முடிவடைவதற்கான அறிகுறி எதுவும் இதுவரை தென்படவில்லை. பாகிஸ்தானுடனான எந்த ஒரு பேச்சுவார்த்தையும் ஊடுருவல்காரரை வெளியேற்றுவது பற்றியதாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருந்து வருகின்றது. இருதரப்பினரும் சமாதானம் பற்றிப் பேசினாலும் தமது நாட்டின் நலவுரிமைகளை விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை.

கார்கிலும் அதனைச் சூழ உள்ள மலைச் சிகரங்களும் இராணுவ ரீதியில் தமக்கு முக்கியமானவை என்று இரு நாடுகளும் கருதுகின்றன.

### 40 முகாம்களில் பயிற்சி

காஷ்மீரில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடி வரும் காஷ்மீர் தீவிரவாதிகளே ஊடுருவலை நடத்தி இருப்பதாக பாகிஸ்தான் திரும்பவும் திரும்பவும் கூறி வருகிறது. ஆனால் இதுவரை எந்த ஒரு நாடும் இதனை நம்பத்தயார் இல்லை. பாகிஸ்தானின் மிக நெருங்கிய நட்பு நாடான சீனாகூட இந்த விவகாரத்தில் பாகிஸ்தானை ஆதரிக்கத் தயங்கி வருகின்றது.

இரு நாடுகளுடனும் நல்லுறவை வைத்துக் கொள்ளவே சீனா விரும்புகிறது.

ஊடுருவல் நடைபெறுவதற்கு முன் பல மாதங்களாக எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் (Line of Control) வைத்து ஊடுருவல்காரர்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளித்து வந்தாக இஸ்லாமாபாத்தில் மேற்குநாடுகளின் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாற்பது முகாம்கள் அமைக்கப்பட்டு சுமார் 3ஆயிரம் பேர் வரை பயிற்சி பெற்று வந்தனர். பயிற்சி பெற்றவர்களில் ஆப்கானிதானின் முஜாஹிதீன் போராளிகள் மற்றும் அரபு நாடுகளின் தீவிரவாதக் குழுக்கள் அடங்கி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கூலிப்படைகளுடன் இணைந்தே பாகிஸ்தான் படைகள் இந்த ஊடுருவலை நடத்தியதாக தற்பொழுது தகவல்கள் வெளியாகி உள்ளன. 16ஆயிரம் அடி உயரத்தில் மோசமான காலநிலை காரணமாக இந்தியப் படைகளினால் கைவிடப்பட்டிருந்த காவலரண்களையே இந்த ஊடுருவல்காரர்கள் முதலில் கைப்பற்றினர்.

ஊடுருவல்காரர்களுடனான சண்டைகளில் இந்தியப் படைகள் தற்பொழுது எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சமீபமாக முன்னேறியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1971 டிசெம்பர் 17 யுத்தம் நிறுத்தத்தின் பின்னர் நிர்ணயிக்கப்பட்டதே தற்போதைய எல்லை ஆகும். 1972 இல் சிம்லா ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இந்தியாவும் பாகிஸ்தானும நான்கு மாதங்கள் பேச்சு நடத்தி இந்த எல்லையை நிர்ணயித்திருந்தன. அது தொடர்பான 19வரை படங்களில் இந்த இரு நாடுகளும் அப்பொழுது கைச்சாத்திட்டன. தற்பொழுது இந்த எல்லைகள் தெளிவாக இல்லை என்று நவாஸ் ஷெரீப் அரசு நொண்டிச் சாட்டுக் கூறுகின்றது. தனக்குச் சாதகமான முறையில் புதிதாக எல்லைகளை வகுக்கவே அது விரும்புகிறது.

### பீதியினால் மக்கள் வெளியேறுகின்றனர்

தற்போதைய சண்டை முழு அளவான யுத்தமாக மாறும் சாத்தியம் குறைவாக உள்ள போதிலும் சண்டை தீவிரமடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பாகிஸ்தான் தனது பகுதியில் எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றி வருகின்றது.

வடமேற்கு இந்திய மாநிலமான பஞ்சாப்பின் எல்லைப் பகுதியில் இருந்தும் பெருமளவு இந்திய கிராமவாசிகள் இரவோடு இரவாக இடம்பெயர்ந்து வருகின்றனர். இதுவரை 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து விட்டனர். சுமார் 200 எல்லைக் கிராமங்களில் இருந்து 90 சதவீதமான மக்கள் வெளியேறி விட்டனர்.

தற்பொழுது சண்டை நடைபெற்று வரும் கார்கில், டிராஸ், பட்டாலிக் பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்கள் உள்ளன. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானோர் ஷியா முஸ்லிம்கள். ஊடுருவல்காரர்களினதும் கட்டுப்பாட்டு எல்லைக்கு அப்பால் உள்ள பாக். படையினரினதும் தாக்குதல்களுக்கு அஞ்சி இவர்களும் வெளியேறி வருகின்றனர். பாகிஸ்தான் சுனி முஸ்லிம்களைக் கொண்ட நாடு. ஷியா முஸ்லிம்களும் சுனி முஸ்லிம்களும் பரமவைரிகள்.




காஷ்மீர் எல்லைக் கோட்டுக்குச் சமீபமாக பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாகிஸ்தானின் அறிவுறுத்தல் காரணமாக தமது வீடுகளிலிருந்து வெளியேறுகின்றனர்.

### வெளிநாட்டுக் கொள்கைக்குத்தோல்வி

கார்கில் பிரச்சினை பாகிஸ்தானைப் பொறுத்தவரை பாகிஸ்தானின் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஒரு தோல்வி ஆகும். 1998 அணுவெடிப்பு பரிசோதனைகளின் பின்னர் இந்தியாவுடன் இராணுவ சமநிலையை எய்திவிட்டதாக பாகிஸ்தான் கருதுகின்றது. கடந்த ஒரு வருடமாக எல்லையில் அடிக்கடி அது நடத்திவரும் பீரங்கித் தாக்குதல்கள் மூலம் இது புலனாகிறது. ஆனால் பாகிஸ்தான் தப்புக் கணக்குப் போட்டு விட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கார்கில் பிரச்சினை உலக நாடுகளில் இருந்து பாகிஸ்தானை தனிமைப் படுத்திவிட்டது. காஷ்மீரில் பதற்ற நிலையை அதிகரிக்கச் செய்வதன் மூலம் சர்வதேசரீதியில் தென் ஆசியாவில் அணுயுத்தம் குறித்த அச்சநிலையை உருவாக்கி ஐ.நா. வைத் தலையிட வைப்பதே பாகிஸ்தானின் திட்டம். ஆனால் சர்வதேச கவனத்தை ஈர்ப்பதிலும், ஊடுருவல்காரர்கள் காஷ்மீர் தீவிரவாதிகள் என்று உலகை நம்ப வைப்பதிலும் நவாஸ் ஷெரீப் அரசு தோல்வி கண்டுவிட்டது.




இராணுவ ஆட்சியில் இருந்து ஜனநாயக ஆட்சிக்கு மாறிய பின்பும் பாகிஸ்தான் அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு இருந்து வருகிறது. பாகிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் இராணுவத்திற்கும் பெரும் பங்கு இருந்து வருகிறது.

எனினும் புதிய அரசமைப்புத் திட்டத்தின்படி இராணுவத் தளபதியை பிரதமரே நியமிக்கிறார். நாட்டின் பாதுகாப்பு அமைச்சராகவும் பிரதமரே இருக்கிறார். ஆகவே கார்கில் பகுதியில் ஊடுருவல் நடக்கப்போகிறது என்பது நவாஸ் ஷெரீப் அரசுக்கு ஆரம்பத்தில் இருந்தே தெரியாமல் இருக்க நியாயமில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் வாஜ்பாய் சமாதான யாத்திரை மேற்கொண்டு பஸ்ஸில் லாகூர் வந்த சமயமே கார்கில் ஊடுருவலுக்கான, முழுத்திட்டமும் வகுக்கப்பட்டிருந்தது. இதனை இந்தியத் தரப்பும் தற்பொழுது ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் வாஜ்பாயின் பஸ் ராஜதந்திரம் தற்பொழுது வெறும் கேலிக்கூத்தாகி விட்டது.

நவாஸ் ஷெரீப்பின் சீனி ஆலைகளின் உற்பத்திகளை இந்தியாவிற்கு சந்தைப்படுத்துவதற்கும் சீனி ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும் உதிரிப்பாகங்களையும் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்வதற்குமே லாகூரில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாக பாகிஸ்தானின் எதிர்க்கட்சித தலைவி பெனாஸிர் பூட்டோ குற்றஞ்சாட்டி உள்ளார். பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்றில் ஊழல் குற்றம் சுமத்தப்பட்டு குற்றவாளியாகத் தீர்க்கப்பட்ட பெனாஸிர் தற்போது லண்டனில் தங்கி உள்ளார். அவர் நாடு திரும்பும் பட்சத்தில் கைதுசெய்யப்படுவார்.

### அமெரிக்க ஆதரவு கிடைக்கவில்லை

1971 பங்களாதேஷ் யுத்தத்தின் போது பாகிஸ்தானுக்கு முழு ஆதரவு வழங்கிய அமெரிக்காவின் ஆதரவை இம்முறை பெறத்தவறியதே பாகிஸ்தானுக்கு கிடைத்த பெரும் தோல்வி ஆகும்.

கார்கில் பிரச்சினை ஆரம்பித்த நாளில் இருந்தே எல்லைக் கட்டுப்பாட்டு பகுதிக்கு மதிப்பளிக்கும்படி அமெரிக்கா கோரிவந்தது. ஆனால் 6 இந்தியப் படையினர் கண்கள் சிதைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் முழு அளவில் மாற்றம் ஏற்பட்டது. ஊடுருவல்காரர்களை திருப்பி அழைக்குமாறு நவாஸ் ஷெரீப் அரசை கிளின்ரன் நேரடியாகக் கேட்டுக் கொண்டார். காஷ்மீர் தீவிரவாதிகளே ஊடுருவி இருப்பதாக நவாஸ் ஷெரீப் அரசு கூறுவதை நம்புவதற்கு அமெரிக்கா தயாரில்லை. 4 ஆயிரத்து 800 மீற்றர் உயரத்தில், பனியால் மூடப்பட்ட அகன்ற பிரதேசத்தில், சக்தி வாய்ந்த தொலைக்கருவிகள், பீரங்கிகள், பனிப்பிரதேசத்தில் செல்லக்கூடிய வாகனங்கள் ஆகியவற்றுடன் ஊடுருவுவது சாதாரண காஷ்மீர் தீவரவாதிகளினால் இயலாத காரியம்.

### நிலைப்பாடு மாற பின்லேடனும் காரணம்

உலகெங்கும் உள்ள அமெரிக்க நலன்களுக்கு இஸ்லாமிய தீவிர வாதிகள் அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்கா கருதுகிறது. அமெரிக்கத் தூதரகங்கள் மீதான குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரியான பின்லேடன் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் முகாம் அமைத்து தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்து வந்தது தெரியவந்த பின்னரே அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது.

கார்கில் பகுதியில் இடம்பெற்ற ஊடுருவலை ஒரு பயங்கரவாத நடவடிக்கையாவே அமெரிக்கா கருதுகிறது. பாகிஸ்தான் இராணுவத்திலும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகப் புலனாய்வு

## அணு ஆயுத யுத்தம் மூண்டால் 10 கோடி மக்கள் உயிரிழப்பர்

அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதனை ஆரோக்கியமானதொன்றாக அமெரிக்கா கருதவில்லை. ஜேர்மனியின் கொலோன் நகரில் நடைபெற்ற ஜி.8 நாடுகளின் கூட்டறிக்கையிலும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு மதிப்பளிக்கும் படியும் ஊடுருவல்காரர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளும்படியும் பாகிஸ்தான் கோரப்பட்டிருப்பது நவாஸ் ஷெரீப் அரசுக்கும் மேலும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

தற்பொழுது பிரிட்டிஷ் பிரதமர் பிளயரும் இதே போன்ற வேண்டுகோளை பாகிஸ்தானிடம் விடுத்திருப்பது கார்கில் பிரச்சினையில் இந்தியா கடைப்பிடித்த அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றி என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவை முழுயுத்தத்துக்குள் இழுக்கும் பாகிஸ்தானின் பொறிக்குள் சிக்காமல் கட்டுப்பாட்டு எல்லைப் பகுதிக்குள் மட்டும் இந்தியா தனது இராணுவ நடவடிக்கைகளை வைத்துக் கொண்டிருப்பது சர்வதேச ரீதியில் இந்தியாவுக்கு ஆதரவை அதிகரிக்கச் செய்துள்ளது.

### அணுஆயுத யுத்தம் மூளுமா?

இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுதத் துறையில் முதிர்ச்சி அடையாத நாடுகள். கார்கில் யுத்தம் முழு அளவிலான யுத்தமாக மாறி இந்த இரு நாடுகளில் எந்த ஒரு நாடாவது தான் ராணுவ ரீதியில் பலவீனமாக இருப்பதாக முடிவு செய்யும் பட்சத்தில் அணுஆயுதத் தாக்குதல் தவிர்க்க முடியாததாகி விடலாம் என்று சர்வதேச நாடுகள் அஞ்சுகின்றன.

அணு ஆயுத யுத்தம் மூளுமானால் உபகண்டத்தில் 10 கோடி மக்கள் பலியாகக்கூடும். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது இறந்தோர் எண்ணிக்கையில் இது இரண்டு மடங்கு ஆகும்.

எனினும் இந்திய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான நிறுவனப் பணிப்பாளர் யஸ்ஜித் சிங் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அணு ஆயுத யுத்தம் மூளுவது நினைத்துக் கூடப் பார்க்க முடியாதது என்கிறார்.

### தேர்தலை பின்போட முயற்சி

எதிர்வரும் செப்ரெம்பர் இறுதியில் இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. கார்கில் யுத்த நிலைமை தேர்தலை பின்தள்ளுமா என்ற கேள்வி இந்திய அரசியல் வட்டாரங்களில் தற்போது எழுப்பப்பட்டு வருகின்றது.

திட்டமிட்ட தினத்தில் தேர்தல் எப்படியும் நடைபெறும் என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். ஆனால் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் குஷபாவே தாக்கரே தேர்தல்குறித்து

**உலக உலா**
**என்.பி.சீலன்**

சந்தேகம் எழுப்பியுள்ளார்.

யுத்தம் தொடர்ந்தால் சகல கட்சிகளையும் அழைத்து மற்றொரு தேர்தல் திகதியை நிர்ணயிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ள கருத்துக்கு காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. தேர்தல் திகதியை நிர்ணயிக்கும் போது கார்கில் பகுதி யுத்தம் மனதில் கொள்ளப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையாளரும் கருத்து வெளியிட்டுள்ளார். காங்கிரஸில சோனியாவின் தலைமைக்கு ஏற்பட்ட சவால் காரணமாக கார்கில் பிரச்சினையில் காங்கிரஸ் அதிக தீவிரம் காட்டி வருகிறது.

எதிர்வரும் மக்களவைத் தேர்தல் செப்ரெம்பர் இறுதிக்குள் நடைபெற்று முடிந்துவிடும் என்றும் ஒக்ரோபர் முதல் வாரத்தில் தேர்தல் முடிவுகள் வெளிவந்து விடும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆனால் தேர்தல் நடைபெறும் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எதிர்வரும் தேர்தலில் இந்தியாவின் 65 கோடி மக்கள் வாக்களிப்பர். ஜனத் தொகையைப் பொறுத்த வரை உல

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-

22

"எதிர்பார்ப்புக்கள் எங்கே அதிகம் இருக்கின்றனவோ அங்கேதான் ஏமாற்றங்களும் அதிகம் இருக்கும்" என்கிறது ஒரு பொன்மொழி அது உலகக்கிண்ண இறுதியாட்டத்திற்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்து விட்டது பாருங்கள்.

பரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆட்டம் 'சப்'பென்று போய்விட்டது. ஆஸ்திரேலியா அணிக்கு வெற்றிவாய்ப்பு 51சதவீதம் இருந்தது. எனினும் ஆட்டத்தின் முதற்பாதி முடிவடைய முன்னரே அது நூறு சதவீதமாக அதிகரித்து விட்டிருந்தது. ஓர் உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் ஆடுவது போலவா பாகிஸ்தானியர்கள் ஆடினார்கள்?

விளைவு?



திராவிட்

ஓர் உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற சாதனையை(!) அவர்கள் படைத்தனர். அதனால் ஏற்பட்ட ரசிகர்களின் மனக்குறையைத் தீர்த்து வைப்பதற்காகவோ என்னவோ ஆஸி வீரர் அடம் கில்கிறிஸ்ற் அதிவேகமாக ஓட்டங்களைக் குவித்தார்.

பாகிஸ்தானிய அணி 39 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து பெற்ற 132 என்ற எண்ணிக்கையை ஆஸ்திரேலியா அணி வெறும் 20.1 பந்துப்பரிமாற்றங்களில் இரண்டே இரண்டு இலக்குகளை இழந்து கடந்தது.

கில்கிறிஸ்ற் 54 ஓட்டங்களையும் மார்க் வோ ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களையும் பெற்றனர். பாகிஸ்தான் தரப்பில் இஜாஸ் அஹமட் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தானியர் சுழல் பந்து வீச்சை சிறப்பாக எதிர் கொண்டு ஆடுவார்கள் என்ற கருத்தைத் தவிடுபொடியாக்குவது போல் ஷேன் வோண் நான்கு இலக்குகளை வீழ்த்தினார்; ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

மொத்தத்தில் பாகிஸ்தானுக்கு படுதோல்வி; ரசிகர்களுக்கு மனவருத்தம்; விளம்பர நிறுவனங்களுக்கு இலாபம். - என்பதாக உலகக்கிண்ணப் போட்டிகள் முடிவடைந்துவிட்டன.



உலகக் கிண்ணத்துடன் ஆஸி அணித்தலைவர்

இந்த உலகக் கிண்ணத் தொடரில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகளும் 'ஏற்பட்ட வேதனைகளும் பற்பல. அவைபற்றி இனிப் பார்ப்போமே!

## சாதனைகளும் வேதனைகளும்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற முதல் போட்டியிலே இங்கிலாந்து அணித்தலைவர் அலெக் ஸ்ருவர்ட் சதத்தைத் தவறவிட்டது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். தென்ஆபிரிக்க - இந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மேலுமிரு சதங்கள்·' தவறவிடப்பட்டன. இந்தியாவின் சௌரவ் கங்குலி(97) தன் ஏழாவது சதத்தையும் தென்னாபிரிக்காவின் ஜேக்கஸ் காலிஸ் (96) தன் ஆறாவது சதத்தையும் 'ரண் அவுட்' முறைமூலம் தவறவிட்டனர்.

சதம் அடிக்கும் வாய்ப்பு காலிஸிற்குப் பின்னர் கிடைக்கவேயில்லை. எனினும் கங்குலி இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் அற்புதமான சதமொன்றைப் பெற்றார். டான்ரனில் இலங்கைக் கெதிரான ஆட்டத்தில் ஆரம்பத் துடுப்பாளராகக் களமிறங்கிய கங்குலி இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 183 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கரி கேர்ஸ்ரனின் உலகக் கிண்ணச் சாதனையான 188 ஓட்டங்களை முறியடிப்பதற்காகச் 'சிக்ஸ்' அடிக்க முயன்றபோது பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

கங்குலி கேர்ஸ்ரனின் சாதனையை முறியடிக்காத போதும் கபிலின் 175 ஓட்டங்களைத் தாண்டி உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் அதிக ஓட்டங்களைப் பெற்ற இந்திய வீரரானார். மேலும் ஒருநாள் போட்டிகளிலே ஓர் இந்தியர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையும் இதுதான்.

கங்குலி சதம் பெற்ற அதே ஆட்டத்தில் ராகுல் திராவிட்டும் சதம்(145) பெற்றார். இதன் மூலம் திராவிட் அதிக ஓட்டங்களைப் பெற்ற இந்தியர் வரிசையில் நான்காம் இடத்தைப் பிடித்துக் கொண்டார். ( விவரம் அட்டவணையில்)

## இணைப்பாட்ட சாதனைகள்

திராவிட் - கங்குலி இணை திராவிட் 'ரண் அவுட்'; ஆகும் வரை இரண்டாவது இலக்கு இணைப்பாட்டமாக 318 ஓட்டங்களைப் பெற்றது. ஒருநாள் போட்டிகளின் வரலாற்றிலே ஓர் இணைப்பாட்டம் முந்நூறைத் தாண்டியது இதுவே முதற்றடவையாகும். இதற்கு முந்தைய சாதனை மொஹமட் அஸாருதீன் - அஜய் ஜடேஜா இணை 1998 ஏப்ரலில் சிம்பாப்வேக்கு எதிராக முறியடிக்கப்படாத நான்காவது இலக்கு இணைப்பாட்டமாக பெற்ற 275 ஓட்டங்களேயாகும்.

### ஒரு தொடரில் அதிக ஓட்டங்கள்

| ஓட்டங்கள் | வீரர் | நாடு | தொடர் | இனிங்ஸ் | சராசரி |
|---|---|---|---|---|---|
| 523 | டெண்டுல்கர் | இந்தியா | 1996 | 7 | 87.16 |
| 484 | மார்க் | ஆஸ்திரேலியா | 1996 | 7 | 80.66 |
| 471 | கூச் | இங்கிலாந்து | 1987 | 8 | 58.87 |
| 461 | திராவிட் | இந்தியா | 1999 | 8 | 65.85 |
| 456 | குறோ | நியூசிலாந்து | 1992 | 9 | 114.00 |
| 448 | அரவிந்தா | இலங்கை | 1996 | 6 | 89.60 |
| 447 | டேவிட் பூன் | ஆஸ்திரேலியா | 1987 | 8 | 55.87 |
| 437 | மியன்டாட் | பாகிஸ்தான் | 1992 | 9 | 62.42 |
| 428 | மார்ஷ் | ஆஸ்திரேலியா | 1987 | 8 | 61.14 |
| 410 | P.கேர்ஸ்ரன் | தென்னாபிரிக்கா | 1992 | 8 | 68.33 |

மேலும் கங்குலி - திராவிட் இணை இரண்டாவது இலக்குக்கான இணைப்பாட்ட சாதனையையும் முறியடித்தது. பாகிஸ்தானின் அமீர் சொஹைல் - இன்ஸமாம் உல் ஹக் இணை 1993 - 94 தொடரில் நியூசிலாந்திற்கு எதிராக ஷார்ஜாவில் பெற்ற 263 ஓட்டங்களே முறியடிக்கப்பட்ட சாதனையாகும்.

இது தவிர, இரண்டாவது இலக்குக்கான உலகக் கிண்ணச் சாதனையான - 1975 இல் இங்கிலாந்தின் அமிஸ் - ∴பிளெச்சர் இணை இந்தியாவிற்கு எதிராகப் பெற்ற - 176 ஓட்டங்கள் என்பதுவும் முறியடிக்கப்பட்டது.

மேலும் சச்சின் டெண்டுல்கர்-திராவிட் இணை (மூன்றாவது இலக்குக்குப்) பெற்ற மாபெரும் உலகக் கிண்ண இணைப்பாட்ட சாதனையும் முறியடிக்கப்பட்டது.

டெண்டுல்கர் - திராவிட் இணையின் சாதனையும் இந்த உலகக் கிண்ணத் தொடரில் தான் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் இருவரும் கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் மூன்றாவது இலக்குக்கான முறியடிக்கப்படாத இணைப்பாட்டமாக 237 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் இதற்கு முந்திய உலகக் கிண்ணச் சாதனையான வோ சகோதரர்கள் 1996 வில்ஸ் தொடரில் கென்யாவுக்கெதிராக மூன்றாவது இலக்குப் பெற்ற 207 ஓட்டங்கள் என்பதை அவர்கள் முறியடித்திருந்தனர்.

இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு முக்கியவிடயம், ஒருநாள் துடுப்பாட்ட வரலாற்றில் ஐந்து பெரும் இணைப்பாட்டங்களுக்கு இந்திய இணைகள்தான் சொந்தக்காரர்கள். டெண்டுல்கர் - கங்குலி( முதலாவது 252), கங்குலி - திராவிட் (இரண்டாவது 318), திராவிட் - டெண்டுல்கர்( மூன்றாவது 237), அஸாருதீன் - ஜடேஜா (நான்காவது 275), அஸாருதீன் - ஜடேஜா (ஐந்தாவது) ஆகியவை தான் அந்த இணைகள்.

பிரிவு B யில் ஆஸ்திரேலியா நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தின் றொ[illegible]

கெயின்ஸ் இணை ஐந்தாவது இலக்குகான இணைப்பாட்டமாக 148 ஓட்டங்களைச் சேர்த்தது. இதற்கு முந்தைய உலகக் கிண்ணச் சாதனை சிம்பாவேயின் அண்டி ∴பிளவர் - வால்லர் இணை ஐந்தாவது உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக்கெதிராகப் பெற்ற 145 ஓட்டங்களாகும்.

நியூசிலாந்திற்கு எதிரான முதலாவது அரை இறுதியாட்டத்தில் பாகிஸ்தானின் சாயிட் அன்வர் - வாஸ்ரி இணை முதலாவது இலக்குக்கான இணைப்பாட்டமாக 194 ஓட்டங்களைக் குவித்தது. இதனால் தென்னாபிரிக்காவின் அன்ரூ ஹட்சன் - கெரி கேர்ஸ்ரன் இணை ராவல் பிண்டியில் முதலாவது இலக்குக்குப் பெற்ற 186 ஓட்டங்கள் என்ற சாதனை முறியடிக்கப்பட்டது.

## துடுப்பாளர் சாதனை

இந்த உலகக் கிண்ணத் தொடரில் மொத்தமாக அதிக ஓட்டங்களை பெற்றவர் இந்திய வீரர் ராகுல் திராவிட். அவர் எட்டு ஆட்டங்களில் பங்குபற்றி இரண்டு சதங்கள், மூன்று அரைச் சதங்கள் உட்பட 461 ஓட்டங்களைப் பெற்றார். ஓர் உலகக் கிண்ணத் தொடரில் பெறப்பட்ட நான்காவது அதி கூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.(விவரம் அட்டவணையில்)

உலகக் கிண்ண ஆட்டங்களில் மொத்தமாக அதிக ஓட்டங்களைப் பெற்ற சாதனை இப்போதும் மியன்டாட் வசமே இருக்கின்றது. இம்முறை டெண்டுல்கர் அச்சாதனையை முறியடிப்பார் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. இப்போது 33 போட்டிகளில் பெற்ற 1083 ஓட்டங்களுடன் மியன்டாட் முதல் இடத்திலும் 22 போட்டிகளில் 1059 ஓட்டங்களைப் பெற்ற டெண்டுல்கர் இரண்டாம் இடத்திலும் 23 ஆட்டங்களில் பெற்ற 1013 ஓட்டங்களுடன் விவியன் ரிச்சட்ஸ் மூன்றாமிடத்திலும் இருக்கின்றனர்.

### கூடிய ஓட்ட எண்ணிக்கைகள்(இந்தியா)

| ஓட்டங்கள் | வீரர் | எதிராக | ஆண்டு |
|---|---|---|---|
| 183 | சௌரவ் கங்குலி | இலங்கை | 1999 |
| 175* | கபில் தேவ் | சிம்பாப்வே | 1983 |
| 153* | அஸாருதீன் | சிம்பாப்வே | 1998 |
| 145 | ராகுல் திராவிட் | இலங்கை | 1999 |
| 142 | சச்சின் டெண்டுல்கர் | ஆஸ்திரேலியா | 1998 |
| 141 | சச்சின் டெண்டுல்கர் | ஆஸ்திரேலியா | 1998 |
| 140* | சச்சின் டெண்டுல்கர் | கென்யா | 1999 |
| 137 | சச்சின் டெண்டுல்கர் | இலங்கை | 1996 |
| 134* | நவ்ஜோற் சித்து | இங்கிலாந்து | 1993 |
| 134 | சச்சின் டெண்டுல்கர் | ஆஸ்திரேலியா | 1998 |
| 130* | சௌரவ் கங்குலி | இலங்கை | 1999 |
| 128 | சச்சின் டெண்டுல்கர் | இலங்கை | 1998 |
| 127* | சச்சின் டெண்டுல்கர் | கென்யா | 1996 |
| 127* | சச்சின் டெண்டுல்கர் | சிம்பாப்வே | 1998 |

பாகிஸ்தானுக்கெதிரான இறுதிப் போட்டியில் மார்க் வோ உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற நான்காவது வீரரானார். மார்க் வோ 22 போட்டிகளில் 1004 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரது சகோதரர் ஸ்ரீவ் வோ 33 போட்டிகளில் 978 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இலங்கையின் அர்ஜுனா ரணதுங்கா 30 போட்டிகளில் 969 ஓட்டங்களையும் இங்கிலாந்தின் கிரஹாம் கூச் 21 போட்டிகளில் 897 ஓட்டங்களையும் நியூசிலாந்தின் மாட்டின் குறோ 21 போட்டிகளில் 880 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

டெண்டுல்கர் கென்யாவுக்கெதிராக ஆட்டமிழக்காமல் பெற்ற 140 ஓட்டங்கள் அவர் ஒரு நாள் போட்டிகளில் பெற்ற 22ஆவது மற்றும் கென்யாவுக்கு எதிராகப் பெற்ற மூன்றாவது சதமாகும். அந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற டெண்டுல்கருக்கு வெறும் 101 பந்து வீச்சுக்களே தேவைப்பட்டன. ஒரு கட்டத்தில் டெண்டுல்கருக்கு உலகக் கிண்ணப் போட்டிகளின் அதிக வேகமான சதத்தைப் பெறும் வாய்ப்பு இருந்த போதும் அவர் 84 பந்து வீச்சுக்களிலேயே சதத்தை எட்டினார். மேற்கிந்திய தீவுகளின் கிளைவ் லொயிட் 82 பந்து வீச்சுக்களில் சதம் அடித்தமையே உலகக் கிண்ணச் சாதனையாகும்.

டெண்டுல்கர் பாகிஸ்தானுக்கு எதிரான சிறப்புச்சுற்று ஆட்டத்தின் போது ஒருநாள் போட்டிகளில் எண்ணாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்த நான்காவது துடுப்பாளரானார். அஸாருதீன், ஹெயின்ஸ், அரவிந்த டி சில்வா ஆகியோரே எண்ணாயிரம் ஓட்டங்களைப் பெற்ற ஏனையவர்கள்.

இந்திய அணித் தலைவர் அஸாருதீன் இங்கிலாந்திற்கு எதிரான தெரிவுப்போட்டியில் ஒன்பதாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்த முதல் வீரரானார். அது அஸார் பங்கு பற்றிய 320 ஆவது ஒருநாள் போட்டியென்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாகிஸ்தானுக்கு எதிராக அரைச்சதம் அடித்ததன் மூலம் அஸார், டெஸ்மண்ட் ஹெயின்ஸின் 57 அரைச் சதங்கள் என்ற சாதனையைச் சமன் செய்தார்.

மார்க் வோ சிம்பாப்வேக்கு எதிராகப் பெற்ற சதம் (104) அவரது பன்னிரண்டாவது சதமாகும். மேலும் அது உலகக் கிண்ணப் போட்டிகளில் அவர் பெற்ற நான்காவது சதமுமாகும். இதன் மூலம் மார்க் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக சதங்களைப் பெற்றவரானார். ரிச்சட்ஸ், ரமீஸ் ராஜா, டெண்டுல்கர் ஆகியோர் தலா மூன்று சதங்களைப் பெற்றுள்ளனர்.

வோ இரட்டையர்களில் மூத்தவரான ஸ்ரீவ் இந்தியாவுக்கு எதிரான முதற் சிறப்புச் சுற்று ஆட்டத்தில் ஆறாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். இதன்மூலம் ஆறாயிரம் ஓட்டங்களைப் பெற்ற பதினாறாவது துடுப்பாளர் மற்றும் நான்காவது ஆஸ்திரேலியரானார்.

இதற்கு முன் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான தெரிவுப் போட்டியில் இஜாஸ் அஹமட்டும் அவரைத் தொடர்ந்து நியூசிலாந்திற்கு எதிரான தெரிவுப்போட்டியில் இன்ஸமாம் உல் ஹக்கும் ஆறாயிரம் ஓட்டங்களைக் கடந்தமை குறிப்பிடத்தக்கது. மியன்டாட், மலிக், அன்வர் ஆகியோர் ஆறாயிரம் ஓட்டங்களைக் கடந்த ஏனைய பாகிஸ்தானியர்கள்.

நியூசிலாந்திற்கு எதிரான சிறப்புச் சுற்று ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் கெரி கேர்ஸ்ரன் (82) நாலாயிரம் ஓட்டங்களைப் பெற்ற இரண்டாவது தென்னாபிரிக்கரானார். இச்



கங்குலி

சாதனையை முதலில் எட்டிய அணித்தலைவர் ஹான்சி குறோன்ஜே இதுவரை 4923 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

கேர்ஸ்ரன் நாலாயிரம் ஓட்டங்களைத் தாண்டிய ஆட்டத்தில் நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் ∴பிளெமிங் மூவாயிரம் ஓட்டங்களை எட்டினார். நியூசிலாந்தின் றொகர் ருவோஸ் ஆஸ்திரேலியாவிற்கெதிரான தெரிவுப்




இறுதியாட்ட நாயகன் ஷேன் வோண்

போட்டியின் போது ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டினார்.

ஆஸ்திரேலியா இலக்குக் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ற் சிப்பாப்வேக்கு எதிரான சிறப்புச

(XVஆம் பக்கம் பார்க்க)

## கில்லாடி கிட்டு




'கிரிக்கெட் வீரர்கள் வருவதாக இருந்த விமானத்தில் முக்காடு போட்ட பெண்கள் வருகிறார்களே?'

'கிரிக்கெட் வீரர்கள்தான் அவர்கள். ரசிகர்களுக்குப் பயந்து, மாறு வேடத்தில் வருகிறார்கள்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யுத்தம் எது வரைக்கும்?

4

1984 முதல் 1994 வரை ஜேர்மனிய அதிபராக இருந்த Richard Von Weizsacker இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மனிய இராணுவத்தில் இருந்தவர்தான்.

1938இல் தனது பதினேழு வயதில் பேர்லின் வீதிகளில் சைக்கிளில் திரியும்போது கண்ட கசப்பான காட்சிகள் அடுத்த வருடம் யுத்தமாக வெடிக்கும் எனத்தான அப்போது நினைக்கவில்லை என்றார் அவர்.

யூதர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அப்போது தொடங்கியிருந்தன.



அவர்களது கடைகள் சூறையாடப்பட்டன. எவருக்கும் தட்டிக்கேட்கத் துணிவிருக்கவில்லை. பின்னணியில் அரசு நிற்பது தெளிவாகத்தெரிந்தது. காலம் கெட்டுப் போச்சு என நினைப்பதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

அடுத்த வருடம் 1939 செப்டெம்பர் முதலாம் திகதி யுத்தம் வெடித்ததோ அவரது வீட்டுக்கு சில நூறு மீற்றர் தொலைவில்தான். ஜேர்மன், போலந்து எல்லை அருகேதான் இருந்தது அவரது வீடு.

இரண்டாம் நாளே அவரது சகோதரனை யுத்தம் பலி கொண்டு விட்டது. அந்த இடத்திலேயே சகோதரனைப் புதைத்துவிட்டுச் சமரினைத் தொடர்ந்தார் இவர். போலந்திலும் பின்னர் ரஷ்யாவிலும் போரிட்டார். 1945இல் காயமுற்று தனது சகோதரியின் தயவில் ஓய்வு எடுத்ததாகக் கூறுகின்றார்.

1945 மே மாதம் சோவியத் கரங்களில் பேர்லின் விழும் வரை அங்கே யுத்தம் ஓயவில்லை.

* * *

லண்டனில் குண்டுகள் விழுந்து வெடித்த கொடூரம் பற்றி 1940இல் அங்கிருந்தவர்கள் கூறும் கதைகளோ ஏராளாம். விமானக் குண்டு வீச்சின் கொடூரங்கள் பற்றி எமக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஓரிரண்டு விமானங்கள் வந்து வட்டமடித்து ஊரையே கலக்கிக் குழப்பிவிட்டுப் போகும் நினைவுகள் மறப்பதற்கில்லை.

லண்டனில் 1940செப்டெம்பர் 7வரை விமானக் குண்டு வீச்சுக்கள் பத்திரிகைச் செய்திகளாகவே இருந்தன. விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் வான் நோக்கித் தயாராகவே இருந்தன. வாழ்க்கை சகஜமாகவே இருந்தது.

அன்று மாலை 5.00 மணி இருக்கும். அபாய அறிவிப்பு சங்குகள் (Siren) முழங்க மக்கள் ஓடி ஒழிக்கும் வேளை, வானில் குண்டு வீச்சு விமானங்கள் கூட்டமாகத் தெரிந்தன. காலநிலைச் சுவாத்தியம் தேடி இடம்பெயரும் பறவைகள்போல "V"வடிவில் மிகவும் உயரவே அவை தென்பட்டன.

அவற்றை நோக்கி விமான எதிர்ப்புப் பீரங்கிகள் போட்ட முழக்கம் ஊரை கலங்கடித்ததே தவிர விமானங்களை அவற்றால் கலவரப்படுத்த ஏனோ இயலவில்லை.

**மு.சிவநேசன்**

குண்டுகள் பேரிரைச்சலுடன விழுந்து வெடித்தன. அதிர்ச்சி தாங்க இயலவில்லை. வீதிகளில் பாரியகுழிகள் ஏற்பட்டன. தண்ணீர்க் குழாய்கள் உடைந்து நீரைப் பீய்ச்சின. சமையல் வாயுக்குழாய்த் தொகுதிகள் சிதைந்து தீப்பற்றிக் கொண்டன. மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புக்கள் அறுந்து சிதைந்தன.

எரிகுண்டுகள் விழுந்த இடங்களில் தீ நாக்குகள் கோரமாய் நடமாடின. சிதைவுகளிடையே மக்கள் சிதறிப் போயினர். எங்கும் புகைமண்டலம். 57தொடர் இரவுகள் லண்டனில் குண்டு மாரி பொழிந்தன ஜேர்மன் விமானங்கள்.

பிரிட்டன் விமானப்படை கொண்டு அவற்றை விரட்டும் வரை நிலைமை மோசமாகவே இருந்தது. இரவிலும் - நிலவிலும் விமானங்கள் வரும். அவற்றுக்கு நிலவில் ஜொலிக்கும் தேம்ஸ் நதி இடம் காட்டும். குண்டுகள் மழை போலப் பொழியப்படும். மக்கள் சுரங்க ரயில் பாதைகளில் இரவினைக் கழித்தனர்.


* * *

எதிர்பாராத நேரங்களில் திடீரென இலக்குகள் தாக்கப்படும்போது ஒரு கணத்தில் நிலைமை அல்லோலகல்லோலமாகிவிடும். பசுபிக் சமுத்திரத்தில் - வட அமெரிக்காவைக் காத்து நிற்கும் ஹாவாய் தீவுகளின் - பேள் துறைமுகம் 1941 டிசம்பர் 7ஆம் திகதி ஞாயிறு காலை ஜப்பானின் கடுமையான விமானத் தாக்குதலுக்கு இலக்கானது. ஏழு பாரிய யுத்தக் கப்பல்கள் அங்கே நங்கூரமிட்டு நின்றிருந்தன. அவற்றிலோ ஆயுதக் களஞ்சியங்கள்.

எங்கோ யுத்தம் நடக்க எங்கோ வைத்து அமெரிக்க கடற்படை தாக்கப்படுகிறது. இது அமெரிக்காவை வலிந்து யுத்தத்துக்கு இழுக்கும் முயற்சி ஆகிவிட்டது.

இயல்பாக குளிப்பு, முழுக்கு, சவரம் என்றும் காலைக் கடன்களில் இருந்த பலருக்கும் உடுப்பைத் தேடிப் போட்டுக் கொள்ளகூட அவகாசம் கிட்டவில்லை. விமானங்கள் சன்னமழை பொழிந்த வண்ணம் - கப்பல்களை இடித்து வெடிக்கும் Torpedo ரக இடிகுண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தன.

திடீரென அதிரடி உக்கிரமடைந்ததால் கட்டளைப் பீடங்கள் செயலிழந்தன. கட்டுப்பாடுகள் குலைந்தன. கப்பல்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சில தீப்பற்றிக் கொண்டன. பல



உருக்குலைந்து அமிழத் தொடங்கின. தரைதட்டின.அல்லது புரண்டு போயின.

பலரும் காயமடைந்தனர். அதிகாரிகள் பொறியியலாளர்கள் பாதிக்கப்பட்டதால் எதையுமே செயற்படுத்த இயலவில்லை. கப்டன் மேவின் கொல்லப்பட்டான். தப்பியவர்களே பேள் துறைமுகத்தில் மீட்புப் பணியில் ஈடுபடவேண்டிய நிலைமை. கடலில் எண்ணெய்ப் படலம் மிதக்கத் தொடங்கியது. கடல் மட்டத்துக்கு மேல் தெரியும் பகுதிகள் எரிந்து கொண்டிருந்தன.

இரும்புகளே இப்படி உருக்குலைந்தால் - மனிதர்களின் கதியைச் சொல்லத் தேவையில்லை. கரைக்கு வந்து சேர்ந்தவர்களைக் கவனிக்கச் சிவிலியன் பெண்கள்தான் துணிந்து கூடியிருந்தனர்.

சேறும் தண்ணீரும் இரத்தமும் எண்ணெய் எரிவும் கலந்த கூழ், காயங்களை அப்பி இருக்கப் பலரும் வேதனையால் தவித்த காட்சியை ஜப்பானிய விமானிகள் தாழப் பறந்து வந்து ரசித்திருப்பர். எதிர்த்தாக்குதல் என்ற நிலைமைக்கே இடமில்லை.

* * *

ஜோர்ஜ் புஷ் ஒரு விமானி. அவனது விமானம் 1944 செப்டெம்பர் 2இல் சுடப்பட்டது. அன்றைய பயங்கரத்தை அவன் மறுநாள் எழுதிய கடிதம் வெளிப்படுத்தி இருந்தது.

கலகலப்பாக உதவியாளர்களுடன் தயாராகிப் புறப்பட்டு குண்டு வீச்சில் ஈடுபட்டவேளை விமானம் தாக்குதலுக்கு இலக்கானது. அப்போது அவனுக்கு வயது 20.

நடந்தது இதுதான். திடீரெனவிமானி அறை முழுவதும் புகைமூட்டம் பரவிவிட்டது. விமானத்தின் பின்புறம் இருந்தவர்களைத் தொடர்பு கொள்ள இயலவில்லை. அவர்கள் இருவரையும் பரசூட்களைப் போட்டுக் கொள்ளும்படி உத்தரவிட்டான் புஷ். பதில் ஏதும் கிட்டவில்லை.

இவனது வானொலி வேலை செய்தாலும் தகவல் போய்ச்சேரவில்லை. அவர்கள் காயப்பட்டார்களா? இறந்துவிட்டார்களா? அவர்களது வானொலி பழுதடைந்துவிட்டதா? அல்லது குதித்து விட்டார்களா? - என்பது விளங்கவில்லை.

விமானம் தரையில விழுந்து நொருங்குவதைத் தவிர்க்க அவன் அதைக் கடலை நோக்கித் திசை திருப்பினான்.

மற்றவர்களை வெளியேறும்படியும், தான் வெளியேற ஆயத்தமாவதாகவும் அவன் உத்தவிட்டும் பதில் இல்லை. அவன் விமானி அறையை விட்டு வெளிப்படும் போது விமானத்தின் சிறகுகள் தீப்பிடித்து எரிவதைக் கண்டான்.


விமானத்தின் எப்பகுதி தாக்கப்பட்டது என்பது புரியவில்லை .அதை எல்லாம் ஆராய அவகாசமும் இருக்கவில்லை. அவர்களுக்கு நேர்ந்தது தெரியவில்லை என்பதுதான் சிக்கலாக இருந்தது.

விமானத்தில் இருந்து குதிக்கும் போது அசைந்து கொண்டிருக்கும் அதனது வால்ப்பகுதி இவனது தலையைப் பதம் பார்த்தது. பரசூட்டில் இறங்கும் போதும் கடலில் மிதவையில் மிதக்கும் போதும் அவர்கள் இருவரும் தென்படாத கவலை அவனுக்கு.

தட்டந்தனியனாய் கடலில் விடப்பட்டபோது கண்ணீர்தான் புட்டுக் கொண்டு வந்தது. அவர்களது மரணத்துக்கு தான்தான் பொறுப்பாளி எனக் கலங்கினான் புஷ்.

மீட்கப்பட்டபோதும் அவனுக்கு அவர்களைப் பற்றிய வேதனைதான் மனதை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் உறக்கமின்றிப் புரண்டு கொண்டே இருந்தான்.

அவ்விருவரில் ஒருவன் பரசூட்டில் குதித்ததாக அவன் பின்னர் அறிந்தான். பறப்புச் சாதனைக்கான விருதுகளும்கூட ஜோர்ஜ் புஷ்ஷிற்கு கிடைத்திருந்தன. (தொடரும்)



# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்



ஏணஸ்ற் ஹெமிங்வே

7

செக்மொழி எழுத்தாளரான ஜாரொஸ்லாவ் ஹாஸெக் எழுதிய 'நல்ல சிப்பாய் ஷ்வாய்க்' என்ற நீண்ட நாவல், முதலாம் உலகப்போர் பின்னணியை வைத்தெழுந்தது. நகைச்சுவை மிளிரும் செம்மை இலக்கியம் இது. போரின் கொடுமை பற்றி அதிகம் கூறாவிட்டாலும், அதிகாரத்துவத்துக்கும் அதினின்று கிளைவிடும் ஊழலுக்குமெதிராக, ஒரு சாமானியன் எதிர்த்துத் தாக்குப்பிடிப்பதை ஹாஸக அதில் நன்கு சித்திரித்தார். ஆசிரியர் திட்டமிட்டிருந்தபடி படைப்பை முழுமையாக்க முதலே அவர் மரணித்து விட்டாலும், முக்கால் பங்கே முடிந்த நிலையிலும், அந்நாவல் இலக்கியத் தரம் குன்றாது, கனதியும் அழகும் கொண்டு மிளிர்ந்தது.

போரின் கொடுமையைக் கூறும் இன்னொரு அற்புதப் படைப்பு, 'ஆயுதங்களுக்குப் பிரியாவிடை'. உலகம் நன்கறிந்த அமெரிக்க எழுத்தாளரான ஏணஸ்ற் ஹெமிங்வே எழுதிய இந்த ஆங்கில நாவல், ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்பு, தமிழில் 'போரே நீ போ' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியானது. இந்த நூற்றாண்டின் மகத்தான இலக்கியங்களுள் ஒன்றெனப் போற்றப்படும் இப்படைப்பு, மேலெழுந்த வாரியாக ஒரு வெறும் காதல்கதையாகப் படலாம். ஆனால், போர்பற்றிக் கூறும் பெரும்படைப்பாகவே அது கணிப்புப் பெறுகிறது. சாதாரண நீளமே கொண்ட இந்நாவலில் விவரங்கள் பற்றி வீணே விஸ்தரிக்காமல், அவற்றைத் தொடடும், கோடிகாட்டியும் செல்வதால் மட்டுமே போரின் குரூரங்களைக் காட்டுவதில் ஆசிரியர் வெற்றி பெறுகிறார். இன்னொரு விதத்தில் சொல்வதானால், போர் ஒரு பாத்திரமாகவே வருகிறது.

**சாந்தன்**

முதலாம் உலகப் போரில் நேரடிப் பங்கு பெற்றவர் ஹெமிங்வே. அந்த அனுபவ மெய்ம்மையானது முழுக் கலை வடிவம் பெற்றுப் பரிணமிக்கப் பத்தாண்டுகள் பிடித்தன. இதேபோல, பின்னர், 30களில் இடம்பெற்ற ஸ்பானிய உள்நாட்டுப் போரின்போது ஹொமிங்வே போர்முனை நிருபராகப் பணிபுரிந்த அனுபவங்களின்று இன்னொரு குறிப்பிடத்தக்க நாவல் பிறந்தது. அது 'யாருக்காக சாவுமணி ஒலிக்கிறது?' இதுவும் போர் நாவலே

## சில குறிப்புகள்

யெனினும், கூறும் சேதி சற்று வித்தியாசமானது: விடுதலைவாதிகளுக்கிடையிலான ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் இது முன்மொழிந்தது.

ஹெமிங்வே பற்றிக் கூறுகையில் அவரது 'கிழவனும் கடலும்' பற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியாது. அவருக்கு நோபல்பரிசு பெற்றுத்தந்த நாவல் அது. நாவலா? நீண்ட சிறுகதை என்றாலும் பொருந்தும். தெளிந்த, எளியநடையில் நகரும் கதையில் நாலே பாத்திரங்கள்; ஒரு சிறுவன், ஒருகிழவன், ஒருகடல், ஒரு மீன் இவர்களைவிட, சில சுறாக்களும். இப்பாத்திரங்கள் யாவும் யதார்த்தமானவை. கதை நகர்வும் அப்படியே. எனினும் இவற்றுக்குப் பல்வேறு பொருளுண்டு. பார்வையின் கோணத்தையும் ஆழத்தையும் பொறுத்து, தரிசனங்கள் மாறுபடும்.

மேதைமை நிறைந்த நாவலாசிரியராக மட்டுமின்றி, மிகச்சிறந்த சிறுகதை ஆசிரியராகவும் தம்மை நிறுவிக் கொண்டவர் ஹொமிங்வே. பல்வேறு பட்ட ஆர்வங்களும், அனுபவங்களும் அவரது கலையாற்றலுடன் இணைந்து தொகையிலும், தரத்திலும் மிக்க படைப்புக்களைத் தந்தன. கதைகூறும் முறை, வசன நடை, உரையாடல்- இவற்றில் [illegible] தனிப் பாணியை அவர் உருவாக்கினார்.

முதலாம் உலகப்போரை வைத்து எவ்வாறு ஹெமிங்வே ஒரு சிறந்த இலக்கியத்தை உலகுக்கு அளித்தாரோ, அதேபோல இரண்டாம் உலகப்போரை வைத்தும் இன்னொரு அமெரிக்கர், ஒருசிறந்த நாவலைப் படைத்தார். அவர் நோமன் மெய்லர். நாவலின்பெயர் 'நிர்வாணிகளும் இறந்தோரும்' மெய்லரும், போரில் பங்கு பெற்றவர். பசி·.பிக் கடலில் அனோபொப்பி என்கிற கற்பனைத் தீவை உருவாக்கி அவர் கதையை நகர்த்தினாலும், நாவல் மிக யதார்த்தமானது. மெய்லரும் நிறைய எழுதினார். 'மான் பூங்கா' நாவல் மற்றும் 'எனக்கான விளம்பரங்கள்' என்ற தலைப்பிலான சிறுகதைகள், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதி, தமக்கென்றொரு ஸ்தானத்தைத் தேடிக் கொண்ட மெய்லர், மிகச் சமீபத்தில் தம்மை ஒரு சர்ச்சைக்குட்படுத்திக் கொண்டுள்ளாரென அறிய முடிகிறது. எவ்வாறு 'சாத்தானின் வேதங்கள்' எழுதி சல்மான் ருஷ்டி முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தினாரோ, அவ்வாறே மெய்லரும் தமது முதிர்ந்த வயதில் இரண்டாண்டுகளுக்கு முன் எழுதிய ஒருநாவல் மூலம் கிறிஸ்தவர்களின் மனதை நோகச் செய்துள்ளார் என்று தெரிகிறது.


இந்த நூற்றாண்டின் அமெரிக்க இலக்கியம் என்று பார்க்கையில், ஹெமிங்வேக்கு அடுத்தபடியாக குறிப்பிடப்பட வேண்டியவர் ஜோன் ஸ்ரீன்பெக். தம்முடைய 'கோபக்கனிகள்' நாவல் மூலம் கவனத்தை ஈர்த்த ஸ்ரீன்பெக், தொடர்ந்தும் சிறப்பு மிக்க பல படைப்புகளைத் தந்தவர். முப்பதுகளில் இடம்பெற்ற அமெரிக்காவின் பொருளாதார மந்தநிலையின் நெருக்கடிகளைப் பதிவு செய்த ஒரு, வரலாற்று ஆவணமாக 'கோபக்கனிகள்' புகழ்பெற்றது. பலவந்தமான இடப்பெயர்வுக்கும் எங்குமே எதுவுமில்லாத நிலைக்கும் ஆளாகிற மக்களின் கதை இது.

ஸ்ரீன்பெக் நிறைய எழுதினாலும் தரத்தையும் பேணிக்கொண்ட ஒருவர். 62இல் நோபல்பரிசு பெற்றார். அவருடைய ஏனைய படைப்புகளுள் 'முத்து' என்ற குறுநாவல் அற்புதமானது. 'கடல்முத்து' என்ற பெயரில் இது தமிழிலும் பின்னர் வெளியாயிற்று. ஏழை மீனவன் ஒருவனுக்கு கிடைக்கின்ற பெறுமதி வாய்ந்த முத்தொன்றினால் அவன் படுகிற அல்லல்கள்: அதன் பயனாய் அவன் இருந்தவற்றையும் - கடைசியில் அந்த முத்தையும் கூட - இழக்க வேண்டி வருகிற நிலை. இவற்றை அந்தக் குறுநாவல் கூறிற்று. ஆனால் இதனூடாகத் தெரிகிற அர்த்தங்கள் வேறு. 'முத்து' கூட குறியீட்டுப் படைப்புத்தான். ஒரு விதத்தில் 'கிழவனும் கடலும்' நாவலுடன் ஒப்பிட வேண்டியது அது.

இந்த நூற்றாண்டின் ஏனைய அமெரிக்க இலக்கிய மேதைகள் எனும் போது வில்லியம் ·.போக்னர், ஸோல் பெல்லோ, ஓஹரா, ஜோன் அப்டைக் ஆகியோர் பெயர்களை அவசியம் குறிப்பிடவே வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ⑫ ஏமாற்ற இருள்

## செங்கை ஆழியான்

கடற்கரை வீதியில் மெதுவாக நடந்து கொண்டிருக்கும் லூசியனின் மனதில் குழப்பமான சிந்தனைகள் ஆக்கிரமித்திருந்தன. காவற்றுறையினர் அவனை விசாரித்து எச்சரிக்கை செய்துவிட்டு அனுப்பிவிட்டனர். லூசியனை பங்கரில் இடவில்லையென்பதில் தரகியர் செல்லையாவுக்கு மனத் தாங்கல்தான்.

"இனிமேல் ஒரு சோலிக்கும் பேரகக்கூடாது. செல்லையாண்ணை நீங்கள் அழகம்மா வீட்டுப்பக்கம்



போகக்கூடாது. லூசியனும் அப்படித் தான். கிராமத்தில் வீண்சண்டை சச்சரவை ஏற்படுத்தக்கூடாது. ஏதாவது நடந்தால் இரண்டுபேரையும் உள்ளுக்க போட்டிடுவம்.." காவற்றுறையில் ஒரு பதினெட்டு வயது இளைஞன் எச்சரித்து அனுப்பிவிட்டான்.

வெளியில் வரும்போது செல்லைய்யா, "உன்னை நான் பார்க்கிற இடத்தில பார்த்துக் கொள்கிறன்" என்று லூசியனை எச்சரித்தான். தரகியரின் எச்சரிக்கையை அவன் பரவாய்ப்பண்ணவில்லை. ஆனால் அவனால் அழகம்மாவுக்குத தொடர்ந்து பிரச்சினைகள் உருவாகலாம் என அவன் பயந்தான்.

ஆனைக்கோட்டைக்கு ஒரு அலுவலாகப் போய்விட்டு வரும்போது அழகம்மா குடிசையில் அவலக் குரல் கேட்டது. சைக்கிளை வீதியில் போட்டுவிட்டு உள்ளே ஓடிச்சென்றான். இப்படிச் செல்லையா அவளைக் கரங்களில் பற்றிப் பலாத்காரம் செய்யும் நிலையில் நிற்பானென லூசியன் எதிர்பார்க்கவில்லை. எட்டிப்பிடித்து அறைந்தபோது செல்லையா நல்ல வெறியில் இருந்தான். ஓர்அறையோடு வெறி முறிந்துவிட்டது. அப்பொழுது தான் அவனுக்கு நடந்தது புரிந்தது.

செல்லையாவின் வாய் மிகக் கூடாது. அதனால் லூசியனிடம் நன்றாக அறைவாங்கிக் கொண்டான். லூசியன் அவனை அப்படியே கட்டாகத் தூக்கி வந்து கடற்கரை வீதியில் எறிந்துவிட்டான். மாநகரசபைக் குப்பைக்குள் செல்லையா கிடந்தான்.

இப்பொழுது நினைத்தாலும் தானா அப்படி அவனைத் தாக்கி உதைத்துத் தூக்கி வெளியில் எறிந்தது என்பது லூசியனுக்கு வியப்பாக வேயிருக்கின்றது.

அழகம்மா அவனைப் பார்த்து விம்மிவிம்மி அழுதாள். அழுகைக் கிடையே "பாவி என்னிடம் வந்து இப்படி நடந்திட்டான். என்னைத் தன்ர வைப்பாக இருக்கட்டாம். பார்கிறானாம். நான் மறுத்தன். விடமாட்டன் எண்டு..." கூறினாள்.

"அழாதை அழகம்மா..அவன் இனி வரமாட்டான்."

"அவன் வருவான். இனி நான் இங்க வாழமுடியாது. என்ர பிள்ளையளுக்கும் எனக்கும் சாகிறதைத் தவிர வேறு மார்க்கமிருப்பதாகத் தெரியவில்லை. என்னால உங்களுக்கும் வீண் அவமானம். உங்களோட சேர்த்து வைச்சுப் பேசுறான். 'நீ சைவம். வேதக்காரனோட உனக்கென்ன தொடுப்பு?' எண்டு கேக்கிறான். என்ர மனிசன் செத்த பிறகு எனக்கு அவங்கள்தான் சொந்தம் பந்தம் எல்லாம். அப்பவெல்லாம் நீங்க எங்க போனியள்? என்டன்." அவள் குமுறினாள்.

மரியாத்தை வந்ததும் லூசியன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். அதற்குள் கதை வேகமாகப் பரவிவிட்டது. வதந்திகள் சிறகடித்தன.

லூசியனின் மனைவி றோசம்மா அவனிடம் நடந்து கொண்ட முறை அவனுக்கு இப்பவும் நம்ப முடியாமல் இருக்கிறது.

"ஏன் செல்லையாவைக் கைநீட்டி அடிச்சியள்? சும்மா விலக்குப் பிடிச்சு விட்டிருக்கலாமே? அல்லது பேசி விட்டிருக்கலாமே? இரண்டு பகுதிகளுக்கும் இன்டயில் வெட்டுக்குத் தெல்லே இதால வரப்போகுது. மூன்று வரியத்துக்கு முதல் இப்படி இரண்டு பகுதியும் மோதிக் கொண்டதை மறந்திட்டியள். இரண்டு பக்கத்திலும் ஒவ்வொருவர் சரிந்ததும்தான் கலவரம் அடங்கியது. இப்ப உங்களால மீண்டும் வந்திட்டால்.."

அவன் மனைவியை ஆதரவாகப் பார்த்துக் கூறினான். "நானென்ன செய்ய? அந்த நேரத்தில என்ன செய்தன் எண்டு எனக்குத் தெரியவில்லை. நீ என்னைச் சந்தேகப்படுகிறியா, றோசம்?"

"சீச்சி அப்படியல்ல. உங்களை எனக்குத் தெரியாதா? நாங்கள் ஒருத்தரையொருத்தர் நல்லாப் புரிஞ்சு



கொண்டபின்னர்தான் கலியாணம் செய்தம். ஊரார் எப்படிக் கதைச்சாலும் நான் நம்பமாட்டன்.

"என்ன கதைக்கினம்...?"

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். பின்னர் சிரித்தாள்.

"நீங்கள் அழகம்மாவை வைச்சிருக்கிறியளாம்."

"விசர்க்கதையள்..."

"எனக்குத் தெரியும். கார்த்தியன் எங்களுக்காக எங்கட வள்ளத்தில வேலை செய்தான். அவன் செத்ததிலிருந்து நீங்கள் அந்தக் குடும்பத்துக்கு உதவிவாறியள். நான் எப்பவாவது தடுத்திருக்கறேனா? கேட்டிருக்கிறேனா? எனக்கு உங்களைத் தெரியும். என்னுடைய நினைப்பையும் மீறி நீங்கள் அவளை வைச்சிருந்தாற்கூட நான் அதைப் பிழையெண்டு சொல்லமாட்டன்.."

அவன் துடித்துப் போய் அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். கணவனின் தோளில் பூரிப்புடன் தலையைப் புதைத்தபடி அவள், "நானசும்மா சொன்னனான்." என்றாள் பரவசத்துடன்.

"றோசம்மா, உனக்கு நான் எப்பவும் துரோகம் செய்யமாட்டன்." என்றான் அவன்.

இப்பொழுது மேற்கு வானில் கதிர்கள் ஒடுங்குகின்ற வேளையில் வீதியில் நடக்கும்போது அழகம்மாவின் நினைவு மேலோங்கி தெரிகின்றது. அவன் மனம் சற்றுத் சலனப்படத் தொடங்கியிருந்தது. அழகம்மாவின் இளமையும் கவர்ச்சியும் தன்னை றோசம்மாவிற்குத் துரோகம் செய்ய வைத்து விடலாமென அச்சப்பட்டான்.

"அழகம்மா இனிமேல் தனிய இருக்கிறது நல்லதல்ல. கொஞ்ச வயசுதானே? அவளுக்கு ஒரு கலியாணத்தைக் கட்டி வைச்சிட்டால் பிரச்சினையில்லை. நீங்கள் ஓமெண்டால் உங்களுக்கே அவளைக் கட்டி வைச்சிடுவன். என்னால இனி உங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது.."என்று றோசம்மா கலகலவெனச் சிரித்தாள். உண்மையாகச் சொன்னாளோ பேச்சுக்குச் சொன்னாளோ தெரியவில்லை. அவன் கோபத்துடன் அவள் முதுகில் ஓங்கி அறைந்துவிட்டான்.

'நீங்கள் ஓமெண்டால் உங்களுக்கே 'அவளைக் கட்டி வைச்சிடுவன்' என்ற றோசம்மாவின் குரல் காதுகளில் ஒலிக்கிறது. பேச்சுக்காகச் சொன்னாளோ? அல்லது தன்னை ஆழம் பார்க்கிறாளோ?

திண்ணைக் கப்பைப் பிடித்தபடி அழகம்மா நின்ற அழகு அவனுக்கு நினைவு வருகின்றது. கட்டுக் குலையாத தேகம். வறுமையில் மெலிந்து கயிறுபோல இருந்தாலும் அவள் உடலில் மேடுபள்ளங்கள், வளைவுகள் அவனை இப்பொழுது போதை கொள்ள வைத்தன. அவனுக்குத் தன்னை நினைக்க வெட்கமாக விருந்தது. சீச்சி.. என்ன மனம்? வெட்கமில்லாமல் இன்னொருத்தன் மனைவியை எண்ணுகிறது? எனக்காக ஒருத்தி இருக்கும் போது..ஓ, றோசம்மா எவ்வளவு உயர்ந்த பண்பினள்? அவளுக்கு ஒருக்காலும் துரோகம் செய்யக்கூடாது.

வயதுவந்த மகனும் மகளும் இருக்கும் போது இப்படியான தப்பெண்ணம் மனதில் வந்திருக்கக் கூடாது. மகனின் வயதில் அவன் கலியாணம் கட்டியிருந்தான். படிப்பை இடைநடுவில் குழப்பிக்கொண்டு றோசம்மாவைக் கட்டிக் கொண்டான். கையில் தொழில் இருந்தது. பிரச்சினை இருக்கவில்லை.

அவன் காக்கைதீவு மட்டும் நடந்து விட்டுத் திரும்பி வந்தான். வரும்போது பொம்மைவெளி வீதியில் மரியாத்தையும் செபஸ்தியானும் நடந்து வருவது தெரிந்தது. அவர்களுக்காகக் காத்திருக்காமல் அவன் நேராக நடந்து பிள்ளையார் கோயில் முன்றலுக்கு வந்தான்.

நான் இப்பொழுதுதான் கும்பிட்டு விட்டு கோயில் வெளிமண்டபத்தில் அமர்ந்திருந்தேன். செல்லையாவின் ஆள்கள் சிலர் கோயிலடியில் நிற்பது தெரிந்தது. என்னைக் கண்டதும் அவன் என்னை நாடிவந்தான். அவன் என்னை நோக்கி வருவதைக் கண்டவுடன் நான் எழுந்து அவனை நோக்கிச் சென்றேன்.

"வா லூசியன்.. போய்க்கொண்டே கதைப்பம்.."

அவனை அவ்விடத்திலிருந்து விலத்திக் கூட்டிச்செல்ல விரும்பினேன்.

செல்லையாவின் ஆள்கள் கோயிலடியில் நின்றிருப்பதை நான் கவனித்திருந்தேன். ஒன்றும் நடக்கப் போவதில்லை சில வேளைகளில் வாய்த்தர்க்கம் ஏற்படலாம். கைகலப்பாகவும் மாறிவிடலாம். செல்லையா பகுதியில் இன்னமும் சாம்பல் பூத்த கணலாகத்தான் நிலமை இருக்கிறது.

"வீண் சோலி சுரட்டுக்குப் போகாதையடா தம்பி."

"நான் போகவில்லை அம்மான். அவன்தான்.."

"எனக்கெல்லாம் தெரியும். பெண் பிரச்சினை எதையும் செய்ய வைச்சிடும் லூசியன்."

வீட்டில் லூசியன் வெகுநேரம் எங்களுடன் பேசிக் கொண்டிருந்தான். ராகுலன் அவர்களின் பேச்சில் கலந்து கொண்டான். யோகம் வழங்கிய தேநீரைப் பருகிவிட்டு லூசியன் வீட்டுக்குப் புறப்பட்போது இருள் கவிந்திருந்தது.

"வாறன் அம்மான்.." என்று லூசியன் புறப்பட்டபோது ராகுலன், "நானும் கூட வாறன் அண்ணை.." என்றான்.

"வேண்டாம் தம்பி... நான் போயிடுவன். எனக்குப் பயமில்லை."

"அதுக்கில்லை. அப்புவையும் உங்களையும் தொடர்ந்து கோயிலடியிலிருந்து வந்த கனகரத்தினமும் தங்கராஜாவும் இன்னமும் திரும்பிப் போகவில்லை. அதனாலை நான் வாறன்."

எனக்குப் பேரனின் வார்த்தைகள் சரியாகப்பட்டன.



"வீட்டில விட்டுட்டுவா, ராகுலா. நீ போனால் அவயள் பேசாமல் நழுவி விடுவனம்."

லூசியனுக்குக் கவலையாக விருந்தது. காவற்றுறை விசாரணையுடன் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. செல்லையா அவனுக்கு அடிகாயம் ஏற்படுத்தாமல் விடமாட்டான் போலத்தான் இருக்கிறது. அவன் அவர்களுக்குப் பயப்பிடவில்லை. ஆனால் கிராமத்தில் சாதிக்கலவரமாக மாறிவிடக் கூடாது என்று பயந்தான். செல்லையாவிடம், "அண்ணை நான் அடிச்சது பிழை. மறந்திடுங்க." என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் யாருமற்ற ஒரு பெண்ணின் கரத்தைப்பற்றி இழுத்ததை நியாயப்படுத்தியதாக முடிந்துவிடும். அவன் பிழைசெய்யவில்லை. அவ்வளவுதான்.

அவர்கள் வீதியில் இறங்கி நடந்தனர். ஒழுங்கை ஒன்றின் இருளில் சில உருவங்கள் தெரிந்தன. ராகுலன் பெரிதாகக் குரல் தந்து பேசினான்.

"அண்ணை, அன்ரனி ஏ.எல். எடுத்திட்டார். இனி என்ன செய்யப் போறாராம்? தொடர்ந்து படிக்க விடுங்கோ..."

ராகுலன் குரல் மந்திரமாகச் செயற்பட்டது. ஒழுங்கை முகட்டில் நின்றவர்கள் அப்படியே விரைந்து நடந்து இருளில் மறைந்து போயினர். இயக்கப் பையன்களுக்கு இந்தச் சமூகம் எவ்வளவு மரியாதை கொடுக்கிறது என்பதை லூசியன் தெரிந்து கொண்டான்.

லூசியன் வீட்டை அடைந்த போது அவனது மனைவி அலங்காரமாக எங்கோ வெளியில் புறப்பட ஆயத்தமாக நின்றிருந்தாள். அவனைக் கண்டதும், "எங்கையப்பா, போயிட்டியள்? உங்களுக்காகத்தான் காத்திருக்கிறன். கெதியில உடுப்பை மாத்திக் கொண்டு புறப்படுங்கோ.." என்று அவசரப்படுத்தினாள்.

"ஏன்..? எங்க இப்படி அவசரமாக..கலியாணத்துக்குப் போறது மாதிரி வெளிக்கிட்டு நிக்கிறீர்.."

"கலியாணத்துக்குத்தான் அப்பா.." என்றாள் மகள் பிலோமினா. உள்ளுக்குள் இருந்து அவள் வெளியில் வந்தவள், தகப்பனுடன் ராகுலனைக் கண்டதும் உள்ளே போகப்பார்த்தாள்.

"அது ராகுலன், பிலோ..! வா தம்பி.." என்று அவனை லூசியன் உள்ளே அழைத்தான்.


"ஆருக்குக் கலியாணம்?"

"தெரியாதோ?.."

"ஆவலைத் தூண்டாமல் கெத

(XV ஆம் பக்கம் பார்க்க)

# வேப்பிலைச் சாமியார்



**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

ஊர்க்கோடியில் ஒரு பனங்கூடல் இருந்தது. அதன் எல்லையிலே பெரிய வேப்பமரம் செழித்துப் பருத்துப் பெரிதாக வளர்ந்து நின்றது. அதன் கீழே ஒரு சாமியார் வந்து தங்குவார். அவர் எங்கிருந்து வருகிறார், எங்கே சாப்பிடுகிறார், இரவில் எங்கே தங்குகின்றார் என்பதை அறிந்து கொள்வது கடினம். சிலகாலங்களில் அவர் தலைமறைவாகி விடுவார். அவரை சிதம்பரத்திலே கண்டோம், இராமேஸ்வரத்திலே கண்டோம் என்று யாத்திரை போய் வந்தவர்கள் சொல்லிக் கொள்வார்கள்.

வேப்பிலைச் சாமியார் மிகவும் சாதுவானவர். அதிகம் பேசமாட்டார். ஒரு நாளில் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசிக் கொள்வார். யாரிடமும் அவர் எவற்றையும் எதிர்பார்ப்பதில்லை. அந்த ஊரிலே சின்னாண்டி என்று ஒருவர் இருந்தார். வேப்பிலைச்சாமியாரின் பெருமைகளை சின்னாண்டி நன்கு அறிந்து வைத்திருந்தார்.

சின்னாண்டிக்கு ஒரு நாள் மனத்திலே ஒரு பெரிய சந்தேகம் எழுந்தது. "எல்லாச்சனங்களும் ஒவ்வொரு சமயங்களுக்குள்ளே நின்று பிரிந்து போயிருக்கிறார்கள். எல்லா மக்களையும் ஒரு சமயத்துக்குள் கொண்டுவர முடியுமா?" என்று சின்னாண்டி வேப்பிலைச் சாமியாரைப் பார்த்துக் கேட்டார்.

**"ஒருத்தருக்கும் நோய் வரக்கூடாது.**
**எல்லாரும் எப்போதும் இளமையாயிருக்க வேண்டும்.**
**ஒருத்தரும் இறக்கக்கூடாது"**

இந்த மூன்றையும் எந்தச் சமயத்தாலே முழுமையாகக் கொடுக்க முடியுமோ அந்தச் சமயத்துக்கு எல்லாரும் வந்து சேர்ந்து விடுவார்கள் என்று வேப்பிலைச் சாமியார் சொன்னார்.

*தொகுப்பு : கலாநிதி சபா. ஜெயராசா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவியுடன் மீட்டதுன் அன்பு

ஊழை யுடைத்தெறிந்த உத்தமசற் புத்திரனே
வாழ்க நீ வாழ்க! வனப்புடன் - வாழ்க!!
நெடுமாலே நின்னுருவில் நீட்டியதோர் கையோ
நெடுமாறா வாழ்கநீ; நீடு

காலன்மடி சேர்ந்த கணவனுயிர் மீட்டகதை
ஏலவே யுண்டே இலக்கியத்தில் - வேலூரில்
பாவியவன் கண்வைத்த பைந்தமிழ்க் காவலரை
ஆவியுடன் மீட்டதுன் அன்பு.

நன்றி பலகோடி நல்கினும் தாழாதே
வென்றதுநின் தொண்டே நெடுமாறா! என்றென்றும்
அம்மையும் மப்பனும்போல் அண்ணனுந் தம்பியும்
போல் எம்மிடையே வாழ்வா யினிது.

ஞாலம் வியக்குமோர் நல்வீரன் நாமத்தைச்
சாலைக் கிழுத்துச் சகதி - மூலாம்பூச
வாலைக் கிளப்பியவர் வாய்பொத்த நேர்ந்ததோர்
கேலிக்கூத் தால்வந்த கேடு.

கொடியவ ரேந்துங் கொடுங்கோலென் றென்றும்
வடுவேந்து மென்ற வழக்கும் - முடமோ!
கொடுமுடி யாவையுங் கூண்டோ டழிந்த
உடைமையைக் கொண்டதே ஊழ்.

- அங்குசன் -

## நூற்றாண்டு கண்டாய் வாழி!

*(இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது நூற்றாண்டை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது)*

கம்பனோ கச்சியப்பக் கவிமன்னனோ என்ன
நம்செவிக்கு விருந்திட்ட நாதா - செம்மையுறும்
நூற்களினை யாத்தளித்த நுண்ணறிவாளனே
நூற்றாண்டு கண்டாய் வாழி.

காவியங்கள் பலகற்றாய் கருத்துரைகள் பலதந்தாய்
நாவினிக்க நல்லுரைகள் நவின்றாய் - சாவினிலே
சரித்திரமே படைத்தாய் சான்றோனே கலாநிதியே
தரித்தாயோ விண்ணிற் தனித்து.

மட்டுவிலின் மாண்புதனை மண்ணுலகில் திகழவைத்த
மட்டிலாப் புகழ் மாமணியே - திட்டமுடன்
நற்றமிழும் சைவமும் நானிலம் தனிலோங்க
முற்றாய்ப் பணிசெய்தாய் முனைந்து.

எண்டிசையும் போற்றுமுயர் ஏற்றமுறு மட்டுவிலின்
கண்மணியாய் வந்துதித்த கவிமணியே - பண்டிதர்க்கு
மணியெனவே திகழ்ந்த மாணிக்கமே நாம்
பணிகின்றோம் தங்கள் பதம்.

சிலையுயர்ந்த பேராதனைச் சீர்பெறும் பல்கலையார்
தலைசிறந்த ஆசானாய்த் தான்கண்டு - கலைவல்ல
கலாநிதி யென்றுனைக் காண்பித்து மகிழ்ந்தார்
உலாவெடுத்து மகிழ்வோம் உவந்து.

- செ.சுதாகரன்

## அழியாத உண்மைகள்

பிறருக்கு அடங்கி வாழ்வது அடிமை
பிறரை அடக்கி வாழ்வது கொடுமை
மண்ணில் ஒன்றாய் வாழ்வதெம் கடமை
வாழ்பவன் உரிமையை பறிப்பது மடமை
அறிவினில் நிகராய் திகழ்வது மேன்மை
ஆலயந் தனிலே பேணுவது தூய்மை
உலகம் வாழப் பேசுவது பொதுமை
உன்னை ஒதுக்கி வாழுவது தனிமை
இதமாய் வாழ்ந்து திரிவது இளமை
இளமை போயின் வருவது முதுமை
அடக்க முடைய உள்ளமோ வெண்மை
அறிவு இன்றேல் அனைத்துமே கருமை
எடுப்பும் மிடுக்கும் இருந்தால் ஆண்மை
என்றும் மென்மை உடையது பெண்மை
தாழ்வுச் சிக்கல் கொள்வது சிறுமை
தரணியில் புகழுடன் வாழ்வது பெருமை
வறுமை மிஞ்சி இருப்பது ஏழ்மை
வரட்சி நீங்கின் வருவது பசுமை
உலகம் உவக்க வாழ்வதுன் கடமை
உலகினில் என்றும் அழியாத(து) உண்மை!

அரியாலையூர் ஐ.குமாரதாசன் -

## சுதந்திரம் வேண்டும்

மண்ணிலே விடுதலை வேண்டும் ~ எங்கள்
மனதிலே விடுதலை வேண்டும் ~ எங்கள்
கண்ணிலே சுதந்திரம் வேண்டும் ~ எங்கள்
கடமையிலே சுதந்திரம் வேண்டும்

போருக்கு விடுதலை வேண்டும்
புலம்பல்களுக்கு விடுதலை வேண்டும்
ஊரிலே சுதந்திரம் வேண்டும் எங்கள்
உரிமைகளுக்கு சுதந்திரம் வேண்டும்

எழுத்திலே விடுதலை வேண்டும் ~ எங்கள்
எண்ணங்களில் விடுதலை வேண்டும்
நிலத்திலே சுதந்திரம் வேண்டும் ~ எங்கள்
நினைவிலே சுதந்திரம் வேண்டும்

- சி.பி.புவேந்திரராஜா -

## தொலைந்தது நிம்மதி

நேற்று வரைக்கும்
கூற்றுவனால் கூட
கூறு போட முடியாத
என் நிம்மதி
இன்று காற்றுடன் கலந்து
மீட்கவே முடியாத
மீற்றர்களுக்கப்பால்
எங்கோ
தொலைந்து போனது.
நேற்று......
ஆவி கவர்ந்திடும்
'ஆட்லறிகள்'
அடுக்கடுக்காய் என்னருகில்
வீழ்ந்திட்ட போதும்
குப்பி விளக்குதனில்
குனிந்திருந்து
கொப்பிதனைப்
படித்திட்ட போதும்
பசி தன்னைத் தீர்ப்பதற்கு
புசித்திட ஏதுமில்லாது
தளர்ந்து போய் மூலையில்
சுருண்டு முடங்கிய போதும்
என்னோடு கை கோர்த்துக்
காலாற நடந்து வந்த
என் நிம்மதி
இன்றோ......
பெற்றோல், டீசல்
வந்த போதும்
'கன்டோஸ்', 'கரண்ட்'என
கனவுப் பொருள்கள்
என் கண்ணெதிரே
வந்த போதும்
'மெரிண்டா', 'பெப்சி'
மிகுந்தும் கூட
நள்ளிரவில் மருண்டு போன
நாய்களின்
குரைப்போசைகளுக்கு
இடையிலும்
'பூட்ஸ்' கால்களின்
ஓசைகளுக்கிடையிலும்
காற்றில் கலந்த
என்நிம்மதி
எங்கோ தொலைந்துபோனது!

- வட்டூர் யோ.காந்த

## உணர்ந்து பார்

இதயத்தை மௌனத்தின்
உறைவிடமாக்கி
எதுவுமே புரியாத
இரும்பு மனதாக்கி
இதயத்தை
எரிக்கின்ற
இளையவளே
உன்
உதயத்தினால் எழுந்த
உணர்வுகள்
உருகுவதை
ஒரு நிமிடமாவது
உணர்ந்து பார்.....

- வைத்யமணி

## கவித்துளிகள்

### முயலாமை

முயலே!
நீ ஆமையானது எதனால்?
முயலாமையினால்தானோ?

### திறவுகோல்

தாழ்வு மனப்பான்மைக்கு
தாழ்ப்பாள் போட்டு,
திறமைக்கு திறவுகோலிடு!

### தலைக்கனம்

தலைக்கனம்
தலையிலிருந்தால்-ஹிட்லர்:
காலிலிருந்தால்-தெரேசா!

### சமாதானம்

இலங்கையை பொறுத்தவரை
இரண்டாயிரமாம் ஆண்டிலும்
எட்டாக் கனி...?

### தெரிவுக்குழு

தீர்வுப்பொதி தயாரிப்பது
இவர்கள்
பொழுதுபோக்கு....!

- ந.சத்தியா

கவிதை முற்றம்

## அறம்பாடி அழிக்கோமோ நாம்....?

நெற்றிக்கண் விழித்தாலும் நிமிர்ந்து நின்று குற்றமென
நிமலனுக் கேயுரைத்தோன் வாரிசுநாம்
தற்பெருமை பேசிநின்று தகைமைசொல்லி யடிபட்டுத்
தரங்கெட்ட உணர்வுகளைத் தான்பாடி
அற்புதங்க ளற்றவுடற் காதலையும் ஆயிழையார்
அந்தரங்க உறவினையும் பாடிநின்று
சொப்பனந்தான் காண்போமா சொரணையற்ற கவிஞர்களா
சூட்டுக்கோல் தூக்கோமோ நாம்?

◆ ◆ ◆ ◆

காதலென்றா லென்னவென்று கண்டுகொள்ள நேரமற்றுக்
கடைத் தெருவில் ஒழுங்கைகளிற் பாழ்வீட்டில்
கூதலினைத் தீர்த்தேகும் கொடுமைகளைக் கண்டபின்னும்
குடிகெடுக்க நாமும்பாத் தொடுப்போமா?
பேதலித்த இளசுகளைப் பிழையின்றி வழி நடத்தப்
பெருங்கவிதைச் சுடர்கொழுத்தத் தெம்பற்று
ஏதேதோ பாடிநின்று இதுதான்பார் கவியென்று
இறுமாந்து போவோமோ போ....!

◆ ◆ ◆ ◆

கசிப்பேதம் கதியென்று கடை வீடு தெருவெங்கும்
கலையாடு வோரிங்கு பல நூறு
பொசிப்பேயிங் கிலையென்று புலம்புவோர் துயரங்கள்
பூதமாய்ப் பருத்து நூறு
நிசிப் பேய்கள் கதவண்டை நெறுமியிடு மோசைகள்
நிதநிதம் பல்லாயி ரம்
நசித்திந்த நலிவுகளை நமனுலக மனுப்பாமல்
நமக்கென்ன கவிதைவேண் டும்?

◆ ◆ ◆ ◆

காலத்தைக் காட்டிவருங் கண்ணாடி யாயெங்கள்
கவிதைகள் அமைய வேண் டும்!
ஏலத்தில் விலைபோகும் ஏதிலிக் கொள்கைகளை
எழுத்தினாற் சாய்க்க வேண் டும்!
ஞாலத்தி லின்னபடி நடவென்று நல்வழியை
நறுங்கவிஞர் காட்டவேண் டும்!
ஆலமென வருத்தவரு மநியாய அவலங்களை
அறம்பாடி அழிக்கோமோ நாம்?

◆ ◆ ◆ ◆

அடதம்பி நீபாடு ஒருநூறு இருநூறு
ஒரு கோடிக் கவிபாடி டு!
திடமாயெம் மினம்வாழத் திசையெங்கு மொளியேறத்
தீமையிங் ககன்றேகிட
எடுகோலைத் தொடுபோரை இவன்தான் கவிஞனென
இசைவாழும் பேர்வாங்கி டு!
தடுமாறித் தலைசாய்த்துத் தவறுபவன் கவியல்லத்
தலை நிமிர்ந் திசைபாடு வோம்!

- தமிழ் மணாளன் -

## தமிழ்ச் சாதி

வெளியில் விரிந்திருக்கும் விண்மீனை இரசியாமல்
அலைந்து 'திரையரங்கில்'
இருட்டை வரவழைத்து........
'நட்சத்திரம்' பார்க்கும் நனவினிலே மானுடர்கள்
உட்கார்ந்திருப்பார்கள்......
திரையிலெழும் ஒளிவெள்ளம்
இந்திரனின் சபைக்கு இவரை இழுத்தெடுக்கும்
ரம்பைகள், ஊர்வசிகள்
இரகசியத்தை மறைக்காமல்
பம்பரமாய்க் குலுங்கப் பார்த்த உடல் புல்லரிக்கும்
மயிலிறகால் வருடுதல்போல் மலர்ந்த இசைஞானத்தை
மறைத்து புதுப் புயற் சத்தம் மடைதிறக்க
குருதி பீறும்
வெறிக்கொலைகள்,கற்பழிப்பு, தொப்புளிலே தோணிவிடல்
பம்மாத்துச் சண்டை
பிரமாண்டம், கிராபிக்ஸ்கள்
கும்மி, குரங்காட்டம், இரட்டை அர்த்தம்:...... பின் தொடர
அடுப்படிக்குள் பூனை
அயர்ந்திருக்கும் யதார்த்தத்தை
மறந்து விட்டு மனிதம் 'மணிக்கணக்கில்' பலியாகும்
'பேயராவதற்கு' அளவெதுவும் வேண்டாமா?
பாம்பெடுத்துக் கொஞ்சி
'படையப்பா' நடந்து வந்து
கடைசியிலே வேலெறிந்து காளையை அடக்கு மட்டும்
கற்பூர ஆராத்தி, கரகோசம், விசிலாலே
அர்ச்சனைகள் பூமாரி.... ஆண்டவனே.....!
விடிவொன்றை
வென்று நிமிர்வதற்காய் விலைதருவோரை மறந்து
இந்தப் பொய் விம்பந்தான் இதமென்று சரண்புகுந்து
வாழ வழிசொன்ன வரம்விட்டு
நம்மவர்கள்
போக நினைப்பென்னும் போதையுண்பார்! சிலையாவார்!
நாளை நிலை அறியார்!
நியாயம் பிளந்திடுவார்!!
ஞானம் கிடைக்கணுமே....
நடிகனைத்தான் கேட்கின்றார்!
'விதியே விதியே இத்தமிழ்ச்சாதியை
என்செயக் கருதி இருக்கிறாயடா?'


- த.ஜெயசீலன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...முகக்குப் பொறிவைத்தும் தரகரை ஏமாற்றியும் கலியாணத்தை முடித்துக்கொள்ளும் தாவரங்கள்

பூக்குந்தாவரங்களில் கருக்கட்டல நிகழ்ந்து, விதைதோன்றி,சந்ததி தழைக்க வேண்டுமானால் மகரந்தச்சேர்க்கை நிகழவேண்டும். இச்செயலுக்கு பல பூச்சிகளும் சிலபறவைகளும் சில விலங்குகளும் உதவும். இங்ஙனம் உதவும் அங்கிகளைத் தாவரங்களின் கலியாணத் தரகர்கள் என்று கொள்ளலாம் அல்லவா? மனிதர்கள்தான் பெரும்பாலும் கலியாணத் தரகர்களிடம் ஏமாந்து போவதுண்டு. தாவரங்கள் அப்படி இல்லை. சில தாவர இனங்கள் தரகர்களையே பொறி வைத்துப் பிடித்து சிறைவைத்து கலியாணம் முடிந்தபின் விடுவிக்கும். சில தாவர இனங்கள் தரகர்களை ஏமாற்றிக் காரியத்தை முடித்துக் கொள்ளும். இத்தகைய சில தாவரங்களை இங்கு கவனிப்போம்.

பூக்கும் தாவரங்கள் மகரந்தச் சேர்கைக்கென பல வழிகளிலும் பூச்சிகளைக் கவருவ





**பூச்சிகளுக்குப் பொறி வைக்கும் ஆடு தின்னாப்பாலை - பூவின் நெடுக்கு வெட்டுப் படம்.**

துண்டு. உதாரணமாக பலதரப்பட்ட நிறங்கள், மணம், வடிவங்கள் போன்றவை மூலம் வெறுமனே கவர்ச்சியைக் காட்டி தரகனை ஏமாற்ற முடியாது. இலஞ்சமும் கொடுக்க வேண்டும். அதிகளவில் மகரந்த மணிகளைத் தோற்றுவித்தும் அமுதத்தைச்(தேனைச்) சுரந்தும் தாவரங்கள் இவற்றைத் தரகனுக்கு இலஞ்சமாகக் கொடுக்கும். தரகனும் மகரந்தச் சேர்க்கைக்கு (கலியாணத்துக்கு) உதவும்.


சில தாவர இனங்கள் இங்ஙனம் கவருவதுடன் பூவை நாடிவந்த பூச்சிகளைச் சிறைப்பிடித்து வைத்திருந்து தமது தேவை முடிந்ததும் விடுதலை செய்யும். இந்த வகையில் ஆடுதின்னாப்பாலை, கோழிச்சேவற் செடி போன்றவை அடங்கும்.

**-குகன்-**

இலங்கையில் ஆடுதின்னாப்பாலை இனங்கள் மூன்று உண்டு. அறிஸ்ரலோக்கியா பிறாக்கியேற்றா (ARISTOLOCHIA BRACHIATA அறிஸ்ரலோக்கியா இன்டிக்கா (A. INDICA) அறிஸ்ரலோக்கியா எலிகன்ஸ் (A.ELEGANS) (இவையனைத்தும் மிகமுக்கியமான மூலிகைத் தாவரங்களாகும். விஷக்கடி வைத்தியத்துக்குப் பயன்படுத்தப்படும்) இவற்றின் பூக்கள்




**கோழிச் சேவற் செடியின் பொறி - முழுப்பூவும், நெடுக்குவெட்டும்.**




**ஏறம்லில்லி - பூந்துணர், இலை, பாளை நீக்கிய பூந்துணர், பெண்பூ(கீழே), ஆண்பூ(மேலே)**

கவர்ச்சியானவை, பூவின் அடிப்பாகம் புடைத்தும் நடுப்பாகம் ஒடுங்கியும் முனைப்பாகம் விரிந்து புனல் போன்றும் இருக்கும். மேற்படி வடிவம் காரணமாக அறிஸ்ரலோக்கியா எலி

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்


கன்ஸின் பூ "தாராப்பூ" என்றும் அழைக்கப்படும். பூவின் அடிப்பகுதியில் ஆணகமும், பெண்ணகமும் வைக்கப்பட்டிருக்கும். ஒடுங்கிய கழுத்துப் பகுதியில் உள்நோக்கிய மயிர்களுண்டு. பூ மலர்ந்ததும் பூவை நாடிவந்த பூச்சிகள் உட்செல்லும். உட்சென்ற பூச்சிகளை வெளியேறவிடாது உள்நோக்கிய மயிர்கள் தடுக்கும். பூ மலரும்போது பெண்ணகம் விருத்தியடைந்த நிலையிருக்கும். அதனால் பூச்சிகளின்மேல் அதே இனத்துக்குரிய மகரந்தமணிகளிருப்பின் மகரந்தச் சேர்க்கை நிகழ்வதுடன் கருக்கட்டலும் தொடரும். அதேசமயம் இரண்டொரு தினங்களில் ஆணகம் முதிர்ச்சியடைய மகரந்தக் கூடுகள் வெடிக்கும். இப்பொழுது மகரந்த மணிகள் அலையும் பூச்சிகளின் மேல் ஒட்டிக் கொள்ள முடியும். அதேசமயம் மயிர்கள்



**சேம்புக் கருணை - தாவரம், கிழங்கு, பூந்துணர்.**

உலர்ந்து வதங்க பூச்சிகள் வெளிறே முடியும். இப்பூச்சிகள் இதே இனத்தைச் சேர்ந்த பிறிதொரு பூவை அடையும்போது அதே பொறி முறை தொடரும். பூச்சிகளுக்கு அமுதம் இருக்கும் இடத்துக்கு வழிகாட்ட பூவில் தேன் வழிகாட்டிகளும் (Honey Guides) உண்டு. மேற்படி பொறிமுறை 'விழுகுழிப் பொறிமுறை'(Pit Fall Mechanism) எனப்படும். மேற்படி தாவரங்களில் அநேகமாகப் பூக்களிலிருந்து கனிகள் தோன்றுவதைக் காணலாம். இப்பொறிமுறை எவ்வளவு வெற்றிகரமானது என்பது புலப்படுகின்றது. ஆண்டாண்டு காலமாக பல்லாயிரம் வருடங்களாக பூச்சிகள் பொறியில் விழுந்து கொண்டே இருக்கின்றன. ஆயினும் தப்ப முயற்சிக்காது தொடர்ந்தும் விழுகின்றன. அவற்றுக்கு உணவும் தங்மிடவசதியும் இலவசமாகக் கிடைக்கின்றதல்லவா? - தரும அன்ன சத்திரத்தில் தங்குவது போல.


மேற்படி பொறிமுறை நிகழ்கின்ற அதேசமயம் பூவுக்குள்ளிருந்து பூச்சிகளின் ஒட்டுண்ணிகளாகிய உண்ணிகள், தெள்ளுகள், பேன்களும் தொற்றிக் கொள்வதுண்டு. இவ்வொட்டுண்ணிகள் எங்ஙனம்பூச்சிகளை அடைகின்றன என்பது ஆராயப்படவேண்டிய விடயம். பூச்சிகளைப் பிடித்து ... களும் காவலிருப்பதுண்டு. ... முறை சேம்புக்கருணை (Colocasia), அலங்காரத் தாமரை (Cladium), சட்டிக்கரணை (Amorphophallus) கோழிச்செவற் செடி (Typhonium), பாம்புக்கருணை (Arisaema) போன்ற தாவரங்களிலும் நிகழும். இவற்றின் பூக்கள் பூந்துணர்களில் வைக்கப்பட்டிருக்கும். பூந்துணருக்குப் போர்வையாக மடல் போன்ற பாளையுண்டு. பாளையின் அடிப்பாகம் புடைத்தும், அடுத்து ஒடுங்கியும், பின் விரிந்துமிருக்கும் ஒடுங்கிய பகுதியில் உட்பக்கமாக உள்நோக்கிய மயிர்களுண்டு. பூந்துணரின் அடியில் பெண் பூக்களும் அடுத்து ஆண் பூக்களும் மேலே மலடான ஆண்பூக்களும் உண்டு. பல நிறங்களைக் கொண்ட மலடான பகுதி கவர்ச்சிக்கு உதவும். பூவினுள் (பாளையினுள்) சென்ற பூச்சிகள் வெளியேறாது தடுக்கப்படும். விருத்தியடைந்த பெண்பூக்களில் மகரந்தச்



**அலங்காரத்தாமரை - இலைகளும், பூந்துணரும். கீழே அதே போன்ற சாதாரண டிபென்பேக்கியாவின் பூ.**


சேர்க்கை ஏற்படும். தொடர்ந்து ஆண் பூக்கள் விருத்தியடைய, மயிர்கள் வாடி வதங்க, மகரந்த மணிகளுடன் பூச்சிகள் வெளியேற முடியும். தரகர் தொடர்ந்தும் தமது தொழிலில் ஈடுபடுவார்.

தரகனை ஏமாற்றும் கைங்கரியத்தில் வண்டு அனுகரண ஓக்கீட்டு (BEETLE ORCHID) ஒப்பாரும் மிக்காரும்) இல்லாதது. படத்தில் வண்டு அனுகரண ஒக்கீட்டின் ஒரு மலர்ந்த பூவும், இரண்டு மொட்டுக்களும் அவற்றின் பாளைகளும் துலக்கமாகத் தெரிகின்றன. மலர்ந்த பூவின் அடியில் தெரிவதுபூந்துணரச்சு. மலர்ந்த பூ குறிப்பிட்ட ஒரு வண்டினத்தின் பெண் வண்டு போலப் பாவனை (Mimic) செய்கின்ற காரணத்தினால் இந்த இன ஆண் வண்டுகள் இனக்



**ஏமாற்றில் எமகாதகன் - வண்டு ஓக்கீட்டு - மலரும், மொட்டுக்களும்.**

கவர்ச்சியினால் உந்தப்பட்டு பூவின்மேல் வந்தமர்ந்து விந்துகளை சொரியும். விந்துகள் வீண் போனாலும், பூவில் மகரந்தச் சேர்க்கை நிகழ்வதற்கு வாய்ப்புண்டு. நிறம், மணம், அமுதம் கொண்டு கவருவது ஒரு வகைக் கவர்ச்சி. மேற்கூறியது ஏமாற்றுவித்தை. சந்ததி சந்ததியாக வண்டுகள் ஏமாந்து கொண்டேயிருக்கின்றன. அதனால் இந்த ஒக்கீட்டு இனமும் அழியாமல் இருக்கிறது. என்னே இயற்கையின் விந்தை!




அலைகள் இல்லாக் கு...
அதிக மீன்கள் பிடிக்க...
வலையை இருவர் விரி...
வளைத்து மீனைப் பிடி...

வலையில் அதிக மாக...
வந்து வீழ்ந்த மீன்கள...
கலயம் தன்னில் நிரப்...
கையில் எடுத்துச் செ...

அருகில் இருந்த மரத்...
அமர்ந்தி ருந்த குரங்...
'குறுகு' றென்று இதன...
கூர்ந்து பார்க்க லான...

மனிதர் இருவர் தலை...
மறைந்த வுடனே வேக...
குனிந்த முதுகுக் குர...
குதித்தே ஓடி வந்தது;...

கரையில் கிடந்த வலை...
கையில் எடுத்துக் கொ...
விரைவில் குளத்தில் கு...
வீசி வலையை விரித்...

வலையில் மீன்கள் எ...
வந்து சிக்கு முன்னரே...
தலையும் காலும் சிக்...
தவித்த தந்தக் குரங்...

தகுந்த உதவி இல்லை...
தப்ப வழியும் இல்லை...
மிகுந்த முயற்சி செய்...
வீண்தான் என்றே அ...

"குளத்தில்வலையை வி...
குதிக்கும் மீனைப் பிடி...
பழக்க மில்லா என்னை...
பாழும் ஆசை கெடுத்...

மந்தி யாகப் பிறந்தந...
மனித னாக நடித்தத...
இந்தக் குளத்தில் சா...
இதுஎன் மடமை'' என்...


-குழந்தை...

## அம்மா! அம்...

அன்புடனே பெற்றெடுத்தீர் அம்மா ...
ஆசையுடனே வளர்த்தீர் அம்மா ...
இன்புடனே சேவைசெய்தீர் அம்மா ...
ஈடில்லாப் புகழ் பெறுவீர் அம்மா ...
உண்மையுடனே வளர்த்தீர் அம்மா ...
ஊருக்கு நீருழைத்தீர் அம்மா அ...
எங்களுக்குப் புகழை தந்தீர் அம்...
ஏற்றமுடனே வாழ்ந்திடுவோம் அம்...
ஐயமிட்டு நீ வாழ்ந்தீர் அம்மா ...
ஒற்றுமையைப் பேணி நின்றீர் அம்...
ஓதரிய கலைகள் தந்தீர் அம்மா ...
ஒளவை மகம் போற்றிடுவோம் அம்...
இஃதன்றி வேறறியோம் அம்மா அ...
அகிலமெல்லாம் நீர்நிறைவீர் அம்...

வை...
(மட்டுவில் தெற்கு சரஸ்வதி...

## வழி எது...



அம்புக்குறிகாட்டிய வழிக்குள் ... மத்தியில் இருக்கும் மைய நி... அடையலாம். ஒரு தடவை புகுந்து... பாருங்களேன்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ள் இல்லாக் குளத்திலே
மீன்கள் பிடிக்கவே
ய இருவர் விரித்தனர்;
து மீனைப் பிடித்தனர்.

ல் அதிக மாகவே
ிழ்ந்த மீன்களை,
தன்னில் நிரப்பினர்;
எடுத்துச் சென்றனர்.

இருந்த மரத்திலே
ிருந்த குரங்குமே
றென்று இதனையே
பார்க்க லானது.

இருவர் தலைகளும்
வுடனே வேகமாய்,
முதுகுக் குரங்குமே
ஓடி வந்தது;

கிடந்த வலைதனைக்
எடுத்துக் கொண்டது;
குளத்தில் குதித்தது;
லையை விரித்தது.

ல் மீன்கள் எதுவுமே
க்கு முன்னரே,
காலும் சிக்கியே
தந்தக் குரங்குமே!

உதவி இல்லையே!
ியும் இல்லையே!
முயற்சி செய்தது;
ன் என்றே அறிந்தது!

ில்வலையை விரிக்கவும்,
மீனைப் பிடிக்கவும்
ில்லா என்னையே
ஆசை கெடுத்ததே!

ப் பிறந்தநான்
ாக நடித்ததால்,
ுளத்தில் சாகிறேன்.
மடமை'' என்றது.

-குழந்தைக் கவிஞர்.

# ...! அம்மா!!

...றெடுத்தீர் அம்மா அம்மா!
...ளர்த்தீர் அம்மா அம்மா!
...செய்தீர் அம்மா அம்மா!
... வெறுவீர் அம்மா அம்மா!
...ளர்த்தீர் அம்மா அம்மா!
...ழந்தீர் அம்மா அம்மா!
...ழ தந்தீர் அம்மா அம்மா!
...ந்திடுவோம் அம்மா அம்மா!
...த்தீர் அம்மா அம்மா!
...னி நின்றீர் அம்மா அம்மா!
... தந்தீர் அம்மா அம்மா!
...ற்றிடுவோம் அம்மா அம்மா!
...வோம் அம்மா அம்மா!
...தீர்த்திறைவீர் அம்மா அம்மா!


வை.சாமந்தி
(...வில் தெற்கு சரஸ்வதி அ.த.க.பா)

# ... எது?



...ட்டிய ↑ வழிக்குள் புகுந்தால்
...க்கும் மைய நிலையத்தை
...ரு தடவை புகுந்து கொண்டு

# கட்டங்கலளை நிரப்புங்கள்




இந்தச் சங்கிலித் தொடர் கட்டங்களை நிரப்ப நீங்கள் சிரமப்பட வேண்டாம். மேலிருந்து கீழ் வரிக்கான குறிப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு உரிய சொற்களைக் கண்டுபிடித்து நீங்கள் நிரப்பினால் போதும். இடமிருந்து வலமாக சொற்கள் தாமாகப் பொருந்தி வருவதைக் காண்பீர்கள்! எல்லாமே மூன்றெழுத்துச் சொற்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

1. தவம்.
2. கூற.
3. வாரி வழங்குவது.
4. சொண்டு.
5. ஒரு பட்சணம்.
6. ஒரு பாத்திரம்.
7. தவறிப்போவது.
8. 'கப்ஸா'.
9. தலையில் முடிவது.
10. தள்ளிப்போ.
11. யானையின் எச்சம்.
12. புரவி.
13. நீரில் மிதப்பது.
14. இந்த நகைகளுக்குத்தான் மதிப்பு.
15. விடியற் காலம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# இயலுமா?



மேலேயுள்ள படத்தை நீங்கள் வரைய வேண்டும். ஆனால் ஓரிடத்தில் வரையத் தொடங்கினால் வரைந்து முடிக்கும்வரை பென்சிலைப் பேப்பரிலிருந்து எடுக்கக்கூடாது. ஒரே கோட்டுக்கு மேல் மீண்டும் கோடு வரையக் கூடாது. உங்களால் இயலுமா பாருங்கள்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

# முடியுமா?

எட்டு லீற்றர் பாத்திரம் நிறைய பால் இருக்கின்றது. இதைத்தவிர உங்களிடம் மூன்று லீற்றர் பாத்திரம் ஒன்றும், ஐந்து லீற்றர் பாத்திரம் ஒன்றுமே உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி எட்டு லீற்றர் பாலையும் சரிசமமாகப் பங்கிட வேண்டும். உங்களால் முடிகிறதா? முயற்சித்துப் பாருங்களேன் !

(விடை XV ஆம் பக்கத்தில்)


# பூக்கள்

சின்னச் சின்னப் பூக்களே!
சிறந்த நல்ல பூக்களே!
என்ன உந்தன் அழகு
எனக்கும் கொஞ்சம் சொல்லு.

பஞ்சு போன்ற மென்மை
பாலைப் போன்ற வெண்மை
கண்ணைப் பறிக்கும் தூய்மை
கடவுள் தந்த கருணை.

-தி.கௌசலா.
(ஆண்டு9, வேம்படி மகளிர் கல்லூரி)

# எத்தனை எலிகள்?



மேலேயுள்ள படத்தில் எத்தனை எலிகள் ஒளிந் துள்ளன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

(விடை XV ஆம் பக்கத்தில்)

# வானம்

வானமெங்கள் வானமே
நீலமான வானமே
கானம் பாடும் பறவைகள்
பறந்துலாவும் வானமே!

வெள்ளி தோன்றும் வானமே
தங்கமதியும் தோன்றுமே
தேய்ந்து மறைந்து தோன்றுதே
எங்கள் வாழ்வு போலவே!

ஜாலம் யாவும் தோன்றுதே
கோலம் மாறி ஆகுதே
மேகக் கூட்டத்தோடுமென்
காற்றும் சேர்ந்து பாடுதே!

பள்ளி செல்லும் பாலர் நாம்
வெள்ளை நிறச் சூரியன்
கொள்ளை அழகு பாருமே
துள்ளிப் பாடி வாழுவோம்!

ஞானம் பெற்று வாழவே
பாடம் கற்க வேண்டுமே
வானம்பாடி போலவே
கானம் பாடி வாழுவோம்!

ச.ரங்கன்
(தரம்6, யாழ். இந்துக்கல்லூரி)

# கண்டுபிடியுங்கள்!

**கீழே ஐந்து சொற்களைக் கொண்ட கூட் டங்கள் தரப்பட்டுள்ளன. கூட்டத்தில் ஒரு சொல் மட்டும் அந்தக் கூட்டத்தில் அடங்குவதற்குப் பொருத்த மற்றது. அந்தச் சொல்லைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!**

1. விபீடணன், சுக்ரீவன், வாலி, சகுனி, அனுமான்.
2. பேதை, கன்னி, மடந்தை, மேதை, பொதும்பை.
3. கவாஸ்கர், அர்ஜுனா ரணதுங்கா, கங்குலி, குளூஸ்னர், விஜய்அமிர்தராஜ்.
4. லெப்டினன், கப்டன், மேயர், கேணல், பிரிகேடியர்.
5. புதுடில்லி, லண்டன், நியூயோர்க், வார்ஸோ, மொஸ்கோ.
6. டொலர், ரூபிள், யென், மில்லியன், பவுண்ட்ஸ்
7. ஆஸ்திரேலியா, பிரித்தானியா, இலங்கை, ஜப்பான், இந்தியா.
8. வதனம், அழகு, யௌவனம், வனப்பு, சுந்தரம்.
9. தவில், தபேலா, மிருதங்கம், உடுக்கு, நாதஸ்வரம்.
10. மோட்டார்சைக்கிள், துவிச்சக்கரவண்டி, ஸ்கூட்டர், சார்லி, ஓட்டோ.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# தன் வாயால் கெட்ட கழுதை



ஒரு வண்ணான் பொதி கழுதையொன்றை வளர்த்து வந்தான். அவன் தன் அழுக்கு மூடைகளையெல்லாம் அதன் மேல் ஏற்றிக் குளத்திற்குக் கொண்டு போவான். துவைத்து முடிந்த பின் மீண்டும் சுமை ஏற்றிக்கொண்டு வருவான்.

இவ்வளவு உழைக்கின்ற அந்தக் கழுதைக்கு அவன் தீனி வைப்பதில்லை. ஆனால், கழுதையின் வயிற்றை நிரப்ப அவன் ஒரு தந்திரம் கண்டு பிடித்திருந்தான். இரவு நேரத்தில் அந்தக் கழுதையின் மேல் ஒரு புலித்தோலைப் போட்டுப் போர்த்தி, அதை அருகில் உள்ள ஒரு பயிர்க் கொல்லையில் மேயவிட்டுவிடுவான். கழுதை வயிறு நிறையப் பச்சைப் பயிரை மேய்ந்து நன்றாகக் கொழுத்து வளர்ந்தது. வண்ணானுக்கும் மிகுந்த வேலை பார்த்தது.

இரவில் பயிர்க்கொல்லையைக் காவல் செய்பவர்கள் கழுதையைக் கண்டவுடன் புலி என்று நினைத்துக் கொண்டு பயந்து ஓடிப் போவார்கள். அது வேண்டுமட்டும் மேய்ந்து விட்டுப் போகும். இப்படி நெடுநாள் நடந்து வந்தது.

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? என்று பழமொழியிருக்கிறது. ஆனால் இப்போது புலி நெல்லைத் தின்னும் புதுமையைப் பார்க்கிறோம். எல்லாம் கலிகாலக் கோலம்' என்று எல்லோரும் எண்ணி வியப்புக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு முரடன் இருந்தான். இது உண்மைதானா அல்லது சூழ்ச்சியா என்று அறிந்து கொள்வதற்காக அந்தத் துணிச்சல்காரன், கையில் ஓர் ஈட்டியை ஏந்திய வண்ணம், கம்பளத்தால் தன் உடல் முழுவதும் மூடிக் கொண்டு ஓர் இடத்தில் ஒளித்திருந்தான்.

வழக்கம் போல் பயிர் மேய்வதற்காகக் கழுதை வந்த நேரம் பார்த்து அவன் எழுந்திருந்தான். கம்பளப் போர்வையோடு வந்த உருவத்தைக் கண்டதும், அது பெட்டைக் கழுதை என்று நினைத்துக் கொண்டு, புலித்தோல் போர்த்த கழுதை கத்தத் தொடங்கியது. அதன் குரலைக் கேட்டவுடன், ஈட்டிக்காரன், 'பூ! நீ ஒரு கழுதைதானா? சரி, இதோடு தீர்ந்து போ!' என்று தன் கை ஈட்டியால் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான்.

அவ்வளவுதான் கழுதை சுருண்டு பிணமாக விழுந்தது.

வாயடக்கம் வேண்டும். இல்லா விட்டால் இந்தக் கழுதையைப் போல், தன் வாயினாலேயே கெட்டொழிய நேரிடும்.

-பஞ்சதந்திரக்கதை.




# நொடிப்பொழுது

1. கால் இருக்கும் நடக்காது; கையிருக்கும் சாப்பிடாது. அது என்ன?
2. உயிரில்லாப் பிராணி; ஊரெல்லாம் மணக்குது. அது என்ன?
3. கல்லிலே பூத்து வாயிலே சிவக்கும் பூ. அது என்ன பூ?
4. பக்கமெல்லாம் பட்டையுண்டு; மரமுமல்ல. பெயர்த்தெடுத்தால் முத்துண்டு; சிப்பியல்ல. உடைத்தெடுத்தால் விதையுண்டு; பழமுமல்ல. அது என்ன?
5. கத்திபோல் இலையிருக்கும்; கவரிமாப் பூப் பூக்கும்: தின்னப்பழம் பழுக்கும்; தின்னாத காய்காய்க்கும். அது என்ன?

ப.ஹரிகரன்
(பரியோவான் கல்லூரி)

விடைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | சூ |
| | இராசிச்சக்கரம் | | ராகு வெ புத |
| கே | | | |
| | சந் | செவ் | |

*மாற்றம்: 26.6.1999இல் அனுஷம்-விருச்சிகம் இராசியில் நிற்கும். 1.7.1999இல் வெள்ளி-சிங்கம் இராசிக்கு மாறும்.*

*அரசியலில் புதைகுழிப்பிரச்சினைகள், கண்ணி வெடிப்பிரச்சினைகள் உலக அரங்கில் பிரபலமாகும். அரசியல்வாதிகள் அபிப்பிராயபேதப்படுவர். மக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் போராட்டங்களைத் தொடருவர். யுத்தமேகம் இடைக்கிடை முழங்கிய படிதான் இருக்கும். இந்தியாவில் ஆளும் கட்சி அதிக செல்வாக்கை திடீர் எனத் தேடிக் கொள்ளும். அமெரிக்கா இந்தியாவிற்கு நல்ல ஆலோசனைகளை, உதவிகளைச் செய்ய முற்படும். நேட்டோ நாடுகளின் இணக்கம் விட்டுவிட்டு நடக்கும். மேற்குலகம், ஆதிக்க வலுவை நிலைநிறுத்த முற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

**26-06-1999 இலிருந்து 02-07-1999 வரை**

## மேடம்

காலத்திற்குத் தகுந்த மாதிரி வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். தத்துவம் பேசிக்கொண்டிருந்தால் பின்தள்ளப்படுவதிலிருந்து தவிர்க்க முடியாததாக இருக்கும். அதற்காக மற்றவர்களுக்கு துன்பம் கொடுப்பவர்களாக வாழக்கூடாது. தொழில் ஸ்தானத்தில் பிறருக்கு ஆலோசனை கூறப்போய் அமைதியற்றிருப்பீர்கள். ஆயினும் மேலதிகாரிகளால் உதவிகளும் நன்மைகளும் ஏற்படும். இலாபங்கள் கிட்டும். சகோதரங்களுக்கு உதவிகள் செய்து கொடுப்பீர்கள். வீடு, காணி, வாகனம் சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கும். பேச்சுவார்த்தைகளால் இலாபங்கள் கிடைக்கும். கண் கலக்கம், நெஞ்சுச்சளி, வயிற்று நோவால் சிலர் வருந்தலாம். விவசாயம், கடல், புடைவை, போக்குவரத்து, ரீ.வி, ரெலிபோன், நிர்வாகம் சம்பந்தமான துறையைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், புதன்.*

## இடபம்

மோகம் பாவத்திற்கு காரணமாக அமைகின்றது. பாவம் சாபத்திற்கு, தண்டனைக்கு வித்திடுகின்றது. தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் வரலாம். எதிர்பாலார் கலங்குகின்றார்கள் எனக் கருணை காட்டாதீர்கள். விலகி நடந்தால் நன்மை. கருணை காட்டுவதைச் சிலர் தப்பாகக் கருதிக் கதைகட்டி விடுவார்கள். சினிமா, ரீ.வி. பார்ப்பதிலேயே காலம் போகும். நெஞ்சுப் படபடப்பு, களைப்பு, யோசனை, வாய்வு வருத்தங்களால் சிலரை வருத்தலாம். சகோதரர் அல்லது எதிர்பாலாரின் சகோதரங்கள் உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். சட்டம், சமயம், மின்சாரம், இரும்பு, நிர்வாகம் போன்ற துறையினர்கள் பல நன்மைகளை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், புதன்.*

## மிதுனம்

அடுத்தவன் சொத்தில் சுகம் காண்பவர்கள் எத்தனை பேர்? செய்த பிழைகளை மழுப்புவதற்காக மேலும் பல பல பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களிடமிருந்து தப்புவதற்காக நல்லவர்கள் பலரும் தவறுகளைச செய்தபடி இருக்கின்றார்கள் என்பதை உதயத்திலிருக்கும் சூரியபகவான் உங்களிற்கு உணர்த்தாமல் விடமாட்டார். தொழில் ஸ்தானத்தில் குற்றம் குறை சொல்லாதீர்கள். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். மருந்து, விவசாயம், போக்குவரத்து, நகை, புடைவை, அரசியல் போன்ற துறையைச் சார்ந்தவர்கள் பல நன்மைகளை அடைவார்கள். மலச்சிக்கல், தலைவலி, வாதரோகம், முதுகுவலி என ஓடித்திரிவீர்கள். எதிலும் வேகமாகச் செயல்படுவீர்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாரிடம் உண்மைகளைக் கூறி மனஆறுதலை அடையுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், புதன்.*

## கடகம்

உலகவாழ்வில் குடும்பத்தவர்கள் எப்படி வாழுகின்றார்கள் என்பதிலிருந்து பலஅனுபவங்களை - வருங்காலச் சந்ததிகள் பெறுகின்றன. புத்தியால் எதிர்ப்பாலாரை அணுகி. சுகம் பெறச் சந்தர்ப்பங்கள் சிலருக்கு ஏற்படலாம். ஆயினும் புத்திசாதுரியமாக நடந்துகொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள், நடைமுறைகளை உருவாக்குவீர்கள். படபடப்புத்தன்மை, தோல்வருத்தம், சிரசு வருத்தம், காய்ச்சல் என்பன வருத்தலாம். சகோதரர்கள் உதவிகள் செய்வார்கள். சட்டம், சமயம், வியாபாரம், கமிஷன், நகை, ரீ.வி, போக்குவரத்து, மருந்து, பத்திரிகை போன்ற துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு பலவித மாற்றங்கள் ஏற்படும். நிம்மதி எமது மனநிலை - செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது. பொதுக்காரியங்களிலும் கண்டபடி தலையிடாதீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், புதன், வியாழன்.*

## சோதிட சஞ்சீவி

## சிங்கம்

எந்தப் பொருளும் சீக்கிரம் கிடைத்தால் அதற்கு மதிப்பு குறைந்து விடும். போராடிப் பெற்றால் அதன் பெறுமதி அதிகம். உங்களைப் பொறுத்த மட்டில் எதையும் போராடி, நியாயப்படி பெற்றுக் கொள்வீர்கள். தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருக்க வேண்டும். பிறருக்கு ஆலோசனை, அடிக்கடி கருத்தான, ஆழமான வசனங்களைச் சொல்லி மற்றவர்களை அதிகம் யோசிக்கச் செய்வீர்கள். உஷ்ணபீடைகள், பித்தரோகம், இருதய நோய், நாரிவலி என்பன பலரை வருத்தலாம். கடல் துறை, புடைவைத்துறை, போக்கு வரத்துத் துறை, விவசாயம், குருத்துறை, நிர்வாகத்துறை சம்பந்தப்பட்வர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்பட இடம் உண்டு. எதையும் ஒளித்துச் செய்ய, நடக்க முடியாத நிலை ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## கன்னி

சிலர் வாய்ப்பைப் பயன்படுத்தி இரகசியமாக சிலரின் வாழ்வில் பல அநீதிகளைச் செய்கிறார்கள். நல்லவர்களுக்கு சில துன்பங்களைத் தருகின்றார்கள். சிரித்துச் சிரித்து நன்மைகளைச் செய்துவரும் உங்களுக்குச் சிலர் துன்பம் தருகிறார்கள் என்று கலங்காதீர்கள். அட்டமத்தில் வியாழன் வந்து, அமைதிதந்து புதிய வாழ்வை மலரவைப்பான். தொழில் ஸ்தானத்தில் அரச உதவிகள் கிடைக்கும். அவதானமான பேச்சுக்களால் கஷ்டங்கள் விலகும். நரம்புத் தளர்ச்சி, சளி, வாதஉளைவு, கிருமித் தாக்கம் என்பன வருத்தலாம். பொருள் வரவு சிலருக்குக் கொடுக்கும். சமயத் துறை, வியாபாரத்துறை, நகைத் துறை, செய்தி, ரீ.வி.த்துறை, போக்குவரத்துத் துறை, பத்திரிகைத்துறை, குருத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு பல விதமான மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. ஆலயங்களுக்குச் சென்று வருவீர்கள். கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## துலாம்

சனீஸ்வரனுடன் வியாழன் சேர்ந்திருந்து உதயத்திலிருந்த செவ்வாயைப் பார்க்கும் பொழுது வதந்திகள் பலதிசையிலிருந்து வரும். நல்லவர்களுக்கு சோதனைகள் அதிகம். தொழில்ஸ்தானத்திலிருந்து பல போட்டிக் கணைகள் வந்து கலங்க வைக்கும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் அழுத்தங்கள் இருக்கும். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிவீர்கள். எந்த விஷயத்தையும் சமநிலையில் நோக்குங்கள். தலைவலி, வயிற்றுநோ, தோல்வருத்தங்கள்,

# மகாதேவா ஜோதிடம்

சளித்தொல்லை என்பன சிலரை வருத்தலாம். நீதித்துறை, விவசாயத் துறை, குருத்துறை, கடல்துறை, போக்குவரத்துத்துறை, பத்திரிகைத் துறையினருக்கு அதிக மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. மாற்றங்கள் சகஜமாகும். உதயத்தை சனி, வியாழன் பார்ப்பதனால் அடிக்கடி மனம் பதற்றமடையும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## [illegible]

இந்த உலகம் எப்பொழுதும் நயங்களையே எதிர்பார்கின்றது. மனச்சாட்சியை அதிகாரபீடத்திலும், அதிகபணக்காரரிடமும் அதிகம் எதிர்பார்க்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியாதா? தொழில்ஸ்தானத்தில் தேவையற்ற துன்பநிலைகள் ஏற்படச் செய்யும். நண்பர்கள் விரோதிகளாவர்கள். சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட்டு வாருங்கள். நன்மைகள் ஏற்படும். படபடப்பு, கிருமித்தாக்கம், உஷ்ணபீடைகள், சமியாத்தன்மை, நாரிவலி, வயிற்றுக் கோளாறு என்பனவற்றால் தாக்கம் ஏற்படும். இரும்பு, மின்சாரம், கடல்வேலைகள், வாகனம், ஹோட்டல், மில் சம்பந்தப்பட்ட துறையினருக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## தனுசு

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். புரிந்துணர்வு மிகமுக்கியமாகும். அதன்ால் எந்தப்பிரச்சினைகளையும், சுலபமாக்கிக் கொள்ளலாம் அல்லவா? தொழில்ஸ்தானத்திலும் குற்றம்பார்த்துக் கொண்டு, குறைகூறிக் கொண்டு இருத்தலாகாது. பிடிவாதத்தால் எதிர்ப்பாலாருடன் பகைக்காதீர்கள். உணர்ச்சிவசப்பட்டு கோபம் கொள்ளல், அதிக யோசனை, நரம்புச் சோர்வு, இடுப்பு வலி, சளி வருத்தங்களால் அதிக தாக்கம் ஏற்படலாம். விவசாயம், மருந்து, புடைவை, ஆசிரியர், அரசியல், போக்குவரத்து போன்ற துறையினர்களுக்கு திடீர் ஆதாயங்கள் ஏற்படலாம். திருமணத்தில் தரகர்கள் குறிப்புக்களை மாற்றி எழுதிவிடுவதனால் பல பெற்றோர்கள் அதிக மனச் சோர்வு அடைவதைப் போன்று நீங்கள் மனச்சோர்வு அடைய மாட்டீர்கள். எதற்கும் எதிர்நீச்சலுக்குத் தயாராக இருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## மகரம்

சிலர் வாய்ப்பைப் பயன்படுத்தி ஒருவரை உயர்த்தி, தாழ்த்திக் கூறுவது பயங்கரமானது. அதனால் வீண் சந்தேகங்களை உருவாக்குகிறார்கள். அறியாமையால் பலரை அழிக்க முயலுகின்றார்கள். இறுதியில் தாங்களே அழிவைச் சந்திக்கிறார்கள். தொழில்ஸ்தானத்தில் பொருள் முடங்கும். வீடு, வாகனம் மாற்றம், செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. மீன்விழியாள் வெள்ளியுடன் - மின்னலிடையாள் புதனும் பாம்பு உடலாள் இராகுவும் எட்டி எட்டி ஏழில் நின்று பார்க்கின்றார்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாரால் பலகலகங் கள் ஏற்படலாம். கைகால் தாக்கம், வயிற்றில் புகைச்சல், நரம்புச் சோர்வு, தேகளிவு, அஜீரணம், தலைவலி என்பன வரலாம். சட்டத்துறை, சமயத்துறை, நிர்வாகத் துறை, போக்குவரத்துத்துறை, நகைத் துறை, ரீ.வி, சினிமாத்துறையினர் இலாபமடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வியாழன்.*

## கும்பம்

பெற்றோர்கள் எப்பொழுதும் பிள்ளைகளுடைய மனங்களைப் புரிந்து செயற்பட வேண்டும். அல்லது காலம் தாழ்த்திக் கவலைப்படுவார்கள். ஒரு செயற்பாட்டால் நன்மை தீமை கலந்து நடக்கச் செய்யும். தொழில்ஸ்தானத்தில் வரவுக்கு மீறிய செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். எடுத்தெறிந்து பேசுவதனால் பலருடைய மனங்களை வேதனைப்படுத்துகிறீர்கள். நாரி உளைவு, நரம்புவேதனை, சளி, கைகால் உளைவு, வாய்வுத் தொல்லை, நெஞ்சுநோ என்பன அடிக்கடி தொல்லை கொடுக்கும். கல்வி, செய்தித்துறைகள், போக்குவரத்து துறையினருக்கு நன்மைகள் ஏற்படும். முன்வீட்டுக்காரரைப் பிடிக்காது விட்டாலும் ஆபத்துவருங்காலத்தில் ஓடி வரமாட்டார்களா? எனவே எதற்கும் பொறுமையாகச் செயற்படவும். அன்பு தான் உலகமகாசக்தி எனச் சொல்லுவதை உதாசீனப்படுத்தாதீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

## மீனம்

நலிந்தவர்கள் மீது துன்பம் செய்பவர்கள் இந்த உலகில் அதிககாலம் நிம்மதியாக வாழ முடியாது. எதையும் ஆழமாகச் சிந்தித்து செயற்படும் நீங்கள் தொழில்ஸ்தானத்திலும் பொறுமையாகச் செயற்பட வேண்டும். சளி, நரம்பு, வயிற்று நோ, வாதஉளைவு என்பன வருத்தலாம். குடும்பத்தினருடன் அடிக்கடி போட்டி போட்டபடி இருப்பீர்கள். கடல், போக்குவரத்து, குரு, நிர்வாகம், சங்கீதம், பத்திரிகை, வியாபார துறையினருக்கு பலவித மாற்றங்கள் ஏற்படும். இடமாற்றங்களை இயன்றளவு தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வியாழன்.*

# தூற்றின் கண் தூவிய வித்து

'தூறு' என்றதும் பற்றை முட்புதர், பற்றைக்காடு முதலியன எமது நினைவுக்கு வரும். பண்படுத்தப் படாத முட்புதர்நிலத்தில் விதைத்த வித்துக்கள் பயன் தரமாட்டா. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைத்த வித்துக்கள் முளைத்துச் செழித்து பூவீன்று காய்காய்த்துக் கனிதரும். பண்பாடற்ற சிலருக்குக் கிடைத்த நற்பேறுகள் பயனற்றனவாகிக் கழிந்து போதலும் உண்டு. 'தூற்றின் கண் தூவிய வித்து' என்பதனை ஒரு மரபுத்தொடராகக் கொண்டு பயன் தராத பேறுகள் எனப் பொருள் காணுதலும் உண்டு.

இந்நாளில், தலைமைப் பதவிக்குப் பலர் முயற்சிப்பதனைக் காண்கிறோம். தலைமைப் பதவி சில வேளைகளில் தகுதி அற்றவர்கள் இடத்தும் போய்ச் சேர்ந்து விடுகின்றது. "பேடி கைவாள்" என்று ஒரு தொடர் வழங்கி வருகின்றதன்றோ? பேடியின் கைவாள் அவனுக்குப் பயன் படாது போய் விடுதல் அன்றி, சில சமயங்களில் அவன் உயிர் நீங்குவதற்கும் கருவி ஆகிவிடுகின்றது. வீரன் கையில் தான் வாள் இருத்தல் வேண்டும். அவன் காலம் அறிந்து, இடமறிந்து, தேவையறிந்து அதனைப் பயன் படுத்துவான்.

**தேன்கூடு**

மன்னவனோ, தலைவனோ, தன்கீழ் வாழ்வார்க்குக் காட்சிக்கெளியனாய், கடுஞ்சொல்லன் அல்லனாய் முறைசெய்து நடத்தல் வேண்டும். முறை செய்தலாவது தன்கீழ் வாழ்வார், குற்றஞ் செய்துழி அக்குற்றத்தை ஆராய்ந்து, கண்ணோட்டம், நடுநிலைபேணி, அக்குற்றத்துக்கு நூல்கள் சொல்லும் தண்டனையை வழங்குதலாகும். முறை கோடிய மன்னன் கெடுவான்; அவன் நாட்டில் மழை பெய்யாது. முறை செய்து வாழும் தலைவன் - மன்னன் - தெய்வமாக மதிக்கப்படுவான்.

மனுச்சோழன், முறை செய்த மாமன்னன்; மகனைத் தேர்க்காலில் வைத்தூர்ந்து முறை செய்தான். கரிக்காற் பெருவளத் தான், பழந்தமிழகத்து மன்னருள் ஒருவன். அவன் இளமையிலேயே அரசெய்தி இருந்தான். தம்முள் மாறுபட்டு, தன்னை இளைஞன் என்று இகழ்ந்த முதியோர் பொருட்டு, அவர் அறியாது, தானும் முதியனாய் வந்து வழக்கைத் தீர்த்து முறை செய்தான் என்று வரலாறு கூறுகின்றது.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

தலைமையை ஏற்கும் எவரும், முறை செய்து வாழ வேண்டும். இல்லையேல் பெற்ற பேற்றினால் - தலைமையால் - பயனேதும் இல்லை.

இனி தவஞ் செய்வாரை தங்கருமம் செய்வாரென்று உலகம் புகழும். தவத்தின் தலைநின்றால், வேண்டியவற்றை வேண்டியபடியே எய்தலாம். தவவேடத்துள் மறைந்து நின்று நிறைகடந்து அல்லவற்றைச் செய்தல் தீதாம். நிறை எனப்படுவது நெஞ்சை ஒருவழி நிறுத்துதல். காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகுதல் என்றும் கூறலாம். பொறி புலன்களை அடக்கித் தவம் செய்தல் வேண்டும். நிறை காவாதான் கொண்ட தவம் பயன்அற்றதாகிவிடும்.

வனப்பு என்பது, அழகு மகாலக்குமி தேவியார் மிகு வனப்புடையர். இயற்கையே அழகுடையர். சீதா தேவியார் 'அழியா அழகுடையாள்' என்று பாராட்டப்படுகிறார். நம்முட் சிலர் செயற்கையாகவே நம்மை அழகுபடுத்திக் கொள்கிறோம். தலையலங்காரம், உடையலங்காரம் செய்து பூசுவன பூசிப் புனைவன புனைந்து அழகுபடுத்திக் கொள்கிறோம். அவை அழகல்லனவாம்; நடுநிலை பேணி நல்லம் யாம் என்று நிற்கும் கல்வி அழகே அழகென்பர். அறிவினால் ஒழுக்கம் பேணப்படுகின்றது. ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டது. ஒழுக்கம் உடையார் வழுக்கியும் தீய சொலார். அழகு உயர்வு பெறுவது சீரிய ஒழுக்கம் உள்ளவழியேயாம். இனி திரிகடுகம் பாடலை நோக்குவோம்.

*முறை செய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்*
*நிறையிலான் கொண்ட தவமும் நிறை யொழுக்கம்*
*தேற்றாதான் பெற்றவனப்பும் இவை மூன்றும்*
*தூற்றின் கண் தூவிய வித்து.*

தலைமை பெற்றக் கால் முறைமை பேணி, நிறை காத்துத் தவமியற்றி ஒழுக்கம் ஓம்பி வனப்பை வளர்த்து வாழ்வாங்கு வாழ்வோம்.

தொடரும்

-சிண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

தலை தாண்டிய பேரலை வெள்ளமாய்....
முற்றுப்புள்ளியிட்டு மூச்சை நிறுத்திவிட
மூர்க்கம் கொள்ளும் அதிகார அலைகளின்
ஆர்ப்பரிப்பில் மனித்தின் முகம் மறைத்து
மூசுகின்ற வேளையிலும்.....
அலைக்கரம் தாண்டி அழைக்கும் கரங்கள்..!
இறுதி மூச்சிலும் எவரைத் தேடுது?

**-கிராஞ்சியூரான் -**

தாகத்தின் சோக முடிவாக
நீரின்றி இறப்பதுவும்
சாதகத்தின் பாதக முடிவாக
நீரினிலே இறப்பதும் போல
தங்கள் வாழ்வீடங்களிலே
தங்கிவாழ இடங்களின்றி
ஏங்கித் தாழும் தமிழர்களை
தாங்கி வாழும் தரணியில்
நம்பி(க்)கை கொடுக்க யாருமில்லையே...?

**- மு.வே. அன்பழகன்**
மட்டுவில் தெற்கு.

நேற்று....
உயிரோடு
உடல்கள்
புதைக்கப்பட்டன.....
இன்று...
புதைத்த இடத்தில்
இரு கைகள்
முளைத்துள்ளன
நாளை...
உருவம் எழுந்து
பழிமுடிக்க
புயலாய். வீசும்....!

**- அப்துல்லா -**
பூநகரி.

இதய வால்வுகளின் இறுதி அசைவு!
உதிக்கும் உணர்வுகளின் அஸ்தமனம்!
அலைக்கரங்களை விலக்கி எழும் அபயக்கரங்கள் —அவை
கேட்பது உயிர்வரமல்ல!
செந்தமிழ் மண்ணில்....
சுதந்திரத்துடன் கூடிய சமாதானத்தையே!

**-மா. மணிகண்டன் -**
நயினாதீவு.

தம்பி
எழுந்துவாடா
யுத்தம் ஒன்று
வருகுது!
பத்து விரல்
படைக்க வேண்டும்

**- எம்.பிருந்தா -**
கோண்டாவில்



விடுதலை வரலாற்றில்
வீரகாவியம் படைத்திட(த்)
துடிதுடிக்கும் மன ஏக்கம்;
இங்கே!!..........
சேற்றுக்குள்ளிருந்து வெளியேற முயலும்,
கரங்களின் உணர்ச்சிப் பிரவாகத்தால்
சித்தரிக்கப்படுகிறது!!!

**- நல்லையூர் நித்தியா**

**பயப்படாதீர்கள்....**
**இது முக்குளிப்பல்ல,**
**முத்துக் குளிப்புக்கான**
**முன்னெடுப்பு....!**

**- கலைநேசன் சிவம் -**

**சகோதரா!!**
**கருவிலே தமிழனாய்த் தளர்த்ததால்**
**கருக்கப்பட்டு நீயும்**
**கண்காணாப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டாயோ?**
**மண்ணில் புதையுண்ட உன்னை –**
**'ராஜ மரியாதையுடன்' வந்த**
**'ராஜபக்ஷ' காணத்தானோ**
**கைகளை உயர்த்தி நீயும்**
**கரம் குவிக்க முயல்கிறாய்?**

**- சி.சிவகௌரி -**
மட்டுவில் வடக்கு.

இங்கு
நியாயம்
கிடைக்காது.
கைகளை
உள்ளே வைத்து,
குழிக்குள்ளே
ஊமையாய்
உறைந்து போய்விடு!

**- செ. புனிதா**
தம்பசிட்டி

இது.......
உயிரொன்று பிரியும்
இறுதி நிமிடமல்ல......
புயல் ஒன்று
புறப்பட்டு
பூகம்பமாகும்
முதல் நிமிடம்.......

**- புரட்சி**
பூநகரி.

அலைகளின் ஆர்ப்பரிப்பில்,
அடங்கிய ஜீவனாக ~ நான்....
வராத சிரிப்பில்,
வற்றிப்போன புன்னகையோடு ~ நீ...
வரண்ட இதயத்தோடு காத்திருப்பாய்!
இதுவரை ~ எம்
உயிருடைமையான வள்ளமும்
உருமாறிப்போச்சு.....!
ஏன் உயிருக்கும்
உத்தரவாதமில்லை!!

**- ச.சுஜிதா -**

இறுதிவரை இரு கைகளையும்
உயர்த்தியே - உன்
எதிர்ப்பினைத் தெரிவித்த போது.....
சிதைக்க முடிந்தது - நின்
முகத்தையன்றி இலட்சியங்களையல்லவென்று:
புரிந்திருக்கும் அவர்களுக்கும்!
நிச்சயமாக
அவர்களாலும் மறைக்கமுடியாது!

**- எஸ்.வாரகி**
அச்சுவேலி.

மரணங்கள் மறைக்கப்பட்டன
மௌனங்கள் நீள்துயில் கொண்டது
எனினும்
புதைத்த மண்ணிலிருந்து
விதைத்த வித்துக்களாய்
பத்து விரல் படைத்தெழுந்தோம்
பழி தீர்க்கவல்ல பாதகர்களை
பாரறியச் செய்ய!

**- கவிதா ஜெயப்பிரகாசம்**

கண்மணிகாள்! காணாமற்போன உங்கள் உண்மை நிலைஅறிய
செம்மணியில் குழிதோண்டி சோதிக்க வருகின்றார் - ஆனால்
அம்மணியின் தோழர் அங்கு அழித்திருப்பார் தடயங்களை முன்பே
ஆவியாகக் கரம் நீட்டியேனும் அளித்திடுவீர் சாட்சியங்கள்

**- நாகம்**
மல்லாகம்.

களம் சென்று
உளம் நொந்து - தத்தளிக்கும்
இள நெஞ்சங்கள்
மீள வழியுண்டோ?

**- கே. அரசேஸ்வரன்**

உயிர் பெற்று
உடைத்தெறிந்து,
உன் கரங்கள்
உயரும் வேளை!
ஊமையாய் உள்ளோரும்
ஊனமுற்று இருப்போரும்
உடல் புதைக்கப்
பட்டவரும்,
உன் புகழிசைத்து
ஆடுவாரோ?
உடல் நிமிர்த்தி!!

- மதவடி மைந்தன் -

அகிலத்தை ஆண்ட கரம்
அக்கிரமம் அழித்த கரம்
அபயம் கொடுத்த கரம் - இன்று
அவலமாய் நீளும் நிதம்....

**- கேசி -**

*வதை முகாம் வாழ் நாளில்*
*முடிவாக நான்*
*நீரள்ளாக் கிணற்றினுள்*
*புதைந்த பொழுதில்*
*என்னை வருடின*
*அரசிலைகள்.*
*மனதில்*
*போதிமரம் கனக்க*
*உதட்டில் நெளிந்தது*
*இறுதிப் புன்னகை!*

**- ச.சாரங்கா**
சங்கத்தானை.

போரினிலே நீ இறந்தால்
மாவீரனாக சிலையாவாய்!
நீரினிலே நீ இறந்தால்
மீனுக்கே இரையாவாய்!

**- மௌனிகா**

மண்ணையே
உரமாக்கிய கரங்கள்
களத்தையே
கிலியாக்கிய கரங்கள்
தமிழ் இனத்தையே
பறைசாற்றிய கரங்கள்
உழைப்பையே
உறுதியாக்கிய கரங்கள்
இன்னும்....
ஒரு வரலாற்றுக்காய்.....
தலைசாயாமல்
சிலையாய்
சமைந்து
நிற்கின்றன!

**- நா.சோபினி**

அச்சமின்றி
வல்லமையுடன்
வாழ்பவர்கள்
சுட்டுவிரலை
ஒற்றுமையுடன்
காட்டியவர்கள்
இல்லையென்றால்...!
இப்படித்தான்....
இருகைதூக்கி
உதவிகோரும்
**அவலமே தொடரும்......**

**த.செந்தூரன்**
சாவகச்சேரி.

செம்மணியில் இருந்தாலென்ன....
துரையப்பா விளையாட்டரங்கில்
இருந்தாலென்ன.....
நீ நீட்டுவது
இரண்டு கைகளை;
உன்னை மறைப்பதற்கோ
இரண்டாயிம் கைகள்!

**- முத்து**

உன் கரங்களுக்குத்தான்
விலங்கு போட முடியும்
உன் உணர்வுகள் சிந்தனைகளுக்குமா
விலங்கு போட முடியும்?

**- ரி.சுசி**
உரும்பிராய்.

புதைகுழியினின்றும்
புறப்பட முனையும்
பாவியே! - நீ யார்?
மரணத்தின் ரணங்களும்
மனச்சாட்சியின் மௌனிப்பும்
மலிந்து விட்ட பூமியிது!
வீண்முயற்சி வேண்டாம்!!

**-அனலையூர்சேந்தன்**

***அபாயத்தில் அகப்பட்டு***
***அபயம் கேட்பது***
***தமிழினமா?***
***தமிழா??***

**- சௌஜன்யா -**

யாரும்
கை கொடுக்காதீர்கள்
உங்களையும்
வீழ்த்தி விடுவான்
மூழ்கியிருப்பவன்
கூடவே இருந்து
குழி பறிக்கும்
தமிழனாம்!

**- கதா -**

**ஐயோ!**
**தம்பி 'ராஜபக்ஷ'**
**என்னையும்**
**தோண்டி எடுத்து**
**என் உறவுகளுக்குக்**
**காட்டிவிடு!**

**- எம். சுயர்சன்**
கோண்டாவில்.

புதைக்கப்பட்டது
உடலல்ல:
உண்மை.......
சிதைக்கப்பட்டது
மனிதனல்ல
மனிதம்.......
வதைக்கப்படுவது
நானல்ல
நாங்கள்

**- ஆ.ஜென்சன் றொனால்ட்**
ஈச்சமோட்டை.

மண்வெட்டிகளால்....
மண்டைகள்
சிதறின.....
கட்டப்பட்ட கைகள்
கயிறறுத்துக்.... கேட்கின்றன
சர்வதேசமே!
எமக்கென்ன
நடந்ததென்று
கேள்!

**- சி.சிவாணி -**
கந்தர்மடம்.

## மௌனமொழி -40




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம இது.

உதவி கேட்டு உயர்ந்து நிற்கும்
இவை தமிழன் கரங்கள்!
பதவி கேட்டு பாராளுமன்றில்
பதுங்குது பார் க(ம)ரங்கள்
இருந்து பார் நீ என்றோ ஒரு நாள்
சிரிக்கும் தமிழர் மனங்கள்! அப்போ
ஏற்றி வைக்கும் வெற்றிக் கொடியை
இந்தத் தமிழன் கரங்கள்!

**- சனா -**
சித்தன்கேணி

*உன் உடல் புதைக்கப்பட்டாலும்*
*நின் புயங்கள் வெளியே நீட்டப்பட்டன!*
*நின் கரங்கள் நாளை - பெரு*
*விருட்சமாய் வளர்ந்து.......*
*தமிழ் மண்ணுக்குக் குடைபிடிக்கும் - பின்*
*அது தமிழ் மகனின் குடிலாகும.*

**-பராங்கதன்**
மாதகல்.

# பெருமாளுடன் பேசும் விடயங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்

### ஐ.தே.கட்சி செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் அடிக்கடி நாட்டுக்கு விஜயம் செய்து அமைச்சர்களுடன் ரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறார். இச்சந்திப்புக்களில் பேசப்படும் விடயங்களை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். அதற்காக அரசு மீது அழுத்தம் கொடுக்க வேண்டும்.

கடந்த திங்களன்று நடந்த ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் அக்கட்சியின் செயலாளர் காமினி அத்துகோறள மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கடந்த காலங்களில் மேற்கொண்ட அரசமைப்புக்கு விரோதமான செயல்களைப் பற்றி சிறிதும் சிந்தித்துப் பார்க்காத அரச அவரை மேல் இடங்களுக்குஅழைத்து நடத்தி வரும் பேச்சுக்களை கண்டிக்குமாறு அவர் தமது கட்சி எம்பிக்களிடம் கேட்டுக்கொண்டார். (ஐ-8)

# 4 ஆண்டு காலப்பகுதியில் 13 ஆயிரம் படையினர் பலி

### நாடாளுமன்றில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து கடந்த நான்கு ஆண்டுகளில் 13 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய ரணில் மேலும் கூறியதாவது:-

கடந்த நான்கு வருடங்களில் யுத்தத்துக்கு பல கோடிக்கணக்கான ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சிலர் பணம் சம்பாதிக்கவும் அரசியல் ஆதாயம் பெறவுமே யுத்தம் நடத்தப்படுகின்றதே தவிர வேறு ஒன்றுக்கும் அல்ல.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறது. பாதுகாப்புச் செலவீனம் தொடர்பாகத் தவறான முகாமைத்துவம் மூலம் 19 கோடி 40 லட்சம் ரூபாவை அரசு நாசமாக்கியுள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-3)

# பொருள்களுடன் 'குமண' காங்கேசன் வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 26.

'குமண' கப்பலில் யாழ். செயலகத்திற்கு இரண்டாயிரத்து 500 மெ.தொன் அரிசியும் 600 மெ.தொன். பருப்பும் எடுத்துவரப்பட்டுள்ளன.

தற்பொழுது காங்கேசன்துறைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி இன்னும் ஒருசில நாள்க்ளில் முடிவடைந்துவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் வாகனங்களை ஏற்றிக்கொண்டு 'லங்கா முடித்த' கப்பல் காங்கேசன்துறை நோக்கி வந்துகொண்டிருப்பதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலிலும் செயலகத்திற்குரிய இரண்டாயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி எடுத்துவரப்படுகிறது. (ஐ-5)

## பாடமேம்பாட்டுக் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஜூன் 26

பாடமேம்பாடு பற்றிய கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

இந்தக் கருத்தரங்கில் தமிழ், சமூகக்கல்வி, சமயம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் ஆக்கத் திறனும் கற்பனை வளமும் நிறைந்த ஆசிரியர்களும், பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (க-152)



யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் அஞ்சலிக் கூட்டத்தையும், இரத்ததான நிகழ்வையும் கடந்த 13 ஆம் திகதி நடத்தியது.

முகாமைத்துவபீட மண்டபத்தில் நடைபெற்ற இரத்தான நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம் இது.

மருத்துவ மாணவர் ஒருவர் இரத்ததானம் செய்வதையும் இரத்த வங்கிப் பணிப்பாளர் டாக்டர் இ.சிவசங்கர், மருத்துவ பீடாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத், சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் ந.சிவராஜா பேராசிரியர் எஸ்.பாலசுப்பிரமணியம், இரத்த வங்கியைச் சேர்ந்த டாக்டர் திருமதி கனகசபை ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.

## வித்தகம் குருமணி ஜெயந்தி தின விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 26

சாவகச்சேரி, "வித்தகம்" அருள் நிலையத்தின் குருமணி அருட்திரு பரமசுவாமிகளின் ஐம்பதாவது ஜெயந்தி தின மகுடவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவில், மூத்த தெய்வீகச் சொற்பொழிவாளர் 'சொஞ்சொல்வாருதி' சிவஸ்ரீ ஈஸ்வரசர்மா தலைமையில் காலை9 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

அருட்திரு ஆறுமுகசுவாமிகள், அருட்குரு சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், அருட்கவியரசு சி.விநாசித்தம்பி, துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாமணி சிவஸ்ரீ சோசுந்தரக்குருக்கள், சிவமணி சிவஸ்ரீ சோ. பரமானந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

உதவி அரச அதிபர் பு.சுந்தரம் பிள்ளை, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, சி.சந்திகிரீவன் ஆகியோர் வாழ்த்துரையும் -

நகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவா, வெ.க. தனபாலன், இ. குழந்தைவடிவேலு, மாவை செ.நவரத்தினம் ஆகியோர் சிறப்புரையும் நிகழ்த்துவர். (அ)

### செயலக வளவில்

# யாழ்.மாவட்டப் பதிவாளரின் பணிமனைக்கு தனிக் கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூன் 26.

யாழ். செயலக வளவில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கான மாடிக்கட்டட அடித்தள வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இக் கட்டடத்திற்கு இரண்டு கோடியே இருபது லட்சம் ரூபா (22 மில்லியன்) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தின் அடித்தள வேலைகள் யாழ்.செயலகத்தால் மேற்கொள்ளப்படும். அதற்கு 40 இலட்சம் ரூபா (4மில்லியன்) செலவாகும் என மதிப்பிடப்பட் டுள்ளது. (ஐ-5)

## ஆத்மீக விடுதலையின் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கை ஏழாம்நாள் அட்வெண்டிஸ் யாழ்ப்பாணத்திருச்சபையின் ஆத்மீக விடுதலையின் கூட்டங்கள் இன்றும் நாளையும் நாளைமறுதினமும் மாலை 3.30 மணிக்கு தச்சன்தோப்பு சந்திக்கு அருகில் நடைபெறவுள்ளன. (ஐ-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன்26.

இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்க யாழ்.பிராந்திய அலகினால் நடத்தப்படும் கலந்துரை யாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9.30மணிக்கு நாவலர்வீதியிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

'யாழ்.மாவட்ட புனர்நிர்மாண' வேலைகளும் ஒப்பந்தகாரர்களின் செயற்பாடும்' என்ற பொருளில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் 'இக்ராட்', அரசதிணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகளில் பதிவுசெய்தவர்கள் கலந்துகொள்வர். (ஐ-ரி)

## அடிக்கல் நடும்விழா

யாழ்ப்பாணம், ஜூன்26

வட்டுக்கோட்டை, சிவன்கோவிலடி காந்திஸ்ரீ சனசமூக நிலையத்தின புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும விழா இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினர்களாக, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்யாழ்.மாவட்ட அமைப்பாளா வீ.கே. குகேந்திரன், வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், வலி தென்மேற்கு பிரதேசசபைத தலைவர் அன்ரன்ஜோன்சன ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை, யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், வலிமேற்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பரமேஸ்வரநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (அ)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவுப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தில் புதிய மத்தியஸ்த்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்படும் தெரிவுப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரையும் அங்கு சமுகம் தருமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்த்தர்கள் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிறு காலை 11.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## அறிவுப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன்26

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட விவசாய அறிவுப்போட்டி இன்றுசனிக்கிழமை காலை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (ஐ-152)

## பாடசாலை பவள விழா

அரியாலை, ஜூன் 26.

யாழ். கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் பவள விழா இன்று - சனிக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் தி.கிருஷ்ணகுமார் தலைமையில நடைபெறும்.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும், முன்னாள் அதிபர்களான சமூகஜோதி கா.கணேசதாசன், இ.மகேந்திரன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

விழாவில் பவளவிழாமலர் வெளியிட்டு வைக்கப்படும். மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் இடம்பெறும். (ஐ-17)

காலச்சக்கரச் சுழற்சியில் கடந்து விட்ட துயரச் சுவடுகள் நிறைந்த

## ஓராண்டு நினைவின் நிழல்கள்



குடும்பத்தின்
புகழ்
விளங்க
21-03-1970

அந்நிய நாட்டில்
அநாதையாக
அநியாய
அழிவாகி
7-7-1998

**ச.சுகந்தி**

(முன்னாள், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன எழுதுவினைஞர்)

திதி - திரயோதசி

பன்னிரண்டு திங்களும் அவசரமாய் போனதம்மா
ஆனால் உன்வரவைக் காணவில்லைக் கிளியே
அன்புக்கும் அறிவுக்கும்
அழகிற்கும் களஞ்சியமாய் திகழ்ந்தாயே?
இன்று மௌனமானது தான் விந்தையம்மா...
விதி என்னும் பெயரினிலே சதிசெய்த வேலையம்மா
குள்ளநரியின் பிடியில் உன்மனம்
இரண்டரை மாதமும் குதறப்பட்டு விட்டதம்மா
ஐயகோ! இன்று இத்தரையில் நம்முள்ளம்
மௌமாய் அழுது கொண்டேயிருக்க நீயெங்கோ வசிக்க?
நாமெல்லாம் பாவம் செய்தோமம்மா?
மீண்டும் இம்மண்ணில் எமக்காக அவதரிப்பாயென
வழிமேல் விழிவைத்து காத்திருக்கின்றோம் செல்வமே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திரு. திருமதி.பா.சபாரெட்ணம்
குடும்பத்தினர்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (66920)


நாகம்ஸ்
சுன்னாகம்
கவர்ச்சித்தென்றல
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
(அரசதிரைப்படகூட்டுத்தாபன வெளியீடு)
(உலக அதிசயங்களின் காட்சிகளும் அனேக காட்சிகளும் அமெரிக்காவில் படமாக்கப்பட்டன.)
காட்சிகள்:11.00,2.30(புதியநேரம்)
(66845)

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
விஜய் - ரம்பா
தேவயானி, செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன் வந்தாய்
10.30, 2.30, 5.00
2ஆம் திகதி முதல்
[illegible]
(சி.7973)


## மரண அறிவித்தல்

### வயிரவநாதர் செல்லத்துரை

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், காணிப்பதிவு அலுவலகம், யாழ்ப்பாணம்)

இலக்கம் 13 மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வயிரவநாதர் செல்லத்துரை அவர்கள் 22-06-99 அன்று காலமானார்.

அன்னார் ரெஜினாபூமணியின் அன்புக் கணவரும் இரவீந்தரபாலன் மேரிஆன் (பிரான்ஸ்), அருள்ராஜ் வேஜினிறீற்ரா (சுவிஸ்) ஆகியோரது பேரனும், நிலாளி, நிசாந்தி, கிருஷாந்தன், டெனிசியா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26-06-99) சனிக்கிழமை புதிய நேரம் பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தல் இருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கிறிஸ்ரியன் (ராஜன்)
(மகன்)

13, மவுண்காமல் வீதி,
யாழ்ப்பாணம். (சி-66921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாதே! போகாதே என் கணவா!!



"கெதியாய் எழும்புங்கோப்பா கடைக்கார துரையர் மரநாய் பிடிச்சு வைச்சிருக்கிறாராம்"

அதிகாலையிலே 'திருப்பள்ளியெழுச்சி' மரநாயில் தொடங்கியது. கந்தசாமிக்குக் கோபம் பொத்திக் கொண்டு வந்தது. ஆனந்தமான - சுவையான - ரசனை மிகுந்த - கனவை மனைவி கனகம் குழப்பி விட்டாளே! வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகளிடம்போய் கைநிறைய வாங்கிக் கொண்டு திரும்பி வீடுவந்து சேருவதற்குள் கனவை கனகம் மரநாய் வடிவில் வந்து குழப்பிவிட்டாள். அவர் வீடு திரும்பி வந்தாரா? அல்லது 'லயன் எயர்' மாதிரி அநியாயமாய் இடையில் போனாரா அவருக்கே தெரியவில்லை.

"நீங்கள் என்ன மனுசன்? ஒருக்கா எழும்பிப் போய் பாருங்கோப்பா. அயலட்டையெல்லாம் துரையற்ற கடையடியிலதானே நிக்குதுகள். மனுசன் சரியான விண்ணன்தான். எப்படித்தான் தடம் போட்டு மரநாய் பிடிக்கிறாரோ தெரியாது. இதோட ஆறுக்கு மேல பிடிச்சுப் போட்டார். அவர் பிடிக்கத் தொடங்கிய பிறகுதானே ஊரில கோழியெல்லாம்......."

கனகம் கூறி முடிக்கமுன் கந்தசாமியர் எழும்பி இடைமறித்தார்.

"சீ......உமக்கும் வேலையில்லை. உந்தச் சனத்துக்கும் வேலையில்லை. துரையன் மரநாய் பிடிச்சா உங்களுக்கென்ன? கடையில ராவில மரநாய் வந்து வாழப்பழத்தை திண்டு போட்டு போகுது ஒரு நாளைக்கு ஒரு கிலோக்கு மேல மச்சான் நல்லா வெட்டிப் போட்டு போறார். அவன் மரநாயைப் பிடிக்காம ஊர் நாயையே பிடிக்கிறது? புதுசா என்னத்தையும் பேயையோ, பிசாயையோ பிடித்தாலும் பரவாயில்லை. அந்தாள் கலியாணம் கட்டி பத்து வருஷத்துக்கு மேலாச்சு. இன்னும் குழந்தை குட்டி இல்லை...ம்...என்ன செய்யிறது? அவனுக்கு பொழுது போகக் கடவுள் மரநாய் வடிவில குழந்தையாய் வாறார்."

கந்தசாமியர் நீ..ண்..ட பிரசங்கம் வைத்து நக்கலாகச் சிரித்தார்.

"உங்களுக்கு அந்தாளைக் கண்டால் பிடியாது. சரி எங்கையாவது தூரப்போய் நிண்டாவது பாருங்கோவன்"

கனகம் அவரை தூண்டினாள்.

கந்தசாமியருக்கு கடையில் நிக்கும் கூட்டத்தை பார்க்க ஆசையாகத்தான் இருந்தது. அதேவேளை உள்ளுக்குள் புகைச்சலும் கிளம்பியது.

என்ன மாதிரி சனத்துக்கு மரநாயைப் பிடிச்சு சும்மா சோக் காட்டிக் கொண்டு இருக்கிறான் என்று மனத்துக்குள் நினைத்தார். மொத்தத்தில் தமிழ் கட்சிகள் போல் மனச்சாட்சிக்கு விரோதமாக அவசரகால நிலைமையை மேலும் நீடிப்பதற்கு வாக்களிக்கத் தீர்மானித்தார் கந்தசாமியர்.

"சரியப்பா நான் போய் ஓரமா நிண்டு அமளியைப்பார்த்துக் கொண்டு வாறன். இஞ்சை நிக்க நீர் விடுகிறீர் இல்லை" - உலகக் கோப்பை கிரிக்கெட் மச்சிலை இலங்கைக்கு எதிராக கங்குலி அடித்த 'சிக்சர்' போல் கனகத்துக்கு மேலாக ஒரு பந்தை அடித்துவிட்டு கந்தசாமியர் கடையடிப் பக்கம் நழுவினார்.

"அண்ணை எத்தனை மணிக்கு இவரைப்பிடிச்சனீர்?" போஸ்ட் மாஸ்ரர் முருகேசம்பிள்ளை அமெரிக்க'ரைம்' பத்திரிகை நிருபர் போல் துரையரைப் பார்த்துக் கேட்டார். துரையர் கூட்டத்தை நோட்டமிட்டார். எல்லோரும் மிக ஆவலாய் இருப்பது தெரிந்தது. தீர்வுப் பொதி போல் செத்துப்போய் சுருண்டு கிடந்த மரநாயை சின்னப் பெடியன்கள் தடியினால் தட்டி உயிர் எழுப்பிக் கொண்டு இருந்தார்கள்.

துரையர் தொண்டையைச் செருமி விட்டு தொடங்கினார்.

"பன்னிரண்டு மணிக்குப்பிறகுதான் மச்சான் வந்தவர். மேல பாருங்கோ ஒவ்வொரு கப்பிலயும் தடம் போட்டு வைச்சிருக்கிறன். நைசாய் பழம் சாப்பிட இறங்கினவர். நான் வைச்ச தடத்தில மாட்டுப்பட்டுப்போனார். கையையும் காலையும் உதறியடிச்சு தப்பப் பார்த்தார்.... அதற்கிடையில் நான் வந்திட்டன்..."

துரையர் இடையில் நிறுத்தி கூட்டத்தைப் பார்த்தார்.

ரசிகர் கூட்டம் மிக ஆவலாக இருப்பது அவர் கண்களுக்குத் தெரிந்தது. செத்த மரநாயை வேடிக்கை பார்த்த சின்னப் பெடியன்களும் இப்போது ரசிகர் கூட்டத்தோடு சேர்ந்து விட்டார்கள்.

"தம்பி பிறகு என்ன நடந்தது..?"

நெசவு ரீச்சர் மனோகரி ஆவலாகக் கேட்டார்.

".....லாம்பைக் கொளுத்திப் போட்டுப் பார்த்தா....இவ் கர்முர் என்று கத்திக்கொண்டு நிக்கிறார். ஆள் பெரிசாக் கிடக்குது. எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. குட்டியாய் இருந்தா உயிரோட பிடிச்சுப் போடலாம். இருந்தும் துணிஞ்சு கிட்டப்போனான்.. மனுசி பின்னால நிண்டுகொண்டு 'கவனமப்பா' என்று சொல்லுறா..... லாம்பு வெளிச்சத்தையும் கூட்டிப் போட்டன்.....வெளியால நாயும் குரைக்குது........"

காலையில் பாண் கொடுப்பதற்கு வந்த பேக்கரிக்கார பெடியன், சுருட்டு வாங்க வந்த புரோக்கர் பொன்னம்பலம், பேரப்பிள்ளைகளை நேசரிக்கு அனுப்புவதற்கு கிறீம்பணிஸ் வாங்க வந்த செல்லம்மாக் கிழவி எல்லோருக்கும் கொடுக்க, வாங்க வந்ததை மறந்து 83இல் 'மாநில செய்தி' கேட்டது போல் ஆவலாய் நின்றனர்.

"கொஞ்சம்' கிட்டப் போயிருப்பன்...சனியன் அப்பிடியே தொங்கின படி...உர்ரென்று எனக்கு மேல பாஞ்சுது..!

"உச்ச்ச்..........!"

"ஐயோ....."

"கடவுளே!"

"நல்ல காலம்!"

இது 'புதுக்கவிதை' அல்ல. கதை கேட்டு மேற்படி ரசிகர்கள் தங்களை மறந்து வாயிலிருந்து கொட்டியவை.

"உடன மனுசி என்னைப் பிடிச்சு பின்னுக்கு இழுத்துப் போட்டா... சனியன் பிடிச்சது விறாண்டி இருந்தா......."

"துரையருக்கு நல்லகாலம் தப்பியிட்டார். மரநாயால அவருக்கு சரியான கஷ்டம்"

நூறு கிராம் தேயிலை கடனுக்கு வாங்க வந்த பொயிலை காத்திகேசுவின் மனுசி துரையர் மேல் 'அந்தாதி' பாடினாள்.

இந்திய - பாகிஸ்தான் எல்லையிலிருந்த கார்கில் பகுதியில் ஊடுருவல்காரர்களை வெற்றிகரமாக விரட்டியடித்து விட்டு சொந்த ஊர் திரும்பி சாகசக் கதை சொன்ன இந்தியவீரர் போல் துரையர் தொடர்ந்தார்......

"மனுசி பின்னுக்கு நிண்டு இழுக் காட்டி.... அந்தக்குரங்கு (மரநாய்க்கு மறுபெயர்) என்னை விறாண்டித்தான் இருக்கும். எனக்கு பொறுமை போட்டுது. அவர் அப்பவும் கர்முர் என்று கத்திக்கொண்டுதான் இருந்தார். கண்ணில கதவுக்குப் போடுற பார் தடி தெரிஞ்சுது. இதுதான் சரியான நேரம் உடன தடியை எடுத்தன்....."

ரசிகர்கள் இதயம் அடையாள அட்டை தொலைத்த தமிழ் மகன் இதயம் போல் அடித்தது.

"மெல்ல மெல்ல கிட்டப்போய் தலையில ஒரே போடு!"

"அண்ணை நீங்கள் பிடிச்ச மரநாயில உவர்தான் பெரிய ஆளாக்கும்"

"ஓம்.....உதைவிட பெரிய நாயொன்று இருக்கு. ஆக்களை தூக்கிக்கொண்டு போற அளவுக்கு நான் பாத்தனான்...."

துரையர் மனுசியை பார்த்து கண் சிமிட்டி விட்டு சிரித்தபடி சொன்னார்.

"எ.....ன்.....ன அந்த மாதிரியும் நாய் இருக்கோ?" ரசிகர்கள் பின்னால் அந்த மாதிரி நாய் வந்து விட்டது போல் பயந்தார்கள்.

"அப்ப நாங்களும் இனி வீட்டுக்குள்ளதான் கவனமாய் இருக்க வேணும்."

"துரையன்ன எப்படியும் அந்த நாயைப் பிடிச்சுப் போட்டியளெண்டால் சங்கம் மூலம் உங்களுக்கு ஒரு பாராட்டுவிழா நடத்திப்போடுவம்."

பாராட்டுக்கள், விமர்சனங்கள், நன்றியுரையுடன் 'மரநாய் பிடித்த' கதை தொகுப்பு வெளியீடு இனிதே முடிவடைந்தது.

துரையரின் கடைக்கு எதிரே இருந்த பவளம் அக்கா வளவில் இலுப்பை மரத்துக்கு பின்னால் பதுங்கி நின்று சாகசக் கதையினை கேட்டுக் கொண்டிருந்த கந்தசாமியருக்கு வயிறு எரிந்தது.(அல்சர் காரணம் அல்ல); உடம்பு சுட்டது (நெருப்புக் காய்ச்சல் அல்ல); கை கால்கள் நடுங்கின (மலேரியா அல்ல). பொறாமையை விடப்பெரியது இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லையே!

"அவன்ரை கதையும் வாய்பிளக்கிற சனமும்...தூ..நாயள்.." இந்தியா அண்மையில் அனுப்பிய றொக்கேட்டை விடவும் கந்தசாமியர் அதிகம் எரிந்து புகைந்தார்.

"சனங்கள் தன்ரை பக்கமெண்டவுடன் துரையன் நல்லாத்தான் கதை விடுகிறான்"

வீடு வந்து சேர்ந்தும் கந்தசாமியருக்குக் கொதிப்பு அடங்கவில்லை. நெடுக புறுபுறுத்தபடி பாரதூரமான குற்றச்சாட்டுக்களை துரையர் மீது விட்டுக்கொண்டு இருந்தார். நல்ல காலம் துரையர் பக்கத்தில் இல்லை. இருந்திருந்தால் இன்னுமொரு உள்நாட்டுப் போர் வெடித்திருக்கும். கந்தசாமியர் இப்படி புறுபுறுத்தபடி திரிந்தது கனகத்துக்கு சோனியாகாந்தி போல் பலவிதமான குழப்பத்தை உண்டு பண்ணியது.

"என்னப்பா மரநாயை பாக்க போனதில இருந்து மரநாய் மாதிரி உறுமிக்கொண்டு திரியிறியள்"

"உமக்கென்ன தெரியும்? அவன்ரை கதையை கேளுமன். ஆக்களை பிடிக்கிற மரநாய் இருக்குதாம். தான் அதை பார்த்தவராம். சனங்கள் இந்தக் கதையைக் கேட்டு பயந்தெல்லே போட்டுதுகள்"

**சி.கதிர்காமநாதன்**
(தொல்புரம்)

கனகத்துக்குப் புதுசா இந்தக் கதையைக் கேட்க இன்று சுற்றி வளைப்பாம் என்று கேட்ட நெஞ்சம் போல் நெஞ்சு துடித்தது.

"உதென்ன விசர்க்கதை. கோழியளைப் பிடிக்கிற மரநாயைத்தான் கேள்விப்பட்டிருக்கிறம்......."

கந்தசாமியர் மனைவியின் சந்தேகத்தில் உற்சாகமானார்.

"பாத்தீரே உந்தக் கதையை யார் நம்புவினம்? சனங்களும் பயந்து, அந்த மரநாயை நீங்கள்தான் பிடிக்க வேணுமெண்டு துரையனை ஏத்தி வைச்சிருக்குதுகள்...பொறும் நானும் மரநாய் பிடிச்சுக் காட்டுறன்"

கந்தசாமியர் உணர்ச்சியுடன் கூறினார். தோள்கள் தினவெடுத்தன. கனகம் பேய்க் கனவுக்கண்டு பயந்து அலறியது போல் பெரிதாகச் சிரித்தாள்.

"ஹஹஹக்காகா.......என்னப்பா நீங்கள் மரநாய் பிடிக்கப் போறியளோ? ராவில கரப்பானை கண்டாலே அடிஅடியென்று எனக்குப் பின்னால ஒளிச்சுக் கொண்டு நிண்டு கத்துற நீங்கள்....ஹக்ஹக்ஹகீகா....."

கனகம் 'தமிழ்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்துவிட்டன' என்ற செய்தியை நம்பாத தமிழர் போல் மேலும் சிரித்தாள்.

"கனக்க சிரியாதேயும். நானும் மரநாய் பிடிப்பனென்று உவன் துரையனுக்கு காட்டத்தான் போறன்"

"சரியப்பா எப்படி மரநாயை பிடிக்கப் போறியள்? எங்கட கோழியளெல்லாம் இப்ப கூட்டுக்கதானே படுக்கினம். பிறகு நீங்கள் எப்படி.......?"

கனகம் சந்தேகத்தை கிளப்பினாள்.

"அவசரப்படாதேயும். நாங்கள் ராவில கோழிக்கூட்டுக் கதவைச் சாத்திப்போட்டுத்தானே படுக்கிறம். இனிமேல் திறந்து விட்டால் போச்சு. அதோட கூட்டுக்கதவை ஓராள் போற அளவுக்கு பெரிசாய் செய்து போட வேணும். அப்பதான் மரநாய் பிள்ளையும் உள்ளுக்கு போக வசதியாய் இருக்கும்"

கந்தசாமியர் ஆர்வமாய் சொல்லச்சொல்ல கனகத்துக்கு வானில் பறந்த செய்மதிபோல் தலை சுற்றியது.

"உங்களுக்கு என்ன நடந்து போச்சு..?சும்மா விசர் அலம்பல் அலம்பாமல் சும்மா இருங்கோ!"

சண்டை நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணச் சொல்லி தமிழ்மக்கள், தமிழ் குழுக்கள், அயல்நாடுகள் எனப் பலர் கத்துக்கத்தியும் கேட்காத அரசு போல் கந்தசாமியரும் கனகம் என்னசொல்லியும் கேட்கவில்லை.

இதோ இரண்டு நாள்களில் கோழிக்கூட்டின் கதவை சரிப்படுத்தி விட்டார். இனியென்ன? இரவில் கதவைத் திறந்து வைக்க வேண்டியதுதான்.

இரவு கனகத்துக்கு நித்திரை வரவில்லை.

கந்தசாமியருக்கு நித்திரை வந்தும் கொள்ள முடியவில்லை. போர்க்களத்தில் வீரனுக்கு ஓய்வேது? உறக்கமேது? கந்தசாமியர் பின் வாசல் கதவுக்குப் பக்கத்தில் படுத்திருந்தார். அருகில் ஒரு பொல்லுக் கிடந்தது.

கனகம் கந்தசாமியர் போருக்கு போவதைத் தடுக்கும் இறுதிக்கட்ட சமாதான முயற்சியில் இறங்கினாள்.

"இஞ்சை என்னைப் பாருங்கோவன். உப்பிடி கண்முழிச்சா உடம்பெல்லே பழுதாப் போகும். பேசாமல் கோழிக் கூட்டு கதவைச் சாத்திப் போட்டு வந்து படுங்கோ. எந்த நாய் வந்தா எங்களுக்கென்ன?"

தமிழ்ப்பட அம்மாக்கள் போல் கனகம் உணர்ச்சிகரமாக நடித்தும் கந்தசாமியர் மனதை மாற்ற முடியவில்லை. கடைசியில் பொறுத்தது போதுமென நினைத்து கிளின்டன் மனைவி கிலாரி போல் ஆனாள் கனகம்.

"என்னத்தையும் செய்துதொலையுங்கோ. கடைசீல பொத்தி பொத்தி கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த கோழியளை எல்லாம் வாற மரநாய் பிடிச்சுக் கொண்டு போகப் போகுது. என்ரை கடவுளே......!"

நாள்கள் நகர்ந்தன. மரநாயும் வந்தபாடில்லை. நாட்டில் போக்குவரத்து சீராகவில்லையே....!

கந்தசாமியர் மனம் தளரவில்லை. அன்று இரவும் கந்தசாமியர் மிகவும் விழிப்பாக இருந்தார். நேரம் நள்ளிரவைத் தாண்டியது. கனகமும் அரைகுறை நித்திரையில் இருந்தாள்.

அப்போது கோழிக்கூட்டில் கோழிகள் பயந்து அலறும் சத்தம் கேட்டது. அவ்வளவுதான். கந்தசாமியர் பொல்லைத் தூக்கிக் கொண்டு கோழிக் கூட்டை நோக்கிப் பாய்ந்தார்.

கனகமும் உடன் விழித்து விட்டாள். அடுத்தகணம் ஓடிப்போன கந்தசாமியரிடமிருந்து வந்த அவலக்குரல் கேட்டு கனகம் நடுங்கினாள்.

"ஐயோ! கனகம்!! என்னை காப்பாத்து"

கனகத்துக்கு கொஞ்ச நேரம் கை கால் எல்லாம் உடன் வேலை நிறுத்தம் செய்தன. இதயம் மட்டும் வேலை நிறுத்தம் செய்யவில்லை.

"ஐயோ சொன்னனான். திரும்பித் திரும்பிச் சொன்னனான். மரநாய் பிடிக்கிற வேலை உங்களுக்கு வேண்டாமென்று. கேட்டால்தானே.... ஐயோ! துரையர் சொன்னமாதிரி ஆக்களை பிடிக்கிற மரநாய்தான் வந்திட்டுதோ!"

அடுத்த கணம்......

கனகம் தன்னிலை மறந்தாள்: தன் நாமம் கெட்டாள்; தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே!

"ஐயோ ஓடியாங்கோ!ஓடியாங்கோ!! என்ரை அவரை மரநாய் பிடிச்சுக் கொண்டு போகுது. பவளமக்கா.. பொன்னம்பலமண்ணை, செல்லம்மா.. அவரை காப்பாத்துங்கோ"

கனகம் கத்தியது அந்த நள்ளிரவு நேரத்தில் நித்திரை விசரில் இருந்த அயலவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. குழம்பினார்கள். வெளியில் வரப் பயந்தார்கள்.

கந்தசாமியை மரநாய் பிடித்ததா?

மரநாயைக் கந்தசாமியர் பிடித்தாரா?

கனகம் தொடர்ந்தும் ஒப்பாரியிட்டாள்.

"என்ன மனுசர் நீங்கள்? எவ்வளவு கத்துக் கத்துறன் உதவிக்கு வாங்கோ.......!"

"அடியே கனகம் கத்தாதயடி கத்தாத. வாயை மூடு. கத்திக் கத்தி ஊரைக் கூட்டி என்ரை மானத்தை வாங்க போறீயேடி.....?"

கந்தசாமியரின் குரல் கேட்டது. கனகத்துக்கு உச்சி குளிர்ந்தது.

"கடவுளே எங்கையப்பா இருக்கிறியள்?"

"மெல்லமா கதையப்பா. நான் கோழிக்கூட்டுக்குள்ள இருக்கிறன்."

கனகம் முழித்தாள்.

"ஏனப்பா கோழிக்கூட்டுக்குள்ளே போனனீங்கள்? நான் முட்டையெல்லாம் எடுத்தெல்லே போட்டன்."

"அடி விசரி. இந்த நடுச்சாமத்தில எந்தவிசரன் முட்டை எடுக்க வருவான்? நான் கோழிக்கூட்டை பாத்து ஓடிவரேக்க எனக்குப் பின்னால் ஏதோ ஒன்று ஓடி வந்தது. சரியான பெரிய உருப்படியப்பா. எனக்குத் தலையை சுத்திப்போட்டுது. வேறவழி தெரியேல்ல. ஓடி வந்த கையோட கோழிக் கூட்டுக்குள்ள புகுந்திட்டன்."

"சரி கெதியாய் வாங்கோப்பா வீட்டுக்க போவம். உங்களைத் துரத்திக் கொண்டு வந்தது எங்க நிக்குதோ?"

வீட்டுக்கு போக விரைந்தார்கள்.

"கனகம் அங்க பாரப்பா வாசலுக்கு முன்னால ஏதோ ஒன்று நிக்குது"

கந்தசாமியர் கனகத்துக்கு பின்னால் பதுங்கினார். கனகமும் பயந்து விட்டாள். பின் உருவத்தை கூர்ந்து பார்த்தாள்.

"அட இது பவளமக்கான்ர நாம்பன் மாடெல்லே? பொல்லாத மாடு. மேயக் கட்டிப்போட்டு அவுக்க மறந்து போனா. அது ராவில புது இடமெண்டு வெருண்டு... உதைப் பாத்து கோழியலெல்லாம் கத்த... நீங்களும் அவசரத்தில ஓட...மாடு இன்னமும் வெருண்டு.. அட கடவுளே அருமந்த நித்திரை போச்சு"

முதல் ஓவரில் 'ரன்அவுட்'ஆன துடுப்பாட்ட வீரன் போல் கந்தசாமியார் கனகத்துடன் வீடு திரும்பினார்.

இது வரை நேரமும் எவ்வித கட்டணமும், மின்தடங்கலுமின்றி தங்கள் 'பவர்புல்' கண்களால் இந்த இரவுக்கூத்தை புளியமர உச்சியிலிருந்த மரப்பொந்திலிருந்து அவர்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். கூட்டத்தின் தலைவன் ஒருவனை அழைத்தான்.

"குருவே என்னை அழைத்த காரணம்?"

"மகனே நீ இன்று களம் செல்ல வேண்டும். அதோ அந்த இடம்தான்."

தலைவன் கந்தசாமியின் கோழிக் கூட்டைச் சுட்டிக்காட்டினான்.

தலைவன் கட்டளையை ஏற்று சீடன் சரசரவென புளிய மரத்திலிருந்து இறங்கி கோழிக்கூட்டை அண்மித்தான். கூட்டின் கதவுகள் திறந்தே இருந்தன.

அடிக்கடி தொலைத்தொடர்பு சாதனங்களில் 'சமாதானக் கதவுகள் திறந்தே இருக்கின்றன' என்று அடிக்கடி சொல்லுவார்களே. அது இப்படித்தான் இருக்குமோ என சீடன் நினைத்தான்.


'கர்முர்' என உறுமியபடி அவன் கூட்டுக்குள் பாய்ந்தான். உலகத்திலுள்ள சிறுபான்மை இனம் போல் கோழிகள் அவலக்குரலும் மரண ஓலமும் எழுப்பின. யாரும் காப்பாற்ற முன்வரவில்லை. கந்தசாமியும் வரவில்லை.

(யாவும் சிந்தனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்கள் அவசரக்காரர் என்பது உண்மைதானா?

**கைதடி. எம்.எம்.லிங்கம்.**
'வெற்றி நிச்சயம்' என்று அம்மணி அனுப்பி வைத்த கிரிக்கெட் அணி வாங்கிக் கட்டிக் கொண்டு திரும்பியிருக்கிறதே?




☺ **கிரிக்கெட் அணி மட்டுமா...?**

**அராலி. திருமதி வி.ரூபன்.**
எனது கணவர் அடிக்கடி 'ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ' என்று பாடுகின்றாரே?
☺ **வயதில் மூத்தவர்களை ஆயிரம் பிறை கண்டவர்கள் என்று கூறுவது போல் உங்கள் கணவரும் ஏதோ ஒரு விடயத்தில் ஆயிரம் கண்டவர் போல் படுகின்றது. எதற்கும் எச்சரிக்கையாக இரும்.**

**அளவெட்டி. லலி.**
ஹலோ வித்து! ஒரே நேரத்தில் இரு ஆண்களை விரும்பும் பெண்ணின் நிலை என்ன?
☺ **இரு தோணியில் கால் வைத்த நிலைதான். வழுக்கி விழும் போது பொறுப்பு நிற்க ஆள் இருக்காது.**

**நவாலி. என்.ஜெகன்.**
காவலரணின் முன்-பின் திரியும் பெண் நாய்கள் பற்றிக் தங்கள் கருத்து என்னவோ?
☺ **அதுதான் பெண் நாய்கள் என்று விட்டீரே!**

**அல்வாய். எம்.மணி.**
எனது மனைவி அடுத்த பிறவியிலும் எனக்கு மனைவியாக வர விரும்புகின்றாளே?
☺ **உமக்கு இரண்டு ஆயுள்தண்டனை என்று விதி எழுதப்பட்டிருந்தால் யாா என்ன செய்ய முடியும்?**

**கந்தர்மடம். சுந்தரி.**
இரவில் திடீரென்று 'கரண்ட்' நிற்பது படிக்கின்ற பிள்ளைகளுக்கு கஷ்டமாக இருக்கின்றதே?
☺ **ஆனால் திடீரென கரண்ட் நிற்பது (உள்ளங்கவர்) கள்வர்களுக்கு இஷ்டமாக இருக்கிறதே!**

**யாழ். விவேகி.**
உண்மை அறிவு எது?
☺ **தன்னை அறிவது.**

நடிகைகள் நடிப்பைக் காட்டுவதில் அதிகம் போட்டியிடுவதில்லையே ஏன்?
☺ **ரசிகர்கள் வேறு சங்கதிகளை எதிர்பார்பதால்.**

**சங்கானை. வி.வேலு.**
நைன்ரிகளும் ருவென்ரிகளைப் பார்க்கின்றார்களே?
☺ **உண்டு மகிழ முடியாவர்கள் கண்டு மகிழ்கின்றார்கள். விட்டு விடுங்கள்.**

**கோண்டாவில். மாலா.**
'புருவ் ரீடர்' ஒருவரைத் திருமணம் செய்தேன். அவர் எதற்கு எடுத்தாலும் என்னைத் திருத்துகின்றாரே?
☺ **இரண்டாவது புருவும் கேட்பார். கவனம்.**

**நாவற்குழி. இராஜேஸ்.**
எனது மனைவி எந்த நேரமும் நெருப்பாக நிற்கின்றாளே!



☺ **நீர் நீராக மாறி அணைப்பதுதானே!**


**வரணி. ஆர்.குமரன்.**
நாய்களும் மனிதப் பிறவி எடுப்பதுண்டா?
☺ **உண்டே. பல அலுவலகங்களில் நீரே இந்த அதிசயத்தைக் காணலாமே?**

**தாவடி. ஆர். பிறேம்.**
வித்துவானே! வாழ்வில் இனியது எது?
☺ **'அது'!**

**நாவற்குழி. ரமணன்.**
துன்பத்தின் பிறப்பிடம் எது? இன்பத்தின் அழிவிடம் எது?
☺ **ஆசை!**

**பண்ணாகம். விஜி.**
கணவன் - காதலன் ஒப்பிடுக.
☺ **ஒன்று மூக்கணாங்கயிறு மாட்டிய வண்டில் மாடு. மற்றையது கால் கட்டுப் போடாத காளை.**

**யாழ். ம.சிவன்.**
Marry - Worry ஒலி அளவில் ஒற்றுமை இருக்கின்றதே?




☺ **பொருள் அளவிலும் ஒற்றுமை இருக்கின்றதே! Marry பண்ணியதும் Worry பண்ணத் தொடங்கி விடுகின்றார்களே!**

**நந்தாவில். இந்திரன்.**
தனியார் மருத்துவர் சிலர் சுடுகாட்டுக்குப் பக்கத்தில் உள்ளனரே?
☺ **எல்லாம் உறவினர்களின் வசதி கருதித்தான்.**

**சங்கானை. கோகுல்.**
டாக்டர் தனது முதல் 'ஒப்பிரேஷனின்' போது பயப்படுவரா?
☺ **அவர் ஏன் பயப்பட வேண்டும்? நோயாளிதானே பயப்பட வேண்டும்?**

**நவாலி. செ.சுதா.**
பெண்கள் சிலர் தங்களுக்கு மீசை முளைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்களே. ஏன்?
☺ **மீசை முளைக்காத சில ஆண்கள் பேடி போன்று - பெண்களை மாதிரி - செயற்படுவதால் வந்தவினை இது.**

**கட்டுடை. ஜீவா.**
படையப்பாவுக்குப் பிறகு ரஜினி எதில் இறங்குவார்? ஆன்மீகத்திலா? அரசியலிலா?



☺ **அவர் எப்ப, எங்க, எதில், ஏன் இறங்குவார் என்று சொல்லிக் கொண்டு இறங்குவதில்லை. அவர் இறங்கிறபோதுதான் அது தெரியவரும்.**

**மாவடி. குந்தவை.**
எனது செக் திரும்பியதற்காக டாக்டர் சீறிப் பாய்கின்றாரே?
☺ **அவர் மாற்றிய நோய் திரும்பி வந்திருக்கிறதே. அதற்கு யாரைக் கேட்பதாம்?**

**மானிப்பாய். மீரா.**
இராணுவ முகாம் வாசலில் ஆராய்ச்சி மணி கட்டினால் எப்படி?
☺ **அதை அடிக்கவும் இரண்டு மாதங்களுக்கு முன் 'போம்' (Form) எடுத்து நிரப்பி, கிராம சேவையாளரிடமும், உதவி அரச அதிபரிடமும் சான்று ஒப்பம் பெற்று கையளிக்க வேண்டியிருக்கும்.**


# காதலே இல்லாவிட்டால் வாழ்வு எப்படியிருக்கும்?

**தம்மளை. வி.பாலன்.**
வித்துவா! என் காதலி இளவரசி டயானா போல் இருக்க விரும்புகிறாள். நான் என்ன செய்ய..?
☺ **நீர் சாள்ஸ் போல இருக்க விரும்புகின்றீரா? அல்லது டோடி போல இருக்க விரும்புகின்றீரா என்று கூறினால்தானே பதில் தரலாம்.**

**நல்லூர். எஸ்.கவிதா.**
பல பெண்களுடன் சினேகிதம் வைத்திருக்கும் ஒருவர் தன் காதலியை மட்டும் ஏனைய ஆண்களுடன் பழக அனுமதிக்கிறார் இல்லை. ஏன்?
☺ **அனுபவப் பாடம்தான்.**

**நல்லூர். வே.அகிலன்.**
வித்தூ! காதலே இல்லாதுவிட்டால் மனித வாழ்வு எப்படி இருக்கும்...?
☺ **ஆதாம் - ஏவாளுடன் முடிந்து போயிருக்கும்.**

**தாவடி. அகில்.**
தலைக்கனம் பிடித்தவர்களைத் திருத்தவே முடியாதா?




☺ **யார் சொன்னது? (முடி) திருத்துபவரிடம் சென்றால் தலைக்கனத்தைக் குறைத்து அனுப்புவாரே!**

**வரணி. திருக்குமார்.**
எனது நண்பர் திருமணம் முடித்து ஏழு மாதங்களில் தந்தையாகிவிட்டார். எவ்வாறு என்று புரியவில்லை. இது எந்த வழியோ?
☺ **LBW ஆக இருக்கும். (Love Before Wedding). அது சரி குமாரா! இது உமது நண்பர் கவலைப்பட வேண்டிய விடயமல்லவா? நீர் ஏன் அலட்டிக் கொள்கின்றீர்?**

**ஆறுகால்மடம். வி.ரவி.**
என்னை மனைவி கை நீட்டி அடித்து விட்டாளே?
☺ **ஆத்திரப்படாதீர்! அடிக்கிற கைதான் அணைக்கும்.**

**நல்லூர். சாந்தி.**
பல்கலைக்கழக வட்டார விருந்துகளில் அதுவும் பரிமாறுகின்றார்களே!

# தலைக்கனம் பிடித்தோரை திருத்தவே முடியாதா?

☺ **பழமொழி - 'களவும் கற்றுமற'. புதுமொழி - 'கள்ளும் குடித்து மற'. இது உமக்குத் தெரியாதா?**

**மாவடி. என். நந்தன்.**
ஆண்கள் அவசரக்காரர்கள் என்கிறார்கள். உண்மையா?
☺ **உமக்கு இன்னும் திருமண எழுத்து முடியவில்லைப்போல தெரிகின்றது. எழுத்து முடிந்தவரைப் பார்த்தால் தெரிந்துவிடும்.**

**வல்லை. லிங்கன்.**
சங்க காலத் தலைவனா, எங்கள் கால இளைஞரா புத்திசாலி?
☺ **சங்க காலத் தலைவன் பொருள்தேட காடு, மேடெல்லாம் அலைந்தான்; திரைகடல் ஓடினான். எங்கள் கால இளைஞர் இருந்த இடத்தியே தரகர் மூலம் லட்சம் லட்சமாக வாங்கிக் குவித்துவிடுகின்றார்களே! எனவே யார் புத்திசாலி என்பதை நீரே தீர்மானித்துக் கொள்ளும்.**

**மானிப்பாய். ஆர்.குணளி.**
காதலனுக்கு எதையும் மறைக்கக் கூடாதா?
☺ **மாஜிக் காதலை மறைத்துத்தானே ஆக வேண்டும்?**

**அளவெட்டி. கே.சீலன்.**
எனக்குத் தோஷமாம். திருமணம் செய்தால் நீங்கி விடும் என்கின்றார் சோதிடர். நம்பலாமா?
☺ **லாம்! திருமணம் செய்தால் 'சந்தோஷம்' நீங்கிவிடும் என்பதைச் சொல்வதற்கு சோதிடர்தான் வரவேண்டுமா?**

**பளை. அருச்சுனா.**

**சங்குவேலி. மைக்கல்.**
எனது நண்பி ஆளரவமற்ற வீடுகளுக்குச் செல்கின்றாளே. என்ன நடக்கும்?
☺ **ஆள்களின் அரவம் தீண்டிவிடும். கவனம் என்று எச்சரியுங்கள்.**

**புதுமடம். ஜே.நியூடடன்.**
சில மனைவியர் கணவனை அடக்கி வாழ்கின்றார்களே?
☺ **என்ன 'சில' என்று முழுப்பூசணிக் காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கின்றீர். எழும்பி நின்று ஆடும் ஆட்டங்கள் அடங்குவது அங்குதானே. (அவர்களிடம்தானே!) அடங்கித்தானே வேண்டும்.**

**நல்லூர். எஸ்.எஸ்.தேவன்.**
கண்ணடித்தால் காதல் வரும் என்றார்கள். அடித்தேன். செருப்பு வருகின்றதே?
☺ **என்னய்யா காதலில் அரிச்சுவடி கூடத் தெரியாமல் இருக்கின்றீரே? கண்ணடிப்புக்குப் பதில் சிரிப்பாக இல்லாவிட்டால் செருப்பாகத்தானே இருக்கும்.**

**கொக்குவில். சுஜீவன்.**
வித்தூ! வடக்கு - கிழக்கில் ஆராய்ச்சிமணி கட்டினால் என்ன?
☺ **செம்மணியிலேயே இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை. அதற்கிடையில் ஆராய்ச்சி மணிவேறா? பிறகு அம்மணிபாடு அதோகதிதான்!**

**உரும்பிராய். ரி.சுசி.**
காதல் எந்த மதம்? சைவமா? கிறிஸ்தவமா?
☺ **'மதம்' பிடிக்காத - மதம் கடந்த - மதம் அது. தூய காதலுக்கு கண்ணும் இல்லை; மதமும் இல்லை.**

**அட்டு... கு.சிவநேசன்.**
மிகவும் கஷ்டமானதும் சுலபமானதும் எது?
☺ **மற்றவர்களுக்கு காதில் பூச்சுற்றுவது.**

## இந்த வார ஜோக்குகள்

கைரேகை ஜோஸியர் அவரைச் சந்தித்தார்.
'நான் பலன்களைத் துல்லியமாகச் சொல்பவன்' என்றார்.
அவர் கையை நீட்டினார்.
அவர் பார்த்து 'உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது.'- என்றார்.
"கரெக்ட்" - என்று பதில் வந்தது.
"உங்களுக்கு இரண்டு குழந்தைகள்".
"தவறு எனக்கு மூன்று குழந்தைகள்."
ஜோஸியர் அமைதியாகச் சொன்னார்.
"நீங்கள் அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் அதற்கு நான் என்ன செய்ய...?"

* * *

அந்தப் பெண்ணைப் பரிசோதித்த பெண் டாக்டர் சொன்னார்:-
"உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன். மிஸிஸ்...."
"நான் மிஸிஸ் இல்லை. மிஸ்தான்."
"அப்படியா? உங்களுக்கு ஒரு கெட்ட செய்தி சொல்லப் போகின்றேன் மிஸ்."

# காதலனுக்கு எதையும் மறைக்கவே கூடாதா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொழி உரிமை வேண்டியும் குரல் எழுப்பியவர் தங்கத்தாத்தா!

**தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் 123ஆவது ஜனன தினம் 28-06-99 ஆம் திகதியாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.**

தமிழகத்திற்கு அடுத்த நிலையில் தமிழ் இலக்கியத்தை தகைசான்ற முறையில் வளர்த்த பெருமை ஈழத்திற்குரியது. நல்ல தங்க இலக்கியம் என்று கருதப்படும் சங்க இலக்கியத்திலேயே ஈழத்துப் பூதத்தேவனார் பெயர் இடம்பெற்றதே மிகத்தொன்மையான காலந்தொட்டே ஈழத்தமிழ்ச் சான்றோர் இன்தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்ற செய்தியைப் பாரெங்கும் பறைசாற்றப் போதிய சான்றாய் அமைகிறது. ஈழத்துப் பூதத்தேவனாரைத் தொடர்ந்து அரசகேசரி, புலவா சின்னத்தம்பி, சேனாதிராய முதலியார், முத்துக்கவிராயசேகரர், குமாரசாமிப்புலவர், நவநீதகிருஷ்ண பாரதியார் ஆகியோர் வழிவழி தமிழ்ப் பாக்கள் யாத்துப் புகழ்தேடியுள்ளனர். இவர்கள் வழிவந்து தனக்கெனத் தனியிடம் பெற்று விளங்குபவர்தான் 28-06-1876 இல் தோன்றி 10-07-1953இல் தனது 77ஆம் வயதில் எம்மை விட்டுப் பிரிந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவராவார்.

## பல்லாயிரம் பாடல்கள் பாடிய பாவலன்

தங்க மயமான தோற்றத்தோடு - களங்கமில்லா உள்ளத்தோடு - அகத்தின் அழகு முகத்தில் ஒளிக்க - தங்கத் தகட்டில் வெள்ளிக்கம்பிகளைப் பதித்தாற்போன்ற தாடி மெல்லிய காற்றிற்கு அசைந்து அழகு கொடுக்க - அதனைத் தன் மென்விரல்களால் தடவிக்கொண்டு தமிழ் கூறும் நல்லுலகிற்கு அவர் அள்ளி அளித்த பாடல்கள் ஏறக்குறைய பத்தாயிரம். அத்தோடு உரைநடைக்கட்டுரைகளுமபல. அவற்றை சிறுவர் இலக்கியம், தோத்திர இலக்கியம், சித்தாந்த இலக்கியம், வரலாற்று இலக்கியம், உரைநடை இலக்கியம் என ஐம்பெரும பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## பழைமையைப் பேணிய கவிஞர்

கவிஞர்களின் இயல்பை ஆராயும் போது அவர்களைப் பல வகையில் பிரித்து ஆராயலாம். எனினும் இக்கட்டுரைக்கேற்ப இருபெரும் பிரிவாகப் பிரித்து ஆராய்ந்தால் போதும்.

புரட்சிவெறி கொண்டு பாடுபவர்கள் ஒரு வகைக் கவிஞர்கள். இயற்கை அருள்சுரக்கப்பாடுபவர்கள் மற்றைய வகையினர். பாரதி, பாரதிதாசன், கவிஞர் காசிஆனந்தன் போன்றோரை முற்பிரிவில் சேர்க்கலாம். தாகூர், கவிமணி, சோமசுந்தரப்புலவர் ஆகியோர் பிற்பிரிவினைச் சான்றோர் ஆவர். பாரதி, பாரதிதாசன் ஆகியோர் பழைமையை முற்றாக வெறுக்காது புதுமையில் பெரும் வேட்கை கொண்டு உணர்ச்சி ஆவேசம் உந்தப் புரட்சிப் புயல் வீசக் கவிதை பாடினர்.

கவிமணி, சோமசுந்தரப்புலவா ஆகியோர் பழைமையைப் பேணி புதுமைக்கு இடம்கொடுத்தனர். பெண்மை, நன்மை, எளிமை, அமைதி, அழுந்த கடவுள்பற்று ஆகிய பண்புகள் இக் கவிஞரிடத்தில் தலைதூக்கி நிற்கின்றன. இவர்களது கவிதைகள் உணர்ச்சியையும் அறிவையும் ஏறக்குறைய ஒரே நிலையில் தாங்கி நிற்கின்றன.

## குழந்தைக் கவிஞர்

கவிஞர்கள் மென்மை உள்ளம் படைத்தவர்கள். இந்த மென்மை உள்ளம் குழந்தைகள் உள்ளத்தோடு பெரிதும் ஒத்து விளங்குகிறது. அதனாற்தான் குழந்தைகளை பற்றிக் கவிஞர்கள் நிறையப் பாடியுள்ளார்கள். எமது புலவர் தங்கத் தாத்தாவின் 'சிறுவர் செந்தமிழ்' என்ற நூல் அவரின் குழந்தைக் கவியுள்ளத்தைத் திறம்பட எடுத்துக் காட்டுகிறது.

**சமூகஜோதி கா.கணேசதாசன்**

“சீரும் சிறப்பும் திருவும் பெருக வந்த ஆரும் விரும்பும் அருமருந்தே கண்வளராய்” என்றும் “தெள்ளமுதே தேனே தெவிட்டாத நறும்பாகே உள்ளம் குளிரவரும் ஓவியமே கண்வளராய்” போன்ற தாலாட்டுப் பாடல்களும் -

வெண்ணிலா, பவளக்கொடி, கத்தரி வெருளி, எலியும் சேவலும், மிகப் பெயர்பெற்ற “ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை” போன்ற பாடல்களும்-

குழந்தைகளோடு அவர் உள்ளம் எவ்வளவு தூரம் ஒன்றிப்பிருந்ததென்பதை அழகுற எடுத்துக்காட்டுகின்றன.

## ஆடுகள் பற்றிப் புகழ்பாடிய கவிஞர்

ஆடுகள் தம் வாழ்வில் பல துன்பங்களுக்காளாகியிருப்பினும் வரலாற்றில் - பெருமக்கள் வாழ்வில் - இலக்கியத்தில் - சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. கண்ணன், புத்தர், இயேசுக்கிறிஸ்து, காந்தியடிகள் ஆகிய பெருமக்கள் ஆடுகள் மீது தனியன்பு காட்டியுள்ளார்கள். இதே ஆடுகளைப்பற்றி எமது கவிஞரும் புகழ்ந்து பாடியுள்ளார். ஆடுகளை ஆலயங்களில் பலியிடும் கொடும் பழக்கம் இன்றும் முற்றாக நீங்கவில்லை. “ஆடு கதறியது” என்ற பாடலில் எமது புலவர் அவர்கள், “ஆசைமகனேயென் அன்பான கண்மணியே! நேசத்துரையே நெடும் பயணம் போனாயோ?” என்றும் “அம்மா வெனவழைக்கும் ஆசைத்திருக்குரலை எம்மாதுளங் கொழுந்தே நான் கேட்பதென் நாளோ?” என்றும், “ஏங்கிய கத்தி விழும் போது உடல் நடுங்க ஏங்கியெனைநினைத்தென்னம்மாவோ வென றாயோ?” என்றும் அவர் குறிப்பிட்ட பாடல் வரிகளை நாம் படிக்கும் போது யாமே தாய் ஆடாக மாறி கதறஅழும் நிலை ஏற்படுகிறது.

## மண்ணின் பெருமை பேசியவர்

பிறந்த மண்ணின் பெருமை பேசாதார் பிறந்தும் பிறவாதவரே. பிறந்த மண்ணின் பெருமையை என்னும் போது அங்கு பிறந்தவனும் பெரியவனாகிறான். யாழ்ப்பாணம் தந்த நம் புலவர் தன யாழ்ப்பாண மண்வளத்தை - அங்கு இடம்பெறும் அன்றாட நிகழ்ச்சிகளை - அழகுற அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார். யாழ்ப்பாணத்துப் பெருமைதரும் மரங்களுள் தனிச் சிறப்போடு விளங்குவது பனை மரம். அந்தப் பனைமரத்தின் பெருமை பற்றிக் கற்பனை உள்ளத்தோடும் உவமைச் செறிவோடும் எமது புலவர் பாடிய பாடல்களை நாம் படிக்கும் போது யாம் மெய்மறந்த நிலையில் “பாங்கான பனைமரமே! எமக்கு வாழ்வளிக்கும் கற்பகத் தருவே! உன் பெருமை தான் என்னே!” என்று இயம்பிப் பெருமித உணர்ச்சி கொள்கின்றோம். பனையின் பெருமைபேசிய இதே கவிஞன் பனைதரும் பொருளாகிய பனங்கிழங்கு பற்றியும் அதை எப்படி புழுக்கொடியலாக மாற்றி சுவைத்து உண்ண வேண்டும் என்பது பற்றியும் பாடிய பாடல்களை நாம் பாடும் போது எம்மைப் ‘பனங்கொட்டையா?’ என எம் மாற்றோர் ஏளனம் செய்வதையிட்டு வியப்படையத்தேவையில்லை. மாறாக பனையின் பாங்கினை உணர்ந்து இப்பனை வளம் எய்த வேண்டும். நாம் பனை பல நாட்டி எம் நாட்டின் வளம் பல பெருக்க வேண்டும்.

## பொருளியலில் புரட்சி செய்த புலவர்

“ஆற்றங் கரையில் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்” என்பதை நம் புலவர் அன்றே உணர்ந்துள்ளார். “அடவிகொன்று வீடெழுப்பி ஆங்கிருக்கப்போவமே” என்ற பாடல் வாயிலாக காடுவெட்டி நாடாக்குகின்ற முறையையும் மற்றும் வாணிபம்,கைத்தொழில்கள் பலவற்றில் யாம் ஈடுபட வேண்டும் என்றும் வேண்டுகிறார். “உத்தியோகமே புருஷலட்சண மென்று” யாம் எண்ணி ஏமாறுவது மதியீனம். வீழ்ச்சி தரும் இம்மனப்பான்மையை விடுத்து காணி நிலம் உள்ளவர்க்கே, உடலால் உழைக்கும் உத்தமர்க்கே எம் பெண்களைக் கட்டிக் கொடுப்போம் என்ற மனநிலை தமிழ் மக்களிடம் ஏற்படவேண்டும். இதுவே புலவர் சோமசுந்தரனார் விரும்பிய தமிழருக்குரிய பொருளியல் புரட்சி.

## மொழிக்கு ஒத்த உரிமை வேண்டியவர்

எம் மொழியின் பெருமை பேசிய எமது புலவர் சிறந்த அரசியல் அறிஞராக - தீர்க்கதரிசியாக - விளங்கினார். “தெய்வத் தழிழைச் சிங்களத்தைத் தேசமொழிகள் ஆக்குவோம்.” என்று பாடி இவ்விருமொழிகளையும் ஈழத்தின் இரு கண்களாகக் காண விரும்பிய கவிஞர் “எம்மில் யாரும் சிறியரல்லர் என்று நினைந்து போற்றுவோம்” என்று அறுதியிட்டு உறுதி கூறுகிறார். மேலும் “அஞ்சு விரலும் சேர்ந்திடில் அரிய கருமம் புரியலாம். கொஞ்ச மென்று நோவுறின் கூடுங் கருமமில்லையே”என எச்சரிக்கிறார்.


இவ்விதமாக அவர் யாத்த பாடல்கள்,கட்டுரைகள் பல. இவை அனைத்தையும் நூல் வடிவில் கொண்டு வருவதே அவருக்கு நாம் எழுப்பும் அழியாத நினைவுச் சின்னமாகும். வாழ்க சோமசுந்தரப்புலவர் புகழ்.

*

# சந்திரிகா - பிரபாகரன் சந்தித்து தீர்வுக்கான ஒப்பந்தம் செய்வர்!

## 'நம்புங்கள் நாராயணனின்' ஆரூடம்





**'நம்புங்கள் நாராயணன்' தமிழகத்திலும் இந்தியாவிலும் பிரபலமான ஜோதிடர். கடந்த டிசம்பரில் சென்னையில் நடந்த அனைத்திந்திய ஜோதிடர்கள் மாநாட்டில் 1999 இல் நடக்கக் கூடிய பலன்கள் பற்றி அவர் தெரிவித்த ஆரூடங்களை ஜனவரி முதலாம் திகதி 'தேவி' வாரஇதழ் பிரசுரித்திருந்தது.**

**வழக்கமாக ஜோதிடர்கள் கூறும் புத்தாண்டுப் பலன்கள் புத்தாண்டு பிறக்கும் - பிறந்த - காலத்தில் வாசிப்பதோடு சரி. ஆண்டு முடிய யாரும் பழையதை மீட்டு ஜோதிடர்களின் கூற்றைச் சரிபார்ப்பதில்லை.**

**என்றாலும், தற்போது இந்த ஆண்டின் முதல் பாதி முடிவடைந்த நிலையில் நம்புங்கள் நாராயணனின் ஆரூடத்தை ஒரு தடவை சரி பார்த்தால் என்ன என்று தோன்றியது.**

**அவர் கூறிய ஆரூடத்தின் முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரமாகுகின்றன. சரிபார்த்துத் தெளிவது வாசகர்களின் பணி......!**

**(ஆ-ர்)**

இனி வரவே வராது எனக் கருதப்பட்ட மூன்றாம் உலகப்போர் 1999 இல் கண்டிப்பாக மூளும். இந்த ஆண்டு சனி மேஷராசியில் சஞ்சரிக்கின்றான். மேஷராசியின் அதிபதி செவ்வாய். அவன் போர்க்குணமுள்ளவன்.

செவ்வாயோடு சனி சேரும்போது சில வலுவான நிலைகளின் அடிப்படையில் பெரும்போர்கள் ஏற்படும். இது போன்ற கிரகநிலையில்தான் 1919ஆம் ஆண்டு முதல் உலகப் போரும் 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரும் நடந்தன. அதே விதத்தில் இந்த ஆண்டும் மூன்றாம் உலகப்போர் ஏற்படும். இது ஈராக் - அமெரிக்க யுத்தமாக ஆரம்பித்து பல நாடுகளை ஈடுபடுத்தும். ஈராக் யுத்தம் சதாம் ஹுசைனை இலக்கு வைத்து நடக்கும்.

இந்தியாவும் மூன்றாம் உலகப் போரில் கலந்து கொள்ளும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை அது இந்தியா - பாகிஸ்தான் போராகவே இருக்கும். இந்த உலகப்போரில ஆசிய நாடுகள் அனைத்தும் கடுமையாகப் பாதிக்கப்படும். ஆனால் இந்தியா-பாகிஸ்தான் போரில் தனிப்பட்ட முறையில் இந்தியா மாபெரும் வெற்றிபெறும். அதன் பிறகு இந்தியா ஆசியாவிலேயே வலிமையான தேசமாக விளங்கும். இது தவிர்க்கமுடியாத புதிய எழுச்சியாகும்.

1999 ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு பாரதீய ஜனதா நிலை பலவீனமடைந்து கீழிறங்கும். காங்கிரஸ் மீண்டும் வலுப்பெறும். 1999ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் வரும். காங்கிரஸ் ஆட்சி அமைக்கும். பிரியங்கா எம்.பி ஆவார். சரத்பவார் அல்லது மன்மோகன்சிங் பிரதமர் ஆவார்கள். இவர்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும் பிரியங்கா பிரதமர் ஆவதை யாராலும் தடுக்க முடியாது. இது உறுதி.

ஜூன் மாதத்துக்குப் பிறகு நாட்டின் சில மூத்த தலைவர்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டி இருக்கும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை 1999 இறுதியில் வரப்போகின்ற அந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா சோனியாவோடு கூட்டு வைத்துக் கொள்வார். இந்தக கூட்டணிக்கே நாடாளுமன்றத்தில் அதிக இடங்கள் கிடைக்கும். ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு கர்நாடகாவில் ஜே.எச்.பட்டேல் அரசுக்கு மீண்டும் பெரிய தலைவலிவரும். தப்புவது கடினம்தான்.

1997 டிசம்பர் 22இல் அமெரிக்க அதிபர் பில்கிளின்டனுக்கு நான் எழுதிய கடிதத்தில்1997 டிசம்பர் 24 முதல் 1998 ஓகஸ்ட் 24 வரை அனைத்து விஷயங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். என்று எழுதினேன். அவரும் பதில் போட்டிருந்தார். ஆனால் அவருக்கு எதிரான பல சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. இப்போது நிலைவரம் சரியில்லை. பதவி நீக்கத்திலிருந்து அவர் தப்புவதற்கு நாற்பது சதவீத வாய்ப்புக்களே உள்ளன.

எய்ட்ஸ் நோய்க்கு மருந்து தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்படும். அது சித்தமருத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

பூகம்பம், புயல், எரிமலை, கடல் அரிப்பு இவை உலகம் முழுக்கக் கடுமையாக இருக்கும். இந்தியாவைப் பொறுத்தவரை இதுவரை எந்த வருடமும் இல்லாத மழையும் வெயிலும் இருக்கும்.

இந்த ஆண்டு முழுவதும் தமிழ் சினிமா நிலைமை மீண்டும் ஏற்றம் பெறும். 'படையப்பா' படம் பெரும் வெற்றியடையும். 'மருதநாயகம்' படம் எதிர்பார்க்கிற அளவும் இல்லாமல் மோசமாகவும் இல்லாமல் நடுநிலையாக அமையும். ஆனால் இன்னும் மூன்று வருடத்தில் கமலஹாசனுக்கு நடிப்புக்கான உலகவிருது கிடைக்கும்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் பயனுள்ள நல்ல ஒப்பந்தம் ஏற்படும். இருவருமே சந்தித்துப் பேசுவார்கள். ஆண்டு இறுதிக்குள் தீவிரவாதிகளால் சந்திரிகா உயிருக்கு ஆபத்து உண்டாகும்.

அமெரிக்காவில் பெர்முடா முக்கோணம் (Bermuda Trangle) என்ற இடத்தில் செல்லும் கப்பல்கள்,அதற்கு மேலாகப் பறக்கும் விமானங்கள் போன்றவை திடீரென மாயமாவது பற்றிய மர்மம் இந்த வருடத்தில் துலங்கும். ஓர் அமெரிக்க விஞ்ஞானியும் ஒரு ரஷ்ய விஞ்ஞானியும் சேர்ந்து அந்த மர்மத்தைத் துலக்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

அவரவர் அன்றாடம் செய்யும் கருமங்களில் பேணவேண்டிய பண்புதான் நடுவுநிலைமை. அது யாரோ எவரோ ஒரு சாராருக்கு மட்டும் உரியது என்று மற்றவர்கள் வாளாவிருக்க முடியாது.

நாலுபேரின் பிரச்சினைகளைத் தீர்க்க மத்தியஸ்தம் வகிப்பவர்கள் மட்டும்தான் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில்லை.

ஓகோ என்று கொடிகட்டி வியாபாரம் செய்பவர்கள் கூட நாளை - முதல் இழந்து - தொழில் இழந்து தவிக்கும் நிலை வரலாம். அவர்களது வணிகம் பேணக் குறுக்கு வழிகள் நிலைத்து நின்று உதவா!

பிறர் பொருளைத் தட்டிச்சுருட்டிச் செய்யும் வியாபாரத்தில் பெருக்கம் துரிதமாகத் தெரிந்தாலும் விரைவில் அதன் சாயம் வெளுத்துவிடும்.

தன் கணக்கில் வாழும் போது சிக்கனமாய்ச் சீவியம் நடத்துபவர் - அடுத்தவர் கணக்கிலோ அரச செலவிலோ வாழும் போது காட்டும் இடாம்பீகம் இருக்கிறதே - அதுவும் தன்தொழிலைக் கெடுக்கும் முயற்சியே.

எனவே தன் வணிகம் பேண வேண்டின் பிறர் வணிகம் தனையும் தன்னது போலவே காத்துப் பழகவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தம்போற் செயின்**

- 0120.

(நடுவுநிலைமை முற்றும்)

-அம்பிகைபாகன்-

## துடுப்பாட்டம்.....

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுப் போட்டியிலும், இலங்கை அணியின் இலக்குக் காப்பாளர் றொமேஷ் கலுவிதாரண சிம்பாப்வேக்கு எதிரான தெரிவுப் போட்டியிலும், பாகிஸ்தானிய இலக்குக் காப்பாளர் மொயின் கான் நியூசிலாந்திற்கு எதிரான தெரிவுப் போட்டியிலும் இரண்டாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்தனர். இதுதவிர பாகிஸ்தானின் அப்ரீடி இரண்டாயிரம் ஓட்டங்களையும், சிம்பாப்வேயின் சுழல் பந்தாளர் போல் ஸ்றாங் ஆயிரம் ஓட்டங்களையும் எட்டியுள்ளனர்.

பங்களாதேஷிற்கு எதிரான தெரிவுப் போட்டியிலே ஆஸ்திரேலியாவின் சகலதுறை வல்லுநரான ரொம் மூடி வெறும் 28 பந்து வீச்சுக்களை எதிர்கொண்டு அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். இதுவே உலகக் கிண்ணப் போட்டிகளின் அதிவேகமான அரைச்சதமாகும். இதற்கு முந்திய சாதனை வில்ஸ் உலகக் கிண்ணத் தொடரில் கென்யாவுக்கெதிரான ஆட்டத்தில் இலங்கை அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்கா 29 பந்து வீச்சுக்களில் பெற்ற அரைச்சதம் ஆகும்.

இவ்வாரம் உலகக் கிண்ணப் போட்டிகளின் சில இணைப்பாட்ட துடுப்பாளர் சாதனைகளைப் பற்றி பார்த்தோம். அடுத்த வாரம் சில பந்து வீச்சுச் சாதனைகளோடு தொடர்வோமே.

## குடாநாட்டின்....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

தக்கூடிய பெரும் தாக்குதல் 'ஓயாத அலைகள்- 2' தாக்குதலை விடப் பெரிதாகவும், கடுமையானதாகவும் இருக்கலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அத்தகைய பெரும் தாக்குதலை முறியடிக்கும் திட்டங்களை படைத் தலைமைப்பீடம் கைவசம் வைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இம்முறை புலிகளின் தாக்குதல் திட்டம் ஆனையிறவுத் தளத்தை முற்றுகையிடுவதாக அமைய முடியாது. ஏனெனில் வடக்கே குடாநாட்டு நிலப்பரப்பு படையினரின் பிடியில் உள்ளது. ஆனையிறவுத் தளத்திற்கான விநியோகங்களை கண்டி வீதி வழியாக இலகுவாக மேற்கொள்ள முடியும். அத்துடன் வெற்றிலைக்கேணி முகாமுடன் ஆனையிறவுத் தளத்திற்கு தொடர்புள்ளது. எனவே வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் அமைந்துள்ள தளத்தின் கணிசமான பகுதியையே புலிகள் முற்றுகையிட வாய்ப்புள்ளது.

புலிகளின் தாக்குதல் தீவிரமாக இருந்தால் இயன்றவரை தாக்குப் பிடித்துவிட்டு இறுதியில் தளத்தை கைவிட்டு ஆள் அணி அம்புகளோடு குடாநாட்டுக்குள் பாதுகாப்பாகப் பின்வாங்கிவிட படையினருக்கு வாய்ப்புள்ளது. ஆனால் ஆனையிறவுத் தளத்தை அவ்வளவு இலகுவில் கைவிட படைத்தரப்பு முன்வருமானால் அது அரசுக்கு ஒரு பெரும் பின்னடைவாகவே மாறிவிடும். எனவே மாற்றுத்திட்டங்களை செயற்படுத்தி தளத்தைப் பாதுகாத்துவிட பகீரதப்பிரயத்தனம் செய்யவேண்டி ஏற்படும். வன்னிப் பெருநிலப்பரப்பினுள் புதிய போர்முனை ஒன்றை அதிரடியாகத் திறக்கும் திட்டம் ஒன்றை படையினர் ஏற்கனவே தீட்டி வைத்திருக்கக் கூடும்.

அண்மையில் பூநகரிப்பகுதியில் படையினரைத் திடீரெனத் தரையிறக்கிய 'சுழல் காற்று' நடவடிக்கை போன்ற ஒரு நடவடிக்கை மீண்டும் மிகப் பெரும் எடுப்பில் இடம்பெறலாம். அல்லது தற்சமயம் பாப்பாமோட்டைப் பகுதிகளில் முன்னேறியுள்ள 'போர்க் கோஷம்' படையினர் வடக்கே மன்னார் - பூநகரி வீதி வழியே பெருமெடுப்பில் முன்னேறலாம்.

பெரியதொரு மாற்றுப் படைநடவடிக்கை ஒன்றின் மூலம் மட்டுமே ஆனையிறவு முகாமை தற்காத்துக் கொள்ளமுடியும் என்பது நிபுணர்களின் கருத்து. *

## வாசுகிப் பாம்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திருந்தால் அந்த வளைவுகளில் எழுந்த ஏழு சிகரங்களில் ஏழு ஆச்சா மரங்கள் விண்ணளாவ ஓங்கி வளர்ந்தன. மண்ணால் மூடுண்ட புற்றுக்கு அடியில் உறங்கிக் கொண்டிருந்தது வாசுகி. முதுகில் இருந்த பாரங்கள் அதற்கு உறைக்கவில்லை.

இராமாவதாரம் நிகழ்ந்தது. சீதையைத் தேடி வந்த இராமனுக்கு கிஷ்கிந்தையில் வாசுகியின் நினைவு ஏற்பட்டது.

சுக்ரீவனுடன் இராமன் நட்புக் கொண்டான். சுக்ரீவன் இராம பிரானை இறைவன் அவதாரம் என்று அறிந்திருக்கவில்லை. இருப்பினும் யார் இந்த ஏழு மரங்களையும் ஓரம்பினால் துளைக்கின்றாரோ அவரே வாலிக்குக் காலனாக முடிவார் என்பதை அவன் அறிவான்.

ஆகையினால் இராமபிரானின் திறமையைச் சோதிக்க ஏழு மரத்தையும் ஓரம்பினால் துளைக்க இராமனை ஏவினான் அவன். இராமரும் நேரம் வந்து விட்டதை உணர்ந்து அதற்கு இசைந்தான்.

மரங்களுக்கு எதிரிலே பூட்டிய வில்லோடு, நாணேற்றி நின்றான் இராமன். அவனுடைய திறன் மிகு கண்களுக்குக் கீழே மண்ணுக்குள் வாசுகி படுத்துறங்குவது புலப்படுகின்றது. தனது வலதுகால் கட்டை விரலினால் வாசுகியின் வாலினை ஆழ அமுக்குகின்றான் இராமபிரான். வாசுகி உறக்கத்திலிருந்து விழித்துச் சீறி எழுந்தது. வளைந்த உடல் நேராக நிமிர்ந்து முன்னே உந்தியது. இதனால் முதுகின் வளைவு ஓரங்கள் நிமிர்ந்து ஒரு நேருக்கு வந்தன. அதே போன்று முதுகின் வளைவு ஓரங்களில் இருந்த மரங்களும் தள்ளப்பட்டு ஒரு நேர் கோட்டுக்கு வந்தன. அந்த நேரத்தில் எய்யப்பட்ட இராமனின் பாணம் ஏழு மரங்களையும் துளைத்து மீண்டது. சுக்ரீவன் மகிழ்ந்தான். மறுநாள் வாலி வதம். வாசுகியின் வரம் பலித்தது.

இந்தச் சித்திரத்தைத் ஸ்ரீராமஸ்வாமி கோயிலில் உள்ள ஸ்ரீரா மாயணத் தொடர் ஓவியங்களிடையே காணமுடிகின்றது.

## உலகநாடு.....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

கில் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. தேர்தலைப் பின்போடுவது பாரதீய ஜனதாக் கட்சிக்கு அநுகூலமாக இருக்கப்போவதில்லை. தேர்தலை திட்டமிட்ட தினத்தில் நடத்தினால் காங்கிரஸ் உட்பட பல எதிர்கட்சிகள் கால அவகாசம் போதாத நிலையிலேயே தேர்தலை சந்திக்க நேரிடும்.

தேர்தலுக்கு முன் கார்கில் சண்டையை முடிவுக்குக் கொண்டு வரும் பலம் இன்றும் அமெரிக்காவிடமே இருக்கிறது. பொருளாதாரத் தடை மூலமே பாகிஸ்தானை வழிக்குக் கொண்டு வர முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள். கார்கில் பிரச்சினையில் அமெரிக்க இரட்டை வேடம் போடுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

கார்கில் பிரச்சினையில் அமெரிக்கா பாகிஸ்தானை கண்டித்து வருகிறது. அதேசமயம் பாகிஸ்தான் சர்வதேச நாணய சபையிடம் இருந்து பெரும் தொகையான பணத்தை கடனாகப் பெற அமெரிக்கா உதவியாக இருந்து வருகின்றது.

பாகிஸ்தானுக்கு 156 கோடி டொலர் வழங்க சர்வதேச நாணயச் சபை இணக்கம் தெரிவித்துள்ளது. இதில் ஒரு பகுதியான 5 கோடியே 10லட்சம் டொலர் ஏற்கனவே பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுவிட்டது. அடுத்த பகுதியாக மேலும் 10 கோடி டொலர்கள் அடுத்த மாதம் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட உள்ளது. பாகிஸ்தானைப் பணிய வைப்பதற்கு அமெரிக்காவின் வெறும் வாய்ப் பேச்சுக்கள் பயன் அளிக்கமாட்டா. பொருளாதாரத் தடை மூலமே இது சாத்தியம் ஆகும் என்பது ஆய்வாளர்களின் கருத்து

## விடைகள்


IX ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### கட்டங்களை நிரப்புங்கள்

1.தபசு. 2.பகர. 3.சுரபி.
4.அலகு. 5.லட்டு. 6.குடுவை.
7.பிசகு. 8.சரடு. 9.குடுமி.
10.விலகு. 11.லத்தி. 12.குதிரை.
13.மிதவை. 14.தங்க. 15.வைகறை.

### இயலுமா?

நீங்கள் படம் வரைய வேண்டிய ஒழுங்கு இலக்கமிடப்பட்டுக் காட்டப் பட்டுள்ளது.



### முடியுமா?

பாத்திரங்களில் பாலை மாற்றுவதைப் பின்வரும் ஒழுங்குப்படி செய்ய வேண்டும்.

| 8 லீற்றர் | 3 லீற்றர் | 5லீற்றர் |
|---|---|---|
| 8 | 0 | 0 |
| 3 | 0 | 5 |
| 3 | 3 | 2 |
| 6 | 0 | 2 |
| 6 | 2 | 0 |
| 1 | 2 | 5 |
| 1 | 3 | 4 |
| 4 | 0 | 4 |

## ஏமாற்ற.....

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாகச் சொல்."

"செபஸ்தியானுக்குத்தான்.."

அவன் விழிகள் விரிந்தன.

"ஆர் பொம்பிளை?"

"அழகம்மா.. இரவைக்குச் சோறு கொடுக்கப் போகினம். மரியாத்ததான் சொல்லி அனுப்பியிருக்கிறா.."


அவன் சிலகணங்கள அப்படியே திக்கித்து நின்றிருந்தான். முகம்கழுவக் கிணற்றடிக்குப் போய் நீரை அள்ளி முகத்தில் ஊற்றிக்கொண்ட போதும் இதயத்தின் ஒருபக்கம் வலித்தது. செபஸ்தியன் மீது இனந்தெரியாத பொறாமை ஏற்பட்டது. 'கொடுத்து வைத்தவன்' எனத் தனக்குள் கூறிக் கொண்டான். ஏமாற்றம் அவனைக் கவியத் தொடங்கியது. தன்னை மறு கணம் சமநிலைப்படுத்திக் கொண்டான். விறுவிறென முகத்தைக் கழுவினான்.

"கெதியாக வாருங்கோ..." என்று றோசம்மா குரல் தந்தாள். அவள் குரலிலும் என்றுமில்லாத நிம்மதியும் திருப்தியும் இழையோடுவது தெரிந்தது. பட்டது.

(தொடரும்)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.108



### சொற்சிலம்பம் இல. 108

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................................
விலாசம்: ......................................................................
......................................................................

.............................இங்கே வெட்டுக.................................

முடிவுத் திகதி: 19-06-1999

**இடமிருந்து வலம்**

1. அளவுக்கு அதிகம். 6. சுவை. 7. கம்பு. 8. எரிந்தபின் எஞ்சுவது. 9. ருசி பார்த்தல். 11. பாத்திரம். 13. இதனை மதியால் வெல்ல முடியுமா? 15. சரி செய்தல். 17. மழைகாலம். 18. மேன்மை தங்கிய. 19. இது உடையவர்களின் என்பும் பிறர்க்குரியது. 20. சூரியனின் காலம். 21. பசுமை. 22. குத்துவது இப்படி. 23. கிருபை.

**மேலிருந்து கீழ்**

1. திருமணத்தில் புரோகிதர் காட்டும் நட்சத்திரப் பெண். 2. பத்தும் பறந்திடச் செய்வது. 3. மிதந்து செல்வது. 4. பருத்தல். 5. தந்திரம்மிக்க மிருகம். 8. அறிவிற் சிறந்தோன். 9. ஏமாற்றுதலையும் இப்படிக் கூறுவர். எழுத்து எழுதும் போதும் இது செய்வர். 10. சிரசு. 12. மழைக்குக் கட்டியம் கூறுபவை. 14. மூவுலகு. 16. பொருத்தமான 19. மூத்தவன் மனைவி. 20. வகு. 21. மரம்.

### சொற்சிலம்பம் 106 இன் விடைகள

**இடமிருந்து வலம்**

1.சீவக சிந்தாமணி. 7.வடிவம். 8.திணி. 9.சமர். 10.மாசி. 12.தகும். 13.தலைவி. 14.முரண். 15.சேலை. 16.டமார். 19.பாவலன். 21.பருகி. 23.திடும். 24.அறிவிலி.

**மேலிருந்து கீழ்**

1.சீவன். 2.வடி. 3.கவசகுண்டலம். 4.சிம்மம். 5.தாதி. 6.மணிமாலை. 11.சிவிகை. 12.தர. 13.தலை. 14.முன்பாதி. 15.சேர். 17.மான். 18.அருவி. 20.வடு. 21.பறி. 22.கிலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | திரு.ம.அபராஜிதன், செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு. |
| இரண்டாம் பரிசு:- | க.சிறீபுஸ்பலீலாவதி, கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு. |
| மூன்றாம் பரிசு:- | தையல்நாயகி கந்தையா, 'இந்திரகிரி', கரவெட்டி.. |

இவர்கள் மூவருக்கும் சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 107 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள் அனைத்தையும் சேர்த்து தனி இணைப்பாகப் பிரசுரிக்கலாமே?

‘உதயனாம்’ தினசரி தன்னை
உண்மையாய் விமர்சிக்கின்றேன்
ஆதலால் மனது நொந்து
ஆசிரியரே குறை கொள்ளாதீர்
சதமதோ அறுநூறைத் தந்து
சற்றே அதை படிக்கும் வேளை
இதயமே நோகுதென்பேன்
இதற்கான காரணத்தைச்
சொல்வேன்.

உதயன் மேல் கோபம் கொண்ட
உலுத்தனோ நானுமல்ல
நிதம், நிதம் படிக்கும் நேயர்
நினைவதைக் கூற வந்தேன்
உதயனின் உயர்வைக் காணும்
ஊக்கத்தால் உரைக்கலுற்றேன்
நிதமதைப் படிக்கும் அன்பர்
நீர் துயர் கொள்ளலாமோ?

அட்டைகள் தொலைத்தோர் பேர்கள்
அடைக் கோழி விற்போர் பேர்கள்
மட்டையைக் கண்டெடுத்தல்
மதிப்பது தருவோர் பேர்கள்
பெட்டையைக் கரை சேர்க்க என்று
பெயர் தரும் ‘புரோக்கர்’ பேர்கள்
முட்டைகள் நாய்கள் விற்போர்
முழுப்பக்கத்தில் காலை (1/4) -
ஏற்பார்.

செத்தவர் பெயர்கள் பட்டி
சிவலோகம் அடைந்த தேதி
உத்தமர் உறவுக்காரர்
உதவிய படங்கள் பட்டி
மொத்தமாய் கனடா நாட்டில்
முழுமையாய் இங்கிலாந்தில்
செத்தவர் பரம்பரையைச் சேர்த்து
சிறப்பாகத் தருவீர் பக்கம் பாதி -
(1/2)
என்பதைத் தாண்டி நின்று
எவருமே பாராது விட்டு
மூன்றாம் நாள் புழுத்துக் கண்ட
முதாட்டிக்கு கண்ணீர் அஞ்சல்
லண்டன் வாழ் பேரன் அஞ்சல்
லாவோஸ் வாழ் பூட்டி அஞ்சல்
என்னத்தைச் சொல்வேன் பாட்டி
எல்லாமே உதயன் அஞ்சலிக
ளாச்சே?

திருமண ஓலைக் கென்று
தருவதோ பக்கம் ஒன்று
மருமகள் ‘பூ’ப்பெய்தி விட்டால்
மாமனாருக்கு பக்கம் பாதி
குருக்களாய் பூ நூல் ஏற்றால்
குறைந்தது அரைக்கால் பாதி
அரும் பெரும் பல்கலைக்கழகத்
தார்க்கு
அரைப்பங்கு குத்தகையுமாச்சு.

வீடியோ விளம்பரங்கள்
விமர்சனப் படவகைகள்
நாடியே மானவர் கற்க
நயம்படு ரியூசன் சென்றர்
கூடியே படங்கள் பார்க்க
கொட்டகை விளம்பரங்கள்
ஓடியே வீடியோவுக்கு
ஒரு பக்கம் ஒதுக்குகின்றீர்.

கல்லெடுப்பு அந்தியேட்டி
கனவான்கள் கல்வெட்டுக்கள்
வல்லவர் (ஜே.பி.) ஆக
வாழ்த்துவோர் பல பக்கங்கள்
பல் வகைத் தொலைத் தொடர்பு
பாங்கான கடைத் திறப்பு
இல்லையே இவை என்றிட்டால்
இழப்புத்தான் பணவரவு.

ஐந்தாம் ஆண்டு புலமையில் பரிசு
பெற்றால்
ஆசிரியரைப் பெற்றோர் போற்றி
பெற்றோரை உற்றார் போற்றி
உற்றாரை ஊரார் போற்றி
‘உதயனே’ அனைவரையும்
சய சய போற்றி போற்றி.

பத்திலே எட்டுப்பக்கம்
பகிர்ந்திவை போடுவீர்கள்
மொத்தத்தில் மிஞ்சும் இரண்டு
முழுச் செய்திக்கு இடம்தான் ஏது?
நித்தமும் காலை வேளை
நிதம் நிதம் சா வோலை யாச்சு
இத்தனையும் அறிந்து நாங்கள்
என்னதான் செய்வோம் - ஈசா?

ஆதலால் கோபம் கொண்டு
அடியேனை திட்ட வேண்டாம்
அனைத்தையும் கைவிட்டால்
அடித்துத்தான் பூட்ட வேண்டும்
உதயனும் உதயனாக உயர்ந்து
உருப்பெற்று மிளிர வேண்டும்
விளம்பரங்கள் கல்வெட்டு விவாக
நல்மூர்த்தங்களை தனி ஒரு
இணைப்பாக(Suppliment) தனித்து
அதை
இணைக்க வேண்டும்
செய்தித் தாள் செய்தியோடு
சீராக விளங்கி நிற்க
மற்றவை ஒன்று சேர்த்து
மக்களைக் கவரலாமே?

-அன்பன் சேரலாதன்.

## உங்கள் உள்ளத்திலிருந்து

### மனதை நெருடும் ‘தாயுள்ளம்’

கடந்த 12 ஆம் திகதி சஞ்சீவியில் வெளியான தாயுள்ளம் சிறுகதை வாசித்தேன். வாசிக்கும் போதே எனது மனஎழுச்சியை எப்படி சொல்வதென்றே தெரியவில்லை. சி.சிவாணியின் இக்கதை என்னை உருக வைத்து விட்டது.

ஒரு தாய் தனது பிள்ளைகளை எவ்வாறு பிரித்தறிகிறாள் என்பதை மனதைத் தொடும் வகையில் விவரிக்கிறார் கதாசிரியர்.

அந்த கதையிலுள்ள கரு நிஜமானது.

எமது தாய்நாடு எவ்வாறு சீரழிகிறது? இன்னும் கொஞ்சநாள் போனால் என்ன நடக்குமென்று சொல்லத் தெரியாது. எனினும் மறைந்து போன ஐந்து வருடப் பொற்காலம் மறக்க முடியாத இனிய கனவாயுள்ளது.

இந்தக் காலத்திலும் துணிவுடன் எழுதிய எழுத்தாளர் சிவாணிக்கு எனது வாழ்த்துக்கள்.

**கரவெட்டி. லவா.**

### துணிச்சலான பட்டத்தை கொடுத்த முட்டாள் யார்?

யாரப்பா உதயன் சஞ்சீவிக்கு துணிச்சலான விருது கொடுத்த மடையன்? துணிவென்பது எப்படி வருவது, எங்கிருந்து வருவது என்றே தெரியாத வெறும் முட்டாள்தான் உதயன், சஞ்சீவிக்கு விருது கொடுப்பான்.

உதயன் சஞ்சீவியே உனக்கு இந்த விருது கிடைத்ததால் துணிவு என்பது என்ன? அதன் அர்த்தம் என்ன? என்பதை மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

அப்பாவித் தமிழ்க்கட்சிகளையும் அரசையும் விமர்சிப்பதால் துணிச்சலான பத்திரிகையாகிவிட முடியுமா?

அரசபடைகளோ அல்லது தமிழ்க்கட்சிகளோ தவறுதலாக தன்னும் ஒரு சிறு குற்றம் இழைத்தால் அதைப் பெரிதுபடுத்தி கொட்டை எழுத்தில் போட்டு விமர்சிக்கும் தங்கள் பொன்னான பத்திரிகை - புலிகள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களையும், மக்களையும் படுகொலை செய்யும் போதும் -

மக்களை மிரட்டிக் கப்பம், அடையாள அட்டை என்பன பறித்தெடுக்கும் போதும் -

சிவில் விமானத்தில் சென்ற எமது மக்கள் (அதாவது முன்பு புலிகளால் - மக்களே புலிகள்; புலிகளே மக்கள் என்று சிறப்பு பெற்ற மக்கள் - எந்த மக்களுக்காகப் போராடப் புறப்பட்டார்களோ அதே மக்கள்) சுட்டுவீழ்த்தப்பட்டபோதும் -

அண்மையில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை சீர்குலைக்கும் போது -

மௌனித்து அடங்கி வாழும் - வாளாதிருக்கும் - விமர்சிக்காமல் மௌனம் சாதிக்கும் - தங்கள் பத்திரிகையின் போக்கு கண்டிக்கத் தக்கது.

ஏனைய கட்சிகளை ஒரு தமிழ்க் குழு அல்லது கட்சி என்றும் படையினரை சீருடையினர் என்றும் வர்ணித்து அழகாக வடித்து வார்க்கும் உங்கள் பத்திரிகை, புலிகளை மட்டும் இனந்தெரியாதவர்கள் என்று பிரசுரித்தால் அவர்கள் இனம்காணப்படாதவர்களா? அல்லது இனங்காட்டப்படக் கூடாதவர்களா?

எனவே இந்தப் பட்டத்தை உங்கள் பத்திரிகைக்கு கொடுத்த முட்டாள் யார்?

விருதை திரும்பப் பெறுவது மேலானது, பொருத்தமானதும் என நினைக்கிறேன்.

**யாழ்ப்பாணம். தமிழ்வாணன்.**

### தொடர் நவீனங்கள் இடம் மாறுவது ஏனோ?

சிறுவர்களாகிய நாம் சஞ்சீவியில் ‘சிறுவர் சுடர்’ பகுதியையே விரும்பி வாசிக்கிறோம். அப்பகுதி மூலம் எமக்குத் தெரியாத பல புதிய தகவல்களை தரும் சஞ்சீவிக்கு எமது பாராட்டுக்கள்; நன்றிகள்.

பல வாரங்களாக சிறுவர்சுடர் பகுதி தனிக் கறுப்பு எழுத்துக்களிலேயும் கறுப்பு படங்களிலேயுமே வெளிவருகின்றது. ஆனால் முன்பு நிற எழுத்துக்களிலேயும் நிறப்படங்களிலேயும் வெளியாகியது. தற்போது இல்லை. சிறுவர் சுடர் பகுதியை வர்ணத்தில் பிரசுரிப்பீர்களா? வர்ணத்தில் பிரசுரிப்பது சிறுவர்களது கண்களுக்கு கவர்ச்சியாகவும் இதமாகவும் இருக்குமே!

இம்முறை சஞ்சீவியில் சஞ்சிகை எனும் பகுதிக்குள் வெளியாகும் கோபியின் ‘துடுப்பாட்டம் - அன்றும் இன்றும்’ பகுதி சஞ்சீவியின் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியது. தொடர் நவீனங்களை ஒரே பக்கத்தில் ஒழுங்கில் பிரசுரிக்க முடியாதா? அப்படிப் பிரசுரித்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்குமே!

**மறவன்புலோ. ஜ. ஜதுர்கூஷனா.**

வாசகரே!

**உங்கள் ஆலோசனைக்கு நன்றி.**

**கடந்த வாரம் இலங்கை நேரப்படி வியாழக் கிழமை நள்ளிரவு - அதாவது வெள்ளிக்கிழமை அதிகாலைவரை - நடைபெற்ற உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டம் முடிவடைந்த பின்னரே - உலகக் கிண்ண இறுதியாட்டத்துக்கான விவரங்கள் அடங்கிய - அடுத்த நாள் வெளிவரும் சஞ்சீவிக்குரிய - கட்டுரையை மாணவர் கோபி தயார் செய்ய வேண்டியிருந்தது.**

**கடைசி நேரத்தில் அவர் தயார் செய்து தந்த கட்டுரைக்கு சஞ்சிகைப் பகுதியில் இடமளிக்க முடியாது என்பதால் அதனைச் செய்திப் பக்கத்தில் சேர்த்துக் கொண்டோம்.**

(ஆ-ர்)

### முதல் கவிதை

சஞ்சிகை செய்தி வந்தது
வாழ்வில் இன்பம் தந்தது.
வானிற் தவழும் ஓசையே
வந்து கூறும் இனிமையே.
புதுமை ஒன்று பேசுமே
புகழில் ஆரம் கூறுமே.
இசையின் இன்பம் பாடுமே
இதய தாகம் தருமே.
தமிழின் இனிமை கூறுமே
தாக நீராய் மாறுமே.
தயக்கம் இன்றி பேசுமே
தமிழர் வாழ்வின் கீதமே.
யாழ் நாட்டு மண்ணிலே
வசந்தம் வீசும் தென்றலே
வந்து நாங்கள் பேசுவோம்
வாய் மலர்ந்த புவிமீதே.

**த. சங்குருதாஸ்.**

### சிறந்த கதை

கடந்த 12 ஆம் திகதிய “சஞ்சீவி” இதழில் வந்த “கலைந்து போகும் கோலங்கள்” கதை சிறப்பாக இருந்தது. இராகவனுக்கு எனது பாராட்டுகள்.

ஒரு சிறு சந்தேகம். கதையில் ஹாட்லிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டவர்களுக்கு ஒருவருக்கு ஒரு ரின் சீஸ், ஒரு பைக்கற் கிறீம் கிறக்கர் ஆகியன கொடுக்கப்பட்டதாக எழுதியுள்ளார். நடந்ததா? நடக்கிறதா? நடக்குமா? கற்பனையிலும் நடக்காது. ஏன் ஐயா, வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறீர்!

தம்பி கோபி, கிரிக்கெட் பற்றிக் கட்டுரை எழுதுகின்றார். வரவேற்கின்றோம். ஆனால் டெஸ்ட் போட்டிகளைப் பற்றி “ஊறுகாய்” போன்று ஆங்காங்கே தொட்டுக்கொண்டு செல்லலாம்தானே!

யாரய்யா அந்த ஜெயக்குமார்? தமிழரா? அல்லது ஜெயக்குமாராவா?

**கந்தர்மடம். அ. கோகுலன்.**

### காலத்திற்கு அவசியமான படைப்புக்களை ஆக்குவோம்

இனவிடுதலை என்ற வேள்வியில் தங்களையே ஆகுதியாக்கிக் கொண்டிருக்கும் எம் உறவுகள் வன்னியில் படும் துயரச் சுமையை நாம் மறந்துவிட்டோம். அன்றாடம் எறிகணைகளாலும் அரக்கர்களின் அசுரக்குண்டு வீச்சுக்களினாலும் எத்தனை உறவுகள் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன.? அதைப் பற்றி ஏதாவது சிந்திக்கின்றோமா? அநாவசியமான விவாதங்களை முன்வைத்து முட்டிக் கொண்டிருக்கின்றோம். இங்கே நாம் வீண் சொல்லாடல் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் - வன்னியில் ‘இனி நாங்கள் எங்கே போகலாம்? இந்த எறி கணைவீச்சுக்களில் இருந்து இனி நாம் எப்படித் தப்பலாம்?’ - என்று எண்ணி அங்கு அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றைப் பற்றி ஏதாவது விவாதிப்பதை விடுத்து தேவையற்ற விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல. நவாலியில் தசைத்துண்டுகளாகச் சிதறியவர்கள், செம்மணியில் உவர்மணலில் மீளாச் சிறை வைக்கப்பட்டவர்கள், பங்கர்களோடு தூர்ந்து போனவர்கள்....இவர்களை எல்லாம் நாம் மறந்து இன்று இருப்பவர்களுடன் மிகவும் அந்நியோன்னியமாக ஆடிப்பாடுகின்றோம். இவர்களின் இழப்புக்கள், அவர்களின் உறவுகளுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்? இந்தப் பிரிவுகளின் உறவுகள் மட்டும் சதாகாலமும் துன்பக்கண்ணீரோடுதான் தம் காலம் முழுவதும் வாழப்போகின்றன.

எனவே இவர்களுக்கு ஆறுதல் கூறுவதைப் போல எழுதுவோமா? ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டுள்ள நம் மக்களின் துயரங்களைப் பகிர்ந்து கொள்வோமா? அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். எனவே அதற்கு ஏற்ற மாதிரியான ஆக்கங்களுக்கு சஞ்சீவி இடங்கொடுக்க வேண்டும்.

ஆகவே இன்றைய சூழ்நிலைக்கு அவசியமான வகையில் நாம் ஆக்கங்களைப் படைக்க வேண்டும்.

அதற்கு சஞ்சீவியும் இடங்கொடுக்குமானால் - களம் அமைக்குமானால் - அது நம் இனத்திற்கு காலமறிந்து செய்யும் உதவியாக அமையும்.

**தனங்கிளப்பு. க. துஷியந்தன்.**

### குப்பையை நீக்குங்கள்!

சஞ்சீவியே நீ தாங்கிவரும் செய்திகளை - தகவல்களை - வாசிக்க மாணவர்களாகிய எங்களுக்கு ஆவலாக உள்ளது. ஆனால் நீ அதில் ஒரு குப்பையையும் சேர்த்துவிட்டாயே! அந்தக்குப்பை ‘வித்துவான் பதில்கள்’தான். இப்பகுதி உன்னில் இருப்பதால் உன்னை முழுதாகப் பார்ப்பதற்கு அச்சமாய் இருக்கிறது. எனக்கு அண்மையில் நேர்ந்த அனுபவம் இது.

வீட்டுக்கிருத்திய வீட்டிற்கு சென்றிருந்தேன். அங்கு நான் கதிரையில் அமர்ந்திருந்து சஞ்சீவியைப் புரட்டிக் கொண்டிருந்தேன். நான் ஆசையுடன் வாசித்தது ‘ உங்கள் உள்ளத்தில்இருந்து’ பகுதிதான். அதை நான் வாசித்துக் கொண்டிருந்த போது எனக்கு அருகில் அமர்ந்து இருந்த ஒரு பெரியவர் “வித்துவான் பதில்களும் வாசிக்கிறனீரா?” என ஒரு மாதிரியாகக் கேட்டார். எனக்கு உடனே வெறுத்துப் போய்விட்டது. வாசிக்காமலே இந்த நிலை என்றால் உண்மையாகவே வாசித்தால் என்ன நிலை? ஆகவே என்னைப் போன்று வாசகர்களின் மனக்குறையை நீக்கும் விதத்தில் வித்துவான் பதில்களை அகற்ற வேண்டும். நாம் ஆசையுடன் வாசிக்கும் சஞ்சீவியை வாசிக்காமல் பண்ணப் போகிறாயா? உனக்கே இது நியாயமா? எனவே ஒன்றில் வித்துவான் பதிலை அகற்றிவிடு; அல்லது அவரைக் கொஞ்சம் கண்டித்துவை!

**கொக்குவில். ஜனூஜா.**

### தொடர்ந்தும் பாசுபதன் வருவாரா?

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ‘பாசுபதன்’ எழுதிய செம்மணிப் புதைகுழி பற்றிய கட்டுரை பார்த்து மகிழ்ந்தோம். மீண்டும் தொடர்ந்து பாசுபதனின் - பாதுகாப்புத்துறை தொடர்பான - கட்டுரை வெளிவரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக வெளிவந்த கட்டுரை பலவிடயங்களை வெளிக்கொண்டுவந்துள்ளது. ஆனால் மண்ணியல் தொடர்பாக அங்கு ஏற்கனவே ஒரு தடவை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்து பிரஸ்தாபிக்கப்படவில்லையே! ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை, தேர்தல், தீர்வுப்பொதி; இவற்றில் இவ்வருடம் நிகழப்போவதுதான் என்ன?

**உள்ளும் புறமும்**

குறுமணி

செம்மணிப் புதைகுழி விவகாரம் இப்போது சர்வதேச கவனத்தை ஈர்த்த ஒன்றாகி விட்டது. அது ஐக்கிய நாடுகள் சபைக்கும் கொண்டு செல்லப்படக்கூடும் என்ற நிலைக்கு வந்துள்ளது.

செம்மணியில் தமிழர்களின் மனிதப் புதைகுழிகள் இருக்கின்றன என்ற தகவல் வெளியாகி ஒரு வருடமாகிய பின்னரே அது சம்பந்தமான ஆக்கபூர்வமான ஆரம்பக் கட்டம் நடைபெற்றுள்ளது. இப்படி ஒரு பெரிய விவகாரத்தில் - நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் - சாதாரண குடி மக்கள் - கொன்று புதைக்கப்பட்ட விடயத்தில் அரசாங்கத்தின் மந்த கதி நடவடிக்கைகளும், ஏனோதானோ என்ற போக்கும் ஏற்கனவே விமர்சிக்கப்பட்டவை. அரசு நினைத்திருந்தால் உரிய அக்கறை கொண்டிருந்தால் குடாநாட்டின் கடந்த வருட மாரிக்கு முன்னரே புதைகுழிகளின் உண்மையை வெளிக்கொணர்ந்திருக்கலாம்.

அரசாங்க இயந்திரம் - அதிகாரிகள் ஏதேதோ காரணங்களைக் காட்டி, புதைகுழி தோண்டும் பணிகளைத் தாமதித்து வந்தார்கள். செம்மணியைத் தோண்டினால் அரசாங்கப் படைகள் நடத்திய அக்கிரமங்கள் வெளிவந்துவிடும். அது நாட்டுக்குச் சர்வதேசரீதியான அவமதிப்பையும் பாதிப்பையும் கொண்டு வந்து விடலாம் என்ற அச்சமே அவ்வட்டாரங்களில் மேலோங்கியிருந்தது.

குறிப்பாக மனித உரிமைகளைப் பேணுவதுடன் நிதி உதவி வழங்குவதை மேற்கு நாடுகள் சம்பந்தப்படுத்தியுள்ள இந்த "சகாப்தத்தில்" செம்மணி புதைகுழிகளின் உண்மை வெளிவந்தால் வெளிநாட்டு நிதி உதவி குறைந்துவிடும் என்ற அச்சம் அரசுக்கு இருந்தது. அதனால் இது விடயத்தில் அரசு சறுக்கிக்கொண்டிருந்தது; காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தது.

அரசின் இந்தப் போக்கு குடாநாட்டு மக்களிடம் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் மனித உரிமை அமைப்புகள் மட்டத்திலும் - பெரும் சந்தேக நிலையைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக வந்து விழுந்த அழுத்தங்களே, மாத மத்தியில் இடம்பெற்ற ஆரம்பக் கட்டத்தை செய்வதற்குத் தூண்டியது எனலாம்.

எனினும் இதன் இரண்டாவது கட்டம் மேலும் ஒருமாதத்திற்கு தள்ளப்பட்டிருப்பது மக்கள் மனதில் மீண்டும் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

முதலாவது கட்டத்தில் இனங்காணப்பட்ட இரண்டு எலும்புக்கூடுகளோடு மேலும் இரண்டைத் தோண்டி எடுக்கவும் மாரி காலம் தொடங்கவும் சரியாகி விடும். மழைகாலத்தில் புதைகுழிகளைத் தோண்டுவது எப்படியென்ற "நியாயமான" கேள்வியோடு புதைகுழிகளைத் தோண்டுவது இடைநிறுத்தப்படலாம் அல்லது முற்றுப்புள்ளியே வைக்கப்பட்டு விடலாம் என்பதே இப்போதைய சந்தேகத்துக்குக் காரணம். இது விடயத்தில் மாரிகாலம் தொடங்கும் முன்னர் தோண்டும் வேலைகள் முடிவடைய வேண்டும் என்று நீதிவான் கணித்திருப்பது நல்ல அறிகுறியாகும்.

எனினும் மூன்று வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற அநீதியை வெளிக்கொணர்வதிலும் தாமதம் உண்டாகுமோ என்ற சந்தேகம் உண்டாவதில் வியப்பு எதுவும் இல்லை.

1996 ஆம் ஆண்டு ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் காணாமற் போன தமது பிள்ளைகளுக்கு என்னாயிற்று, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதனை அறிவதற்கு துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த பெற்றோர்களின் துயரத்தை உணர்ந்து கொள்ளாது வெறும் விசாரணைகள், விபரம் திரட்டுதல் என்றவையோடு அரசு காலம் கடத்தியது. இத்தகைய புதைகுழி முடிவுதான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அப்போதே பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் பெற்றோர்களோ அதனை நம்பமறுத்தார்கள்; தங்கள் பிள்ளைகள் எங்காவது தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றே நம்பினார்கள்.

அதனால் மகஜருக்கு மேல் மகஜர் அனுப்பினார்கள். ஆத்தாத கட்டத்தில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து தங்கள் பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்ற தகவலையாவது கூற வழி செய்யுங்கள் என்று மன்றாடினார்கள். ஆறு மாதத்திற்குள் விசாரணைக்குழு நியமித்து உங்கள் பிள்ளைகளின் நிலையைத் தெரிந்து கொள்ள வகை செய்கிறேன் என்ற வாக்குறுதியோடு சந்திப்பு முடிந்தது. நானும் ஒரு தாய் தான், பிள்ளைகளைக் காணாது தவிக்கும் உங்கள் மனக்கவலையை உணர்கிறேன் என்று பச்சாத்தாபம் கலந்து பேசியதோடு சரி!

ஜனாதிபதியின் ஆறுமாத கால அட்டவணை கடந்து செல்லவும், கிரிஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளி செம்மணி புதைகுழிகள் குறித்து தகவல் வெளியிடவும் சரியாக இருந்தது. ஜனாதிபதி நியமிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட விசாரணைக்குழுவின் கதையும் காற்றோடு கலந்தது!

உண்மையை வெளிக்கொண்டு வருவது அரசுக்குத் தயக்கம் இருந்திருக்காவிடில் செம்மணி புதைகுழிகளைத் தோண்டும் பணிகள் கடந்த வருடம் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். குடாநாட்டில் கடந்த வருடம் ஒக்ரோபர் பிற்பகுதிக்குப் பின்னரே மாரி காலம் தொடங்கியது. இவ்வாறெல்லாம் பின்னடித்து பின்னடித்து ஆமை வேகத்தில் நகர்ந்து - அதற்குக் காரணங்கள் கூறப்பட்டு - இந்த மாதம் தொடங்கப்பட்ட புதைகுழி தோண்டும் வேலைகள் முதலாவது கட்டத்தோடு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

1996 ஓகஸ்ட் மாதத்தில் காணாமல் போனதாகக் கருதப்பட்ட இரு அப்பாவி இளைஞர்களின் - சாதாரண குடிமக்களின் - எலும்புக்கூடுகள் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட பின்னர் அதே காலப்பகுதியில் - முன்னுக்குப் பின்னான காலத்தில் - காணாமற்போன பிள்ளைகளின் பெற்றோரின் மனங்கள் எவ்வாறு ஏங்கும், வேதனைப்படும் என்பதனை அரசும் அதன் அதிகாரிகளும் உணரவில்லை. நிபுணர் வெளிநாடு செல்கிறார், அது இது என்று காரணங்களை முன் வைத்து புதைகுழி தோண்டும் வேலைகளை ஒரே முறையில் செய்து முடிக்காமல் மேலும் காலம் கடத்தும் போக்கே தென்படுகிறது.

## மூன்றாந்தரப்பின் அவதானிப்புக்கள்

இதனால் இந்த ஏற்பாடுகள் எல்லாம் வெறுமனே வெளி உலகத்தைச் சமாளிப்பதற்கு அல்லது நல்ல பெயர் வாங்குவதற்கான நாடகம் தானோ என்று குடாநாட்டு மக்கள் மட்டும் அன்றி தமிழ் மக்கள் எல்லோருமே, நியாயசிந்தையுள்ள சகலருமே இன்று சந்தேகம் கொள்கிறார்கள்.

# செம்மணி விவகாரத்தில் மூன்றாந்தரப்பு; நிலைமையைச் சீராக்க உதவுகிறது

இந்தச் சந்தேகம் ஆரம்பகட்டப் பணிகளில் பார்வையாளராகக் கலந்து கொண்ட வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் அவர்கள் -

- செம்மணிப் புதைகுழி விவகாரத்தைச் சரியான விதத்தில் முன்னெடுத்துச் செல்லுமாறு அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுத்துள்ளோம். தேவைப்பட்டால் ஐக்கியநாடுகள் மட்டத்திலும் இவ்விவகாரத்தை முன்னெடுப்போம். செம்மணிப் புதைகுழி விசாரணைகள் சர்வதேச சட்டங்களுக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டும். - என்று கூறியுள்ளனர்.

அது மட்டுமன்றி செம்மணி புதைகுழி தோண்டும் பணியின்போது வெறும் பார்வையாளர்களாக அன்றி முழுமையான பங்காளர் ஆகுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதியான இங்கிரெட் மசாஜ்ஜே அம்மையார், ஆசிய பவுண்டேசன் பிரதிநிதி மார்க் மக்கென்னா, மனித உரிமைகளுக்கான மருத்துவ அமைப்பின் பிரதிநிதிகளான டாக்டர் ஹெவின் லீ, டாக்டர் வில்லியம் ஹெக்லண்ட், டாக்டர் மெலிசார் கோணர் ஆகியோர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்ட தகவல்கள் இதுவிடயத்தில் அவர்களுக்குண்டான அதிருப்தியையும் சந்தேகத்தையும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

பத்திரிகையாளர் மாநாட்டை நடத்துவதற்கு முன்னர், அவர்கள் அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர். தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். அரச அதிகாரிகளிடம் தாம் பல விடயங்களை முன் வைத்திருப்பதாக பத்திரிகையாளர் மாநாட்டில் அவர்கள் தெரிவித்தனர். அவற்றுள் சில இவை:-

* செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் சகல மனிதப் புதைகுழிகளையும் மாரி காலத்துக்கு முன்னர் தோண்டி முடிக்க வேண்டும்.

* இந்தப் பணிக்கு கூடுதல் நிபுணர்கள் விசேட நிபுணர்கள் தேவைப்படின் அதற்கு நாம் ஏற்பாடு செய்வதற்குத் தயார்.

* வடக்கில் காணாமற் போனோரின் பெற்றோரிடம் கூடுதல் தகவல்களைப் பெறுவதுடன் அவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்க வேண்டும்.

* செம்மணி விவகாரம் தொடர்பான சாட்சிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் உடனடியாகத் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும்.

* விசாரணைகளின் போது தெரியவரும் தகவல்களை, கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டவர்கள் எனக் கருதப்படுவோரின் உறவினர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்; இறுதிச் சடங்குகளை நடத்தவும் அனுமதிக்க வேண்டும்.

* காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் முதல் பல முக்கிய விடயங்கள் தெரியவந்துள்ளன. அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாததால், தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தில் அவர்கள் தமக்குத் தெரிந்த தகவல்களை வெளியிடவில்லை.

* அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

* செம்மணி விவகாரத்தில் அரசு தொடர்ந்தும் வெளிப்படையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் பார்வையாளர் அந்தஸ்து வழங்க வேண்டும்.

* தோண்டி எடுக்கப்படும் எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டால் இறந்தவர்களின் உறவினர்களுக்குத் தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும்.

* செம்மணியில் கிடைத்த இரண்டு எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் அரசாங்கம் அறிக்கை எதனையும் வெளியிடாமை கவலைக்குரியதாகும்.

வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளின் மேற்படி அவதானிப்புக்கள் இது விடயத்தில் அரசிடம் தட்டிக்கழிக்கும் போக்கு உண்டு என்ற சந்தேகத்தை உண்டாக்கி உள்ளது.

அரசிடம் வெளிப்படையான போக்கு அவசியம் என்றும், அறிக்கை வெளியிடாமை கவலை தருவதாகவும் சர்வதேச சட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது சர்வதேச பார்வையாளர்களின் கணிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை எவருக்கும் நன்கு புலப்படுத்தும்.

சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமைகள் நிறுவனங்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டதால் அரசு இது விடயத்தில் தான்தோன்றித் தனமாகவோ, ஏதேச்சையாகவோ நடந்து கொள்ள முடியாது என்ற நிலை தோன்றியிருப்பதை மறப்பதற்கில்லை. அரசாங்கம் "தட்டிக் கழிக்க" நினைத்த பல விடயங்கள், அம்சங்கள் இனித்தவறிப் போகாது என்ற நம்பிக்கையையும் தருகிறது.

செம்மணியில் மட்டுமல்ல, வடக்கு - கிழக்கு முழுவதிலுமுள்ள மனித புதை குழிகள் எல்லாவற்றையும் தோண்டி உண்மையை வெளிக்கொணர வேண்டும் என்ற வெளிநாட்டு அமைப்புக்களின் அழுத்தம் உரியவாறு "வேலை" செய்தால் சரிதான்!

அரசாங்கம், தேர்தல்களை முன்னெடுக்க முனையும் இவ்வேளையில், புதைகுழிகள் சமாச்சாரம் அதற்குப் பலவழிகளாலும் பாதிப்புக்களை உண்டாக்கப்போகிறது. அதன் கைகளை இறுக்கிக் கட்டப் போகிறது என்றும் சொல்லலாம்.

எப்படியோ, மூன்றாம்தரப்பு ஒன்றில்லாவிடில் இலங்கையில் காரியங்கள் சீராகவும் நேராகவும் நடைபெறுவது கஷ்டமானதே என்பதனை செம்மணி விவகாரம் எடுத்துக்காட்டுகிறது. இங்கே அரசாங்கமும் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த தமிழ்ப் பெற்றோரும் சம்பந்தப்பட்ட இரு தரப்புகள் என்றால் -

சர்வதேச உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் மூன்றாம் தரப்பினர் ஆவர்.

மூன்றாம் தரப்பினரான சர்வதேசப் பிரதிநிதிகளின் அவதானிப்புகள் அரசின் போக்கை நேராக்கவும் சீராக்கவும் உதவும் என்ற நம்பிக்கை தமிழ்ப் பெற்றோருக்கு இப்போது ஏற்பட்டுள்ளது.

அதாவது மூன்றாந்தரப்பு இல்லையென்றால் அரசதரப்பு தனது எண்ணப்படி, விருப்பப்படி கருமமாற்றி புதைகுழி விவகாரத்திற்கு ஒரு கட்டத்தில் முற்றுப்புள்ளி கூட வைத்துவிடலாம்: உண்மை வெளிவராது மறைத்து விடலாம்: என்ற அவநம்பிக்கைகள் தமிழ்ப் பெற்றோர் மனதில் தோன்றின.

அதனைப் போக்க மூன்றாந்தரப்பினரின் ஆலோசனைகளும் அழுத்தங்களும் உதவும் என்ற நிலை உருவாகியுள்ளது. ஆகையால் புதைகுழி விவகாரம் நேர்சீராகி நிமிரும் என்று நம்பலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் ஏன் இன்றியமையாதது என்பதற்கு செம்மணி நல்ல முன் உதாரணம்!

அரசுக்கு இது புரியுமா? அல்லது மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை வெட்டிக் கொண்டு வேறு வழி நடக்கவே விளையுமா? பொறுத்திருந்து பாாப்போமே!

* * *

போர் மேலும் தொடருமா? சமாதானப் பேச்சுக்கு வாய்ப்பு ஏதாவது உண்டா? ஜனாதிபதித் தேர்தல், அல்லது பொதுத்தேர்தல் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்று இவ்வருடம் நடைபெறுமா? அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வகுத்துள்ள பொதி(அரசமைப்புத் திருத்தம் என்றவகையில்) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா?

பத்திரிகைகளைப் படித்ததும் மக்கள் மத்தியில் எழுந்து பதியும் கேள்விகளில் இவை சிலவாகும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் போர் நிறுத்தப்பட வேண்டும்; தங்கள் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வு கிடைக்க வேண்டும் என்ற இருமுனைப்பட்ட வேண்டுதல்களுடன் உள்ளனர். போர் நிறுத்தப்பட்டால்தான் அவல வாழ்க்கை மாறும். அரசியல் தீர்வு மூலம் சமாதானம் பிறந்தால் அது மட்டுமே நிம்மதியான, பாதுகாப்பான வாழ்க்கையைத் தரும்.

ஆனால் அவர்கள் விரும்பும் இரண்டும் இப்போதைக்குச் சாத்தியம் இல்லை என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முக்கிய பங்கு வகிக்கும் தரப்பாக விளங்கும் விடுதலைப்புலிகள் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு மூன்றாந்தரப்பு மத்தியஸ்துடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் என்று அறிவித்துவிட்டது. இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பகிரங்கமாக அறிவித்து 7 மாதங்கள் ஆகின்றன. ஆனால் அதனை நாடிச் செயற்படும் நிலையில் போக்கில் அரசாங்கம் இல்லை.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்க அரசு தயாரில்லை. அத்தோடு நிபந்தனைகளோடு மட்டுமே பேச முடியும் என்றும் தெரிவித்து வருகிறது. விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் தமிழீழம் என்ற நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வரமாட்டார். முந்திய அனுபவத்தை கொண்டு அவர்களுடன் பேசுவதற்கு கூசுகிறது. உண்மையாகத் பேச்சுவார்தையை விரும்புகின்றனர் என்பதை எவ்வாறு நம்புவது?

இத்தகைய நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சைத் தொடக்குவதால் ஆக்கபூர்வமான பலாபலன்கள் எதுவும் விளையும் என்று அரசதரப்பு நம்பவில்லையாம்.

இதே கருத்தையே கொழும்புக்கு வரும் வெளிநாட்டு அரசியல் அவதானிகளுக்கு அரசதரப்பு அங்கு வைத்து ஊட்டுகிறது. அத்தகையவர்களில் சிலர் இங்கு வந்து சேரும் போது, அரசின் சந்தேகம் அல்லது நிலைப்பாடு இதுவே என்று சொல்கிறார்கள். அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த கனேடிய கல்விமான் ஒருவரும் அரசு பேச்சுவார்தையில் அக்கறை காட்டாமல் இருப்பதற்கு, அதன் மேற் கூறிய நிலைப்பாடே காரணம் என்று தெரிவித்தார்.

இத்தகைய மூளைச்சலவைகளின் மத்தியில் அரசு சமாதான தீர்வு ஒன்றில் ஆர்வமாகவோ அல்லது அக்கறையாகவோ இருப்பதாக எவ்வாறு கூறமுடியும்?

ஏதோ ஒரு காரணமாக, தேர்தலை முன் வைத்து சமாதானப் பேச்சுக்களை அரசு திடீரென நாடினாற்கூட தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வு ஒன்று அதனிடம் உண்டா? அரசின் தீர்வு இது தான் என்று பகிரங்கப்படுத்தினால் மட்டுமே எவரும் அது குறித்துக் கருத்துச் சொல்ல முடியும்.

அரசு தனது உத்தேச தீர்வுப் பொதியை அரசமைப்புச் சட்டத் திருத்தமாகவே கொண்டு வரப்போவதாகக் கூறியது. பின்னர் மக்கள் தீர்ப்புக்கு வரும் வகையில் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளதாக அரசு வட்டாரங்கள் கூறிவந்தன. அந்த நடவடிக்கை ஓர் "அரசமைப்புப் புரட்சியாக" அமையும் என்று பெருமையாகவும் கூறிக் கொண்டதுண்டு. ஆனால் இது நாள் வரை எதுவுமே நடைபெறவில்லை.

அரசாங்கத்தின் தீர்வு யோசனையில் உள்ள பிராந்திய சபைகளின் ஒன்றியம் என்ற திட்டமும் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அதிகாரங்களும் ஒற்றை ஆட்சிக்கு அப்பாற்பட்டவை என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வாதாடுகிறது. அதனால் அரசின் தீர்வுத் திட்டத்தை அது ஆதரிக்கமாட்டாது. ஆகவே அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டுவரத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கிடைக்கப்போவதில்லை.

மேலும் மூன்று வருடங்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் ஆராயப்பட்ட போதிலும் அரசின் தீர்வு யோசனை ஒரு பூரணமான, எதிர்க்கட்சி மற்றும் தமிழர் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக அமையவில்லை.

அதிகாரப்பரவல் அலகு எது அதிகாரங்களை மத்திய அரசும் அலகுகளும் எவ்வாறு பகிர்ந்து கொள்வது, காணி உரிமை, பாதுகாப்பு போன்ற மிக முக்கிய அம்சங்கள் குறித்து ஒற்றுமையும் இல்லை: முடிவும் இல்லை. ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் முக்கிய அம்சங்கள் குறித்து முரண்பட்டு நிற்கின்றன. அவ்வாறிருக்கையில் பேச்சு வார்த்தை ஒன்று நடைபெறும் பட்சத்தில் அரசியல் தீர்வு என்று- சிங்களத் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வு என்று-விடுதலைப் புலிகளிடம் எதனைக் காட்டுவது என்ற பிரச்சினையும் அரசுக்கு உண்டு. இத்தகைய இடியப்பச் சிக்கல் பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு சென்று பேசுவதால் ஆக்கபூர்வமாக ,பயனுள்ளதாக ஆகப்போவது எதுவுமில்லை.

மொத்தத்தில் பேச்சுவார்த்தைக்குச் செல்லக்கூடிய சுமுகமான நிலை அரசுக்கு இல்லை. பல பக்கங்களாலும் முட்கள் குத்திக் கொ்டிருக்கும் போது பேச்சுவார்த்தைக்கு எவ்வாறு போவது? வாய்ப்பு இல்லை.

ஆகையால் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் சிறிதும் இல்லை. அதன் பயனாக போரும் நிறுத்தப்படும் சாத்தியமும் இல்லை.

ஆகையால் அரசாங்கம் தான் தனது சொந்தவழி செல்வதில் அக்கறை காட்டி வருகிறது. மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தனக்குச் சாதகமாக உள்ளதாக மேலோட்டமாகக் கணக்குப் போட்டு தேர்தலை நடத்தத்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறுக்மன் ஈஸ்ட்

பாண் உற்பத்திக்கு
பெல்ஜியத்தில் இருந்து தருவிக்கப்பட்ட
மிகத் தரமான **ஈஸ்ட்**
**ஒரு கேஸ் ஈஸ்ட் (450 கிராம் x 20) 2,750/=**
அத்துடன்
**ஹைக்கோ, மாஜா, பிகைவ்**
*நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*

**எஸ்.ஜெ.பி. ரேட் ஏஜென்சி**
S.J.B Trade Agency

## செறிஸ் பிஸ்கெட்

**செறிஸ் (CHERISH) பிஸ்கட் கம்பனியின்
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்.**

**எஸ்.ஜெ.பி.ரேட் ஏஜென்சி**
39, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
பக்ஸ் (FAX) **021-2549**
(66809)



## றெனி மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் விழிகளில் என்றும் ஒளி
திகழக் கண்களைச் சரியாகப்
பரிசோதித்து கண்ணுக்கு
அழகு சேர்க்கும்
கண்ணாடிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்

**இல. 540, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
பிரதேச செயலகம் முன்பாக,
சாவகச்சேரி.**
(சி-7969)


யாழ். கொக்குவில்
## ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை
## பவளவிழா - 99

காலம்: **1999-06-26** சனிக்கிழமை காலை 9.00 மணி.
இடம்: **வித்தியாசாலை மண்டபம்**
தலைவர்: **திரு.தி. கிருஷ்ணகுமார்** (அதிபர்)

முதன்மை விருந்தினர்
**கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை**
(யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர்)
சிறப்பு விருந்தினா
சமூகஜோதி **கா. கணேசதாசன்** J.P.
(இளைப்பாறிய அதிபர்)
**திரு. இ. மகேந்திரன்**
(இளைப்பாறிய அதிபர்,யா/கொக்குவில் இந்து,
யா/இந்துக், கல்லூரிகள்)

தங்களையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பா. அ. சங்கத்தினர்.**

யாழ். கொக்குவில்,
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.
(66875)

கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்களின்
(யாழ் மாவட்ட கல்வி நிர்வாக இணைப்பாளர்)

# கல்வி நிர்வாகம்
## நூல் அரங்கேற்ற விழா

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
காலம்: 1999.06.27 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணி
தலைவர்: பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம)
வரவேற்புரை: மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்
வாழ்த்துரை: பேராசிரியர் வ. ஆறுமுகம (தலைவர், கல்வியியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
வெயியீட்டுரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ (பீடாதிபதி உயர்மட்ட ஆய்வு பீடம், யாழ் பல்கலைக் கழகம்)
முதற்பிரதி பெறுபவர்: திரு.க.சண்முகநாதன(அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்)
சிறப்புப் பிரதி பெறுபவர்: திரு.கு.கங்கைவேணியன்
ஆய்வுரை: கலாநிதி சபா. ஜெயராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)
பதிலுரை: நூலாசிரியர்
நன்றியுரை: திரு.க.கனகசிங்கம் (உதவிக் கல்விப்பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி)

* அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### விழா சிறப்புற வாழ்த்துவோர்

**பேபி போட்டோ படப்பிடிப்பாளர்கள்**
பலாலி வீதி,
கந்தர்மடம்,
திருநெல்வேலி.

**அரவிந் வீடியோ புகைப்படச் சேவை**
291(431), நாவலர் வீதி,
ஆனைப்பந்தி -யாழ்ப்பாணம்.
T.P 021 - 2190
(66853)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

ஆனந்த மழையில் **16.12.1950**



ஆறாத் துயரில் **28.05.1999**

அமரர்
## சுப்பிரமணியம் கனகரத்தினம்
**(முன்னாள் முருகன் ஸ்ரோர் உரிமையாளர், மட்டக்களப்பு)**

எமது அன்புத் தெய்வத்தின் மறைவின் போது தோளோடு தோள் நின்று உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து மலர்வளையம் வைத்தவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியோர், பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்த நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை 31ஆம் நாள் (27-06-1999) நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள.**

அல்லையம்பதி,
துன்னாலை, கரவெட்டி.
(66840)

## இலக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ்.திருமறைக் கலா மன்றத்தினால் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டுவரும் இலக்கியக் கருத்தரங்கில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு திரு.எம்.எஸ். சிறிதயாளன் கருத்துரை வழங்குவார்.
(ஐ-17)

## போர்நிறுத்தம்.....
(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயாராகி வருகிறது.

முறைப்படி வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் மீதான விவாதம் அடுத்த பெப்ரவரி இறுதியில் அல்லது மார்ச் முற்பகுதியில்தான் முடிவுறும். ஆகையால் அந்த இடைவெளிக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியாது. எனவே ஜனாதிபதித் தேர்தலை ஒரு வருடம் முந்தி, இவ்வருடம் டிசெம்பரில் நடத்த அரசு உத்தேசித்துள்ளதாம்.

ஐக்கிய தேசியக்கட்சி உட்பட ஏனைய கட்சிகளில் செல்வாக்கான, துடிப்பான தலைவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் டிசெம்பரில் தேர்தலை வைத்தால் சந்திரிகாவே வெல்லும் சாத்தியம் அதிகம் உண்டு என ஆளுங்கட்சித் தரப்புகள் நம்புகின்றன. சந்திரிகா மீண்டும் ஜனாதிபதியாக பதவியேறுவதன் விளைவாக, பக்கபலனாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்றத் தேர்தலிலும் வென்றுவிடும் என்பது அரசாங்கக் கட்சிகளின் வலுவான நம்பிக்கை - கணக்கு.

இதேவேளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான சமசமாஜக்கட்சி வட்டாரங்கள் அரசின் தீர்வுயோசனை அடங்கிய அரசமைப்புத் திருத்தத்தை அடுத்த ஜூலை மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாம் என்று ஆலோசனை கூறி வருகின்றன.

பிராந்திய சபைகளின் ஒன்றியம் என்ற வாசகத்தை தவிர்த்து இப்போதுள்ள வாசகத்துடனேயே பிராந்திய சபைகளை கூடுதல் அதிகாரங்களுடன் நிறுவ வசதி செய்தால், ஐக்கிய தேசியக்கட்சியும் அதனை ஆட்சேபித்து எதிர்க்க வாய்ப்பில்லை என்று கட்சியின் செயலாளரும் அமைச்சருமான பட்டி வீரக்கோன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவின் நினைவுப் பேருரையை ஆற்றுகையில் அவர் இவ்வாறு ஓர் ஆலோசனையை அவிழ்த்துவிட்டார். எனினும் அது தொடர்பாக ஐ.தே.கட்சியின் விருப்பம் என்ன என்பது தெரியவில்லை.

மேலும் அதிகாரப் பரவல் தொடர்பான அரசியல் யோசனை, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு ஆகியனவற்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற ல.ச.ச கட்சியின் தீர்மானத்தை ஆளுங்கட்சி ஏற்றுக்கொள்ளுமா என்பதும் மற்றொரு பிரச்சினை.

ஒட்டு மொத்தத்தில் பிரச்சினைகள் புதிது புதிதாய்ப் பெருகுகின்றனவே அன்றித் தீர்வும் முடிவும் வருவதாக இல்லை...


யாழ்ப்பாணத்தில் விற்பனை முகவர்கள் உடன் தேவை

## யூகே டிஷ் அன்டெனா

மொத்த
வியாபாரிகளுக்கு
விஷேட
விலைக்கழிவு உண்டு


உலகின் ஒரு மூலையில் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாக
ஆதங்கப்படுகிறீர்களா? இல்லவே இல்லை!!



**உலகோடு உங்களை நொடிப்பொழுதில் இணைக்கும் பணியை
ஏற்றுக்கொள்ள யூகே நிறுவனத்தினர் தயாராகிவிட்டனர்!!!**

*தலைநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைசிறந்த நிபுணத்துவம் மிக்க தொழில்நுட்பத்தில் செய்மதி டிஷ் அன்டெனாக்கள் மூலம் சர்வதேச அலைவரிசைகளை வழங்கியதில் முன்னோடிகள்*

*சில்லறையாகவும் மொத்தமாகவும் டிஷ் அன்டெனாக்களையும் உதிரிப்-பாகங்களையும் மிகச்சாதாரண விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்*



**UKAAYE** 169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gasworks Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

யாழ்ப்பாண நகரத்தில் ஒரு பிரபல கல்லூரியில் மாணவ முதல்வர்கள் மத்தியில் இடம்பெற்ற 'ராகிங்' சம்பவம் குறித்து மூன்று வாரங்களுக்கு முன்னா இதே பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம். அதனுடைய தொடர் தகவல்களைத் (Follow Up) தந்துதானே ஆக வேண்டும்?

உரிய நடவடிக்கையை - உரிய முறையில் - எடுத்து தமது கல்லூரி ஒழுங்கு, கண்டிப்புக்குப் பேர் போனது என்பதை மீண்டும் நிரூபித்திருக்கின்றார் கல்லூரி அதிபர்.

ஆறு மாணவ முதல்வர்களின் பதவி பறிபோய் இருப்பதாகவும், சிரேஷ்ட மாணவ முதல்வன் மற்றும் உதவி சிரேஷ்ட மாணவ முதல்வன் ஆகியோர் ஒரு தவணைக் காலத்துக்கு அப்பதவியிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகின்றது.

கல்லூரியில் நடைபெறவிருந்த - ஒரு முக்கியமான - வருடாந்த நிகழ்வை மனதில் கொண்டே அதிபர் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதை ஒரு சில நாள்கள் பிந்திப் போட்டதாகத் தற்போது தெரியவருகின்றது.

அதிபரின் முன்மாதிரியான நடவடிக்கைக்கு யாழ்ப்பாண சமூகத்தின் சார்பில் பாராட்டுக்கள்; நன்றிகள்.

இன்னும் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று - கல்லூரியில் சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்வு நடைபெற்ற தினத்தன்று முன்னைய 'அதிரடி அரங்கு'ச் செய்தி வெளியாகியிருந்தமை பாடசாலை வட்டாரங்களில் மனஉளைச்சலை ஏற்படுத்தியதாகத் தெரியவருகிறது. அது தெரிந்தே - அல்லது திட்டமிட்டே - செய்யப்பட்ட நடவடிக்கையல்ல.

மற்றையது - இந்த அதிரடி அரங்குத் தகவல் குறித்து ஆட்சேபனையோ, மனவருத்தமோ தெரிவித்தோ அல்லது பாடசாலைத் தரப்பில் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்க முற்பட்டோ கல்லூரியின் சார்பில் - அல்லது பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் சார்பில் கூட - எவரும் 'உதயன்', 'சஞ்சீவி'யுடன் தொடர்புகொள்ள முயற்சிக்கவில்லை. நாகரிகம் பேணிய அவர்களின் முன்மாதிரியும் பாராட்டுக்குரியது.

* * * *

கனேடிய அரசின் உதவியுடன் 'சீடா' செயற்றிடடத்தின் கீழ் சனிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களுக்கு குறிப்பிடப்பட்ட பாடங்களில் விசேட போதனை வழங்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை குறித்து இரண்டு வாரங்களுக்கு முன் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

'சீடா' திட்ட இணைப்பாளர் வீ.கே. பாலசுப்பிரமணியம் இது குறித்து விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதற்குரிய '36ஏ கொடுப்பனவுப் படிவம்' பூரணப்படுத்தப்பட்டு கோட்டக்கல்வி அதிகாரியின் சிபாரிசுடன் இணைப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படாததாலேயே கொடுப்பனவு வழங்கத் தாமதமாயிற்று என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

எனினும் கடந்த மாதம் நடைபெற்ற சீடாவின் முதலாவது மீளாய்வுக் கூட்டத்தில் - 1998 இல் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்களுக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிரடி அரங்கின் மூலம் இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டதால் விரைவில் தீர்வு கிட்டுவதற்கு வழி ஏற்பட்டிருப்பதாகத் தாம் நம்புவதாகவும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளைக் கிட்டச் செய்வதற்கு சீடா இணைப்பாளரும் அவருடன் சேர்ந்த ஏனையோரும் எடுக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. ஆனாலும் சிலவிடயங்கள் நெருடுகின்றன. அவற்றையும் வெளிப்படுத்தியே ஆக வேண்டும்.

* கடந்த ஆண்டுக்கான இந்தக் கொடுப்பனவு வடமராட்சி வலயத்தில் மட்டுமல்லாமல் யாழ்ப்பாணம், தென்மராட்சி வலயத்திலும் கூட பலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

* கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் இந்தக் கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி - சுமார் இரண்டு லட்சம் ரூபா - கொடுப்பனவுக்கு பயன்படுத்தப்படாததால் திரும்பி விட்டது.

* இப்போது இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலேயே கடந்த வருடக் கொடுப்பனவுகள் வழங்கப்படப் போகின்றன. அப்படியானால் இந்த வருடத்துக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கு நிதிக்கு எங்கே போகப் போகின்றார்கள்? சனிக்கிழமை நடத்தப்படும் மேலதிக வகுப்புகளை வெட்டிக் குறைக்கப் போகின்றார்களா?

* 36'ஏ' படிவம் கூட்டாகப் பலருக்குக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பானது. தனியாகக் கொடுப்பனவு பெறும் ஒருவரால் தயாரிக்கப்படுவது அல்ல. அந்தக் கொடுப்பனவுக்குப் பொறுப்பான அதிகாரிகளே பலரிடம் ஒப்பங்களையும் ஏனைய விவரங்களையும் பெற்று நிரப்பி மேலிடத்துக்கு அனுப்ப வேண்டும். அதனைத் தயாரித்து அனுப்பாதது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் தவறல்லவே?

சரி. நடந்தது நடந்து விட்டது. இனிமேலாவது இவ்வாறு வரும் நிதி திரும்பப் போகாமலும் - ஆசிரியர்கள் போன்ற கல்விக் கண் திறக்கும் ஆசான்களுக்குரிய கொடுப்பனவுகள் தடைப்படாமலும் பார்த்துக் கொள்வதில் நாம் உறுதியாக - முனைப்பாக இருக்க - சங்கற்பம் செய்து கொள்வோமே!

* * * *

தென்மராட்சி வரணிப் பகுதியில் இருந்து ஓர் அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

அப்பிரதேசத்தில் கடந்த மூன்று வார காலத்துக்குள் மரணமான ஆறு பேரின் சாவுக்குக் காரணம் கசிப்பு என்ற - தலையைக் கிறங்க வைக்கும் - தகவலை செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, வடவரணி, முத்தட்டு, குழுக்களை, சந்தையடிப் பகுதியைச் சேர்ந்த இவர்களின் பெயர் விவரங்களையும் அவர் தந்துள்ளார்.

அனேகமாக எல்லோரும் நாற்பது முதல் ஐம்பது வயது வரையுடையவர்கள். பார்வையிழந்து, வயிறு வீங்கி இவர்கள் மரணமாயினர். இன்னும் சிலர் பார்வையிழந்த நிலையிலும், வயிறு வீங்கிய நிலையிலும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியைத் தடை செய்வதில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி பெரிய அளவில் - குடிசைக் கைத்தொழிலாக - பரிணமித்து வருவதாகக் குறிப்பிடும் நமது செய்தியாளர் அதற்குப் பின்னணியான சில காரணங்களையும் முன் வைக்கின்றார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினால் பெருமளவு கள்ளு இப்பகுதிகளிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டு ஏனைய தவறணைகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இப்பகுதியில் உள்ள தவறணைகளுக்கு மிகச் சொற்ப அளவு கள்ளு வழங்கப்படுவதாகவும் அந்தக் கள்ளும் விற்பனை செய்ய முடியாமல் மதுசாரம் காய்ச்சுவதற்காக கைதடி, திக்கம் ஆகிய வடிசாலைகளுக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிகின்றது.

தற்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் சீவல் தொழிலாளர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. சீவல் தொழிலைவிட கசிப்பு உற்பத்தியில் பெருமளவு லாபம் கிடைப்பதால் சீவல் தொழிலில் இவ்வருடம் பலர் ஈடுபடவில்லை.

இப்பகுதிச் சீவல் தொழிலாளர்கள் தமது தொழிலைக் கைவிட்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதற்கு வேறு காரணங்களும் உண்டு எனக் கூறப்படுகின்றது. 1997இல் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கள்ளு வழங்கியதற்கான கொடுப்பனவு - பல்லாயிரக் கணக்கான ரூபா - இன்னும் கொடுபடாமல் நிலுவையாக உள்ளது.

சங்கத்தின் சீவல் தொழிலாளர்கள் இது குறித்து சங்க நிர்வாகத்திடம் பல தடவைகள் முறையிட்டும் பலன் கிடைக்காததால் இவ்வருடம் அவர்களில் பலர் தமது தொழிலைக் கைவிட்டு விட்டு லாபம் தரும் கசிப்பு உற்பத்தியின் பக்கம் திரும்பியுள்ளனர். சங்க நிர்வாகத்தினால் திக்கம் வடிசாலைக்கு வழங்கப்பட்ட கள்ளிற்கான கொடுப்பனவு லட்சக்கணக்கான ரூபா வழங்கப் படாத நிலையில் நிலுவையாக உள்ளதால் சங்கம் அதன் பணியாளர்களுக்கும், அங்கதத்தவர்களுக்கும் கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிகின்றது.

இதனால் இப்பகுதிகளில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதோடு அதனைக் குடிப்பவர்களின் எண்ணிக்கையும், அதனால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளது.

இப்பிரதேசத்தில் உற்பத்தியாகும் கள்ளு, தென்மராட்சியின் ஏனைய பல பகுதிகளுக்கும் 'ஏற்றுமதி' யாவதாகவும் தெரிகின்றது.

சமூக அமைப்புக்கள் உடனடியாக சிரத்தை எடுக்க வேண்டிய அவசர விவகாரம் இது.

*

## பாலர்விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன்26

திருநெல்வேலி ஞானக்குழந்தை முன்பள்ளிக் கல்வி நிலைய பாலர் விளையாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பொறுப்பாசிரியர் செல்வி சண்முகநாதன் சகுந்தலாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும் சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி கிராம அலுவலர் க.சிவராஜா, பாலர் கல்விக்கழகத் தலைவர் இ.தவகோபால், பாலர் கல்விக்கழகச் செயலாளர் தெ.இரத்தினகோபால் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(க - ரி)

## தேநீர் கடைகளில் கசிப்பு

தென்மராட்சி, ஜூன்26

தென்மராட்சி மதுவரி திணைக்களத்தினர் கொடிகாமம் நகரப் பகுதியில் திடீர் சோதனைகளை நடத்தியபோது தேனீர்க்கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சட்ட விரோத கசிப்பினை கைப்பற்றி அழித்தனர்.

(ஐ-117)


## இன்று சுகமளிக்கும் நற்செய்தி

கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயத்தினால் நடாத்தப்படும் சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டம் நீர்வேலி மேற்கு அச்செழு மகாவித்தியாலயம் முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் வந்து இயேசுவின் கரங்களில் இருந்து அற்புத சுகத்தையும் - விடுதலையையும் பெற்றுக்கொள்ள அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:-** 26-06-99 சனிக்கிழமை

மாலை 3.30 மணிக்கு (புதிய நேரம்)

**வாருங்கள்! பங்கு பெறுங்கள்! ஆசீர்வாதமடையுங்கள்!**

நன்றி.

(66887)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை மானிப்பாய் வீதியில் மூன்று படுக்கை அறைகள், இணைந்த குளியலறை, ஒரு சிறிய அனெக்ஸ், மின்சாரம், தண்ணீர் வசதிகளுடனான 10 (பத்து) பரப்பில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. இடைத் தரகர்கள் வேண்டியதில்லை.

**மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க.**

தொலைபேசி இலக்கம்: 888008

(C/7990)

## நூல் வெளியீட்டு விழா

**கலையார்வன் K..இராயப்பு**

(சென். ஜேம்ஸ் ம. வி. பழைய மாணவன்)

**எழுதிய**

**செயல்முறை கணிப்பொறி**

(ஈழத்தின் முதல் தமிழ் கணிப்பொறி நூல்)

தலைமை

**பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்**

(விஞ்ஞானபீடாதிபதி, யாழ். பல்கலைக் கழகம்)

வாழ்த்துரை

**அருட்திரு. J. E. ஜெயசீலன்** M.A,M.Phil.

(விரிவுரையாளர், மொழியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை

**கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை**

(கல்விப்பணிப்பாளர்/கல்வி இணைப்பாளர், யாழ். மாவட்டம்.)

மதிப்புரை

**கலாநிதி க.குணராசா**

(பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)

**திரு. S,சுதாகரன்**

**காலம்:- 28-06-1999** திங்கள் காலை 10 மணி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: பிரதிகள் வேண்டுவோர் தயவு செய்து முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

V.J. **கொன்ஸ்ரன்ரைன் / இயக்குநர்.**

NEO CULTURAL COUNCIL 21st

28/1, ST. JAMES WEST STREET, JAFFNA.

(66863)

உ

**சாவகச்சேரி - சங்கத்தானை**

## அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில்

**வருடாந்த மகோற்சவ பெருவிழா - 1999**

**கொடியேற்றம்:-** ஆனி 19 ஆம் நாள் (03-07-99) சனி பகல் 11.30 மணி.

**தேர்த்திருவிழா:-** ஆனி 27 ஆம் நாள் (11-07-99) ஞாயிறு காலை 10.00 மணி.

**தீர்த்தத்திருவிழா:-** ஆனி 28 ஆம் நாள் (12-07-99) திங்கள் காலை 11.00 மணி.

**மகோற்சவ குரு:**

**சிவப் பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள**

கந்தன் அருள்வழியில்

**ஆலய பரிபாலன சபை.**

விளம்பர அன்பளிப்பு:

**பாலா மல்ரி கோணர்**

**சங்கத்தானை - சாவகச்சேரி.**

BALAA MULTI CORNER

Sankaththanai, Chavakachcheri.

(66885)

**யாழ்.பல்கலைக்கழக மெய்யியற் கழகத்தின் சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக**

## திரைப்படக் காட்சிகள்

பிரசித்தி பெற்ற திரைப்படங்கள்:

30 அடி வெண்திரையில் காண்பிக்கப்படும்.

1) TURBULANCE
2) LONG WOLF

**இடம்:-** கைலாசபதி கலையரங்கம்

**காலம்:-** 26-06-99 சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு.

Note:- ஜூன் 27 இல் காண்பிக்கப்படவிருந்த இப்படக் காட்சிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஜூன் 26 இல் காண்பிக்கப்படும் என அறியத் தருகின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:-

**அம்பாள் கொமினிகேசன**

**கம்பஸ் லேன், திருநெல்வேலி.**

**தொலைபேசி இல. 021 ~ 2742**

(Local, IDD, FAX வசதிகள் செய்து கொடுக்கப்படும்).

(66901)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தேவை

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (66831)

கோழிப்பண்ணையில் வேலை செய்ய, கோழி சுத்தம் செய்யத் தெரிந்த 18 வயதுக்கு உட்பட்ட ஆள் தேவை. தொடர்பு; தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (66803)

செப்புக் கிடாரங்கள் தேவை. விற்பனைக்கு விருப்பம் உள்ளவர்கள் நேரில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தி. இராசரெத்தினம், தாவடி வட பத்திரகாளி அம்மன் கோயில் அருகில், தாவடி தெற்கு, கொக்குவில். (66837)

ஒரு வயோதிபப் பெண்ணை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு ஒரு பெண் தேவை. சகல வசதியும் நல்ல ஊதியமும் வழங்கப்படும். நேரில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தி.இராசரெத்தினம், தாவடி தெற்கு, கொக்குவில் (66836)

## புறொயிலர்

(Broiler) இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்துபெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: லக்கி, பலாலி றோட், இல.1 மதவடிலேன், திருநெல்வேலி (66842)

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக் கடைக்கு அருகில்) (66829)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் (பாதிக் கோழி) உட்பட தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மிக நுட்பமான நிறுவை, அத்துடன் அடைமுட்டையும், வாழைக்குட்டிகளும் உண்டு. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (66802)

## விற்பனைக்கு

பத்து அடி நீளமுள்ள பத்து Concrete தூண்கள் விற்பனைக்குண்டு. அத்துடன் அடைமுட்டையும், வாழைக் குட்டியும் உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர். (66804)

## வீடு விற்பனை

மீசாலை தெற்கில் புகையிரத நிலையத்துக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் 3 1/2 பரப்பில் உள்ள கல்வீடு, மலசலகூட, நல்ல தண்ணீர்க் கிணற்றுடனும் பல பயன்தரு மரங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.சிவகுரு, மீசாலை தெற்கு, மீசாலை. (66839)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் பெற்றோர், பாவமற்ற 7இல் செவ்வாய், 31 வயது, 5'-1" உயரம், லண்டனில் பிரஜா உரிமை பெற்ற Sponser பண்ணக்கூடிய, தீய பழக்கமற்ற Accountant மகனுக்கு சிவந்த, அழகிய குடும்பப் பாங்கான மணமகளை எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல.894, மே/பா. உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (66826)

## இலகு திருமண சேவை

1971 சதயம் ஆசிரியைக்கு மணமகன் தேவை. தகுதிக்கேற்ற சீதனம் கிடைக்கும். கப்பல் தொழிலில் ஈடுபாடு உடையவர் விரும்பத்தக்கது. மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள். ஞாயிறுகளில். துரை விமலா, K.K.S. வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (66778)

## 6 - O/L வரை

கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் துரிதமாக உயர்பெறுபேறடைய(Spoken English) கற்பிக்கப்படும். காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை. ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (66834)

## படிவம்

க.பொ.த. (சாதாரணம்)
பரீட்சை
விண்ணப்பப்படிவங்கள்
விற்பனையாகின்றன
படிவங்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும விற்கப்படும்

முடிவுத் திகதி
31 – 07 – 1999

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி 3081

(சி7683)

## மீண்டும் இலங்கை மண்ணில்

தந்தை S.J. **பெர்க்மான்ஸ்** அவர்களும்
சுவிசேஷகர் இயேசுவின் அடிமை
A.V.M **ராஜன், சகோதரி புஸ்பலதா**
ஆகியோரும்

தந்தை S.J.பெர்க்மான்ஸ் அவர்களின் நிகழ்ச்சிகள் ஜூலை 15 தொடக்கம் ஒகஸ்ட் 01 வரை. திருகோணமலை, கேகாலை, பலாங்கொடை, புத்தளம், காலி, மாத்தளை ஆகிய இடங்களில் நடைபெறும்.

முன்னாள் திரைப்பட நட்சத்திரங்கள் இயேசுவின் அடிமை A.V.M ராஜன், சகோதரி புஸ்பலதா ஆகியோரின் நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சிகளின் விவரம்:-

| | | |
|---|---|---|
| ஒகஸ்ட் | 24 - 25 | ஊர்காவற்றுறை |
| | 26 - 27 | உடுவில் |
| | 28 - 29 | வட்டுக்கோட்டை |
| | 30 - 31 | சாவகச்சேரி |
| செப்ரெம்பர் | 1 - 2 | பருத்தித்துறை |
| | 3 - 5 | யாழ்ப்பாணம். |

தேவ ஜனங்களே ஊக்கமாக ஜெபியுங்கள்.

**மனதுருக்கம் இலங்கை**
102, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(66805)

## ST. JOHN'S COLLEGE JAFFNA

## OLD BOYS' ASSOCIATION

### வருடாந்த ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும்

சங்கத்தின் 86ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 03.07.99 சனிக்கிழமை கல்லூரியில் Peto Memorial மண்டபத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்களை துணைவியர் சகிதம் அழைக்கின்றோம்.

**Programme for the day**

| | | |
|---|---|---|
| 7.30 a.m | - | Holy Communion Service |
| 8.45 a.m | - | Fellowship Breakfast |
| 9.30 a.m | - | Annual General Meeting |

Agenda

1. Prayer
2. Vote of Condolence
3. Minutes of the last AGM
4. Principal's Review
5. Annual Report
6. Statement of Accounts
7. Resolutions & motions
8. Election of Office Bearers
9. Any other business

| | | |
|---|---|---|
| 10.30 a.m | - | Cricket Match - **Old Boys Vs Present Boys** |
| 1.30 p.m | - | Followship Lunch |
| 2.00 p.m | - | Cricket Match (Continued) |
| 4.00 p.m | - | Principal's Tea |
| 4.30 p.m | - | Football Match - **Old Boys Vs Persent Boys** |

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 30.06.99 இற்கு முன்னதாக காலைப் போசனம் 25/= மதிய போசனம் 75/= ஐ கல்லூரியில் பொருளாளர் திரு. த.நந்தகுமாரிடம் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

**தபால் அழைப்பு இல்லாததால் சகல அங்கத்தவர்களும் இதனை அழைப்பாக ஏற்று சமூமளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம.**

S.THANAPALAN (PRINCIPAL)
A.J.KADIRGAMAR (HONY. SECRETARY)

(C/7845)



## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரமாதி வருடம் ஆனி மாதம் 16ஆம் நாள் (30-06-99) புதன்கிழமை பகல் 9-18 மணி முதல் 11-40 மணி வரையுமுள்ள சுபவேளையில்

எமது புதல்விகள
**துளசி வாசுகி**
ஆகிய இருவருக்கும்

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராகச் சமுகம் தந்து செல்விகளை ஆசீர்வதித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


தங்கள் நல்வரவை நாடும:
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
க. சிறீகாந்தன் (ஜேர்மனி) சி.தயாரஞ்சிதம்

(66775)


தலைமுடி உதிர்தல் பற்றிய உங்கள் கவலை

**இனிமேல் வேண்டாம்**

**HAIR - STABIL**
**TONIC & SHAMPOO with herbal extracts**



## உங்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கின்றதா?
## தலைமயிர் ஏன் எமக்கு மட்டும் உதிர வேண்டும்?

**ஆம்!** ஜேர்மன் தயாரிப்பான HAIR - STABIL டானிக், ஷம்பூ உங்கள்

**மனக்கேள்விக்கு ஒரே பதில்**

குறுகிய கால பாவனையில் அதிசயிக்கத்தக்க வெற்றியைத் தரும் இந்திய, ஜேர்மனிய விஞ்ஞானிகளின் கூட்டுறபத்தியால் தயாரிக்கப்பட்ட HAIR - STABIL இப்போது இலங்கையிலும் அனைத்து பார்மஸிகளிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும கிடைக்கிறது.

**SHAMPOO - Rs. 295/= TONIC - Rs. 595/=**

Importers & Distributors
VAIGEE MEDICALS
155 1/6, B, PRINCE ST,
COLOMBO - 11.
TEL: 320996 FAX: 599270




PRODUCT OF BIOX-NOVA PHARM GERMANY

HAIR STABIL

**மூன்று மாதத்துக்குள் பலனை அறியலாம்**

(சி-7975)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சாலும் எழுத்தாலும் தமிழ் உலகை தம்பால் ஈர்த்துக் கொண்ட பண்டிதமணி

"மேடைப் பேச்சில் அப்பொழுது முதன்மை பெற்றிருந்தவர் கவிஞர் மகாலிங்கசிவம் அவர்கள். அவரது பேச்சு வன்மையைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயஞ் செய்திருந்த திரு.வி.கலியாணசுந்தர முதலியாரவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். மகாலிங்கசிவம் அவர்களது பேச்சு முறையை அப்படியே கற்றுக்கொண்டார் பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை அவர்கள். சொல்விற்பத்தியில் மிக மிகச் சிறந்தவர் சுன்னாகம் குமாரசாமிப்புலவர் அவர்கள். புலவரவர்களது சொல்விற்பத்தி முறையை அவரது மாணவரான கணபதிப்பிள்ளை அவர்களும் [illegible]கவும் திறமையாகக் கையாண்டா[illegible]"

மேற்[illegible]ண்டவாறு சைவா[illegible]சிரிய கலாசாலையின் முன்னைநாள் விரிவுரையாளரான மட்டுவில் பிரம்மஸ்ரீ நா.கந்தசாமி ஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

### நாவலர் காவிய பாடசாலை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது பேச்சு வன்மைக்கு வண்ணார் பண்ணை நாவலர் காவிய பாடசாலையின் அடிப்படைக் கல்வியே வித்திட்டது என்பதை ஐயரவர்கள் மேலும் குறிப்பிடுகின்றார்.

"நாவலர் காவிய பாடசாலையில் பண்டிதமணி அவர்கள் கற்கும் காலத்தில் நான் நாவலர் பாடசாலையில் மூன்று ஆண்டுகள் கற்றேன். காவிய பாடசாலை ஓர் அறையில் நடந்தது. அந்த அறையின் நடுவில் ஒரு மேசை; மேற்கில் ஒரு கதிரை; தெற்கில் ஒரு கதிரை; கிழக்கில் ஒரு வாங்கு; வடக்கில் ஒரு வாங்கு; மேற்கில் அமைந்த கதிரையில் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப் புலவர் அவர்கள் வீற்றிருப்பார். தெற்கில் அமைந்த கதிரையில் மனேஜர் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களும் கிழக்கில் உள்ள வாங்கில் குருமூர்த்தி ஐயரும் வடக்கு வாங்கில் சி.கணபதிப்பிள்ளையும் இருப்பார்கள். வகுப்பு ஒரு கருத்தரங்கு மேடை போலக் காட்சியளிக்கும். புலவர்களதும் மனேஜர் அவர்களதும் கல்வித் தொடர்பு சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஏற்பட்டமை நம் நாடு செய்த புண்ணியம் என்றே கொள்ள வேண்டும் என்று நாவலர் காவிய பாடசாலையின் அமைப்பையும் கல்விச் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றார் ஐயர் அவர்கள்.

### எவ்.எக்ஸ்.சியின் கூற்று

பண்டிதமணி அவர்கள் கல்வித் துறையில், அத்துறை வாயிலாகப் பேச்சு, எழுத்துத் துறைகளில் ஒப்பாரும் மிக்காருமில்லாதவராகக் கொடிகட்டிப்பறப்பதற்கு நாவலர் காவிய பாடசாலையில் அவர் பெற்றுக் கொண்ட குருகுலக் கல்வியே காரணமாயிற்று.

பண்டிதமணியினது பேச்சு வன்மையைப் பற்றி இலக்கிய கலாநிதி, மகாவித்துவான் F.X.C. நடராசா குறிப்பிடுகையில் "நாவலர் பெருமான் பிரசங்கம் செய்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தார். சேய் நாட்டில் மாத்திரமன்று, தாய் நாட்டிலும் பிரசங்கமாரி பொழிந்தார். சிறந்த பல மேடைகளை அலங்கரித்துச் சொற்பொழிவாற்றியுள்ள பெருமை பண்டிதமணிக்கு உரியதாகும். இவரின் பேச்சென்ன எழுத்தென்ன பரிமேலழகரின் சொல்லொழுக்குப்போல அமைந்திருக்கும். நச்சினார்க்கினியரின் முரண்பாடு இருக்கவே இருக்காது"

"முரண்படும் மக்களை நாவலர் கண்டிக்கத் தவறியது கிடையாது. கண்டிக்க வேண்டியவர்களைக் கண்டிக்க வேண்டியது மரபு. முகத் தாட்சண்யம் பார்க்கவே மாட்டார்கள். சிலேடை, சொல்லம்பு, எழுத்தாணி இவர்களிருவரின் கண்டனத்தில் வெகு கூர்மையாகவே இருக்கும்."

தேங்காய்ச் சொட்டும் தெறிப் புழுக்கொடியலும் வாய்க்குரிசி பயப்பது போன்று பண்டிதமணியின் வாய்ச் சொற்களும் செவிக்கின்பம் பயப்பன. நாவலர் வசனநடை கைவந்தவர்: பண்டிதமணியோ அவ்வாறான வசன நடையைக் கையாளாது, தவில் வித்துவான் பழனி, சொட்டிக் காட்டித் தாளம் அறுத்து வாசிப்பது போல் சொற்கள் தனித்தும் சேர்ந்தும் தமிழை மேலும் இனிமை செய்யும்" என்கின்றார்.

### கலா நிலையம்

பிரசித்தி வாய்ந்த யாழ்ப்பாணம் கலாநிலையத்திற் பண்டிதமணி அவர்கள், சின்னத்தம்பிப் புலவர் அவர்களைப் பற்றிப் பேசிய பேச்சினைக் கேட்டு அநுபவித்தவரான பிரபல கல்விமான் எஸ்.எச்.பேரின்பநாயகம் அவர்கள் தமது கருத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

"ஒரு நாள் சின்னத்தம்பிப் புலவரைப் பற்றி விரிவுரை நடக்கும் என்று அறிவித்தல் கிடைத்தது. கூட்டத்துக்குப் போனேன். மெல்லிய நெடுவல் ஆளொருவர் எழுந்தார். பின் குடுமி. மேலிலே சால்வை மாத்திரம்: சட்டையில்லை. யாவரும் கேட்டார்கள்; ஆடாமல் அசையாமல் இருந்தார்கள்; இடையிடையே வயிறு குலுங்கச் சிரித்தார்கள். பேச்சாளர் முகத்திற் புன்சிரிப்புத்தான்.

'கல்லின் மேற் கல்லு வைக்க வளரும் கட்டடம் போற்' பேச்சு வளர்ந்தது பள்ளுப் பிரபந்தத்தைப் பற்றி விளக்கங்கள் தந்தார்கள். தண்டிகைக் கனகராயன் பள்ளு கதிரமலைப் பள்ளு முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டன. பள்ளுகளில் பறாளாய் விநாயகர் பள்ளே சிறந்ததென்பது நிலைநாட்டப் பட்டது. வில்லவராய முதலியார் வீட்டுப் படலையிற் பொன்பூச் சொரிந்து நின்ற கொன்றை மரத்துக்குச் சின்னத்தம்பிப் புலவர் சாகாவரம் கொடுத்துவிட்டார்.

"புலவர் அவர்கள் புகையிலை நறுக்கை நாடித் தகப்பனார் வீட்டின் இறப்பை ஆராயுங் காட்சிக்குக் கணபதிப்பிள்ளைப் பண்டிதர் சாகாவரம் கொடுத்திருக்கிறார். குறும்புப் பையனான சின்னத்தம்பி, தகப்பனாரில்லாத நேரம் பார்த்து, அவர் அயர்ந்து மறந்துவிட்டுப் போகும் புகையிலைத் துண்டையோ காம்பையோ ஆவலுடன் தேடி வாய்க்குள் போடுங் காட்சியைப் பண்டிதருடைய பேச்சைக் கேட்டவர்கள் மறக்க முடியாது."

### பண்டிதமணி

## அவரின் 101 ஆவது பிறந்த தினம் நாளை

1951 இல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில்(இப்பொழுது யாழ். பல்கலைக்கழகம்) இடம் பெற்ற தமிழ் விழாவில் "தமிழ் நுதலியது களவு; களவியல் நுதலியது தமிழ்" என்ற தலைப்பில் இலங்கை இந்திய அறிஞர்கள் உள்ளிட்ட அனைவரும் வியக்கும் வண்ணம் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அந்த உரை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை என்ற அந்தஸ்துக்கு அவரை உயர்த்தியது. அப்பொழுதிருந்த 'தினகரன்' ஆசிரியர் வி.கே.பி. நாதன் ஞாயிறு தினகரனில் "தமிழ்ச் சாறு" என்று எழுதிய 'ஆசிரியத் தலையங்கத்தில் 'பண்டிதமணி' என்று குறிப்பிட்டார். அன்று தொடக்கம் தினகரன் வழங்கிய 'பண்டிதமணி' என்ற பட்டம் நிலைத்துவிட்டது.

சேக்கிழார் விழாப் பேச்சு, வேலணையில் இடம்பெற்ற திருமுறை விழாப் பேச்சுக்கள் உச்சமாக அமைந்தன.

வலி. வடக்கு தமிழாசிரியர் சங்க விடுமுறைக் கழகத்தில் "பொய்யே கட்டிய சிந்தாமணி" என்ற தலைப்பிலான உரை சீவகசிந்தாமணியில் பைத்தியம் கொண்டவர்களை ஓர் உலுப்பு உலுப்பி விட்டது எனலாம்.

### நாவலர் விழாத் தொடக்க உரை

நாவலர் பெருமானுக்கு நல்லூர்க் கந்தசாமி கோயிலின் தெற்கு வீதியில் அவருக்குரிமையான நிலத்தில் மணி மண்டபம் அமைத்து அங்கு நாவலர் சிலையையும் பிரதிட்டை செய்து பெரு விழா எடுத்தது நாவலர் சபை. அதையொட்டி இடம் பெற்ற நாவலர் மகாநாடு சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. நாவலர் பரம்பரையைப் பேணி வந்தவரான பண்டிதமணி அவர்கள் குறித்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய 'தொடக்க உரை பொன் பெறும்.

### ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

சைவத் தமிழ் மக்களை மேம்படடையச் செய்யும். நோக்கமாக நாவலர் பெருமான் அவர்கள் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் சைவப் பிரசங்கம் செய்யத் தொடங்கினார். குறித்த பிரசங்க முறை விரிவடைந்தது. அவர் வழியில் வந்தவரான இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது பிரசங்க வழிகளும் பொதுமக்களிடையே - கல்விமான்கள் மத்தியிலே - மாணவர்களது உள்ளங்களிலே புத்துணர்ச்சியை 'ஏற்படுத்திவிட்டன என்பது மிகவும் சிந்தனைக்குரியது.

ஆசுகவியால் அகில உலகத்தையுமே தம்பால் ஈர்த்துக் கொண்டவர் காளமேகப் புலவர். பேச்சாலும் எழுத்தாலும் தமிழ் உலகினைத் தம்பால் ஈர்த்துக் கொண்டவர் ஈழத்துப் பண்டிதமணி அவர்கள். இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது பிறந்த தின நூற்றாண்டு நிறைவுநாளை நாம் கொண்டாடும் இவ்வேளையில் அவரது பாதகமலங்களை மனசில் இருத்திப் பிரார்த்திப் போமாக!

*



*பண்டிதமணி **சி. கணபதிப் பிள்ளை** அவர்கள், ஈழநாட்டிலே குரு - சிஷ்ய முறைப்படி கல்விபயின்ற கல்விப் பரம்பரையில் எஞ்சியிருந்த ஒரு சில அறிஞருள் முதன்மையானவராகத் திகழ்ந்தவர்.*

*நாவலரின் பெறாமகனாகிய த. கைலாசபிள்ளை அவர்களிடத்தும் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரிடத்தும் குரு - சிஷ்ய முறைப்படி கல்விபெற்று மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதரான பண்டிதமணியவர்கள், இருபாலை அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகி, திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலையில் தமது சேவைக் காலம் முழுவதையும் தமிழுக்காக அர்ப்பணித்தவர்.*

*மட்டுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், தமது சமய இலக்கியப் பிரசங்கங்களினாலும் எழுத்துக்களினாலும் பல்லாயிரக்கணக்கான இரசிகர்களைப் பெற்றவர். வானொலியிலும் பலவிழாக்களிலும் இவர் ஆற்றிய சொற்பொழிவுகளுள் சிலவும் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளில் சிலவும் 'இலக்கியவழி','சைவநற்சிந்தனைகள்', 'கந்தபுராண கலாசாரம்', கந்தபுராணபோதனை', 'பாரதநவமணிகள்','சமயக்கட்டுரைகள்' என்னும் பெயர்களோடு புத்தக உருவம் பெற்றுள்ளன.*

*கணேசையர் அவர்களோடு நீண்டநாள் தொடர்புடைய பண்டிதமணியவர்கள், ஐயரவர்களால் நன்கு மதிக்கப்பட்ட அறிஞர். ஐயரவர்களின் தொல்காப்பிய விளக்கவுரை வெளியாவதற்கு முக்கிய காரணராயிருந்தவர். ஐயரவர்களின் பொற்கிழிவிழா இணைக்காரியதரிசியாகக் கடமையாற்றியவர். ஆறுமுகநாவலரிடத்து அளவற்ற பக்திபூண்டவர். அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்ட நாவலர்சரிதப் பிந்தியபதிப்புக்கு அரியதோர் முன்னுரை எழுதியுள்ளார்கள். கலைக்களஞ்சியத் தொகுதியிலும் நாவலர் அவர்களைப் பற்றிய கட்டுரையை எழுதியுள்ளார்கள். ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலிய ஈழப்பெருமக்களின் கௌரவத்துக்கு எதிரான கூற்றுக்கள் கிளம்பிய காலத்து அதனைச் சகிக்காது உண்மையை நிலைநாட்ட உழைத்தவர். பண்டிதர்களின் பழைய பரம்பரை நடையை விட்டு, புதுஉரைநடையொன்றை ஏற்படுத்தி இலக்கிய விமர்சனமும் சொற்பொழிவுகளும் அரசியற்பிரசங்கங்களும் புரிந்து பொது மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றவர்.*

*இவரின் திறமைகண்டு பேராதனைப்பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.*

*அன்னாரின் நூற்றியோராவது பிறந்ததினம் நாளை வருவதை ஒட்டி இச்சிறுகட்டுரை பிரசுரமாகுகின்றது.*

---

# முக்கிய கல்வி அலுவலகங்களில் தமிழ் ஊழியரை நியமிக்க வேண்டும்

கொழும்பு,ஜூன்26

பரீட்சைத்திணைக்களம், கல்வி நூல் வெளியீட்டுத்திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றில் போதியளவு தமிழ் ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கண்டவாறு ஜனாதிபதியின் ஆலோசகர் எஸ்.சிவதாசனிடம் கோரியுள்ளது.

சங்கத்தூதுக்குழு ஒன்று அவரை செவ்வாயன்று சந்தித்த சமயமே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தது.

சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் சங்கத்தின் பிரமுகர்களான த.பஞ்சலிங்கம், எஸ்.யேசுதாசன், சரவணபவானந்தன், சகாய தேவராஜா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

தூதுக்குழு சமர்ப்பித்த கோரிக்கைகள் வருமாறு:-

பொதுமக்கள் மற்றும் மாணவருடன் நேரடித் தொடர்புகொண்டுள்ள பரீட்சைத்திணைக்களம், கல்விநூல் வெளியீட்டுத்திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றில் போதிய தமிழ் அதிகாரிகள், ஊழியர்கள் பணிபுரிவதில்லை. இதன் காரணமாக தமிழரின் வரலாற்றைத் திரிபுபடுத்தும் நூல்கள் வெளிவருகின்றன. மாணவர்கள் பரீட்சைகளை ஒழுங்காகச் செய்ய முடிவதில்லை. ஆசிரியர், அதிபர்கள் தமது கைநூல்களை தமிழில் பெறமுடியாதுள்ளனர். இந்த நிலையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு - கிழக்குக்கு வெளியில் பணிபுரியும் தமிழ் அதிபர் ஆசிரியர்களுக்கு தமிழ் மொழிமூலம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுவதில்லை. சிங்கள மொழி மூலம் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும்.

[illegible] தமிழ் கல்வி வட்டாரங்கள், தமிழ் வலயங்கள் உருவாக்கப்படவேண்டும்.

# ரூ.55லட்சம் செலவில் நெடுந்தீவில் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்26

நெடுந்தீவுப் பிரதேச சபைப் பகுதியில் இவ்வருடம் 55லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

நூல்கள்,சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள், கோயில்கள் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளே மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

குடிதண்ணீர் விநியோகத்திற்கு பவுஸர் ஒன்றும், அந்தியகால சேவைக்கு வாகனம் ஒன்றும் கொள்வனவு செய்யப்படுவதுடன் கலை அரங்கு ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் உதவி அமைப்பாளரும், பிரதேச சபைத் தலைவருமான என்.மனோகரன் நெடுந்தீவுக்கு சென்று அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடித் [illegible] களை இனங்கண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# 30ஆயிரம் பேர் கொண்ட புலிகளின் துணைப்படை

கொழும்பு,ஜூன்26

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் விடுதலைப்புலிகள் 30ஆயிரம் பேரைக் கொண்ட துணைப் படையை உருவாக்கி வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இவர்கள் நேரடி மோதல்களில் ஈடுபடமாட்டார்கள் என்றும் -

பாதுகாப்பு அரண்கள் அமைத்தல் மற்றும் கள முனையில் தேவையான உதவிகளைச் செய்வதற்கு பயன்படுத்தப்படுவார்கள் என்றும் -

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

(ஐ-6)

# வன்னியால் வந்த 278 குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத உதவிப் பொருள்கள்

### அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வழங்கும்

வலி.மேற்கு,ஜூன்26

வன்னியிலிருந்து சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 278 குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத பொருள்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினரால் விநியோகிக்கப்படவுள்ளன.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக உதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

வட்டுக்கிழக்கு-3,வட்டு.வடக்கு-8, சங்கரத்தை -13, அராலி மேற்கு-20, அராலி கிழக்கு-16,அராலிதெற்கு-10, அராலி கிழக்கு - 13, அராலி வடக்கு -11, வட்டு மேற்கு - 15,வட்டுத் தெற்கு -23, வட்டுத் தென்மேற்கு -1,பண்ணாகம-6, பொன்னாலை - 6, மூளாய்- 3 சுளிபுரம் மேற்கு -16, சுளிபுரம் மத்தி-27, சுளிபுரம் கிழக்கு, -12, பனிப்புலம்-25, சித்தன்கேணி-14, சங்கானை கிழக்கு -11, சங்கானை மேற்கு-16, சங்கானை தெற்கு - 25 சங்கானை மத்தி - 14.

மொத்தமாக 23 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 278 குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு வீட்டுப்பாவனைப் பொருள்கள், குழந்தைப் பிள்ளைகளுக்கான உடுதுணிகள், போர்வை விரிப்புக்கள், ரீசேட் போன்றவையே விநியோகிக்கப்படவுள்ளன.

(ஐ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட-கிழக்கு அதிபர், ஆசிரியர்கள்

# வெள்ளி சுகவீன லீவுப் போராட்டம்

## ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து

யாழ்ப்பாணம், ஜுன 26

தமிழ்மொழி மூல மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் அடங்கிய ஒன்பது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்வரும் இரண்டாம் திகதி சுகவீன லீவுப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் போராட்டத்திற்கு சகலதரப்பின் ஆதரவையும் அந்தச் சங்கம் கோரியுள்ளது.

அன்றையதினம் பாடசாலைகளில் போட்டிகள், கருத்தரங்குகள், ஊக்குவிப்பு வகுப்புகள் ஆகியவற்றை நடத்த ஏற்பாடு செய்யவேண்டாம் என்று அந்தச் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயப் பணிப்பாளர்கள் ஆகியோரைக் கேட்டுள்ளது. இதற்கிடையில் -

இந்தப்போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரும் கல்வி,உயர் கல்வி அமைச்சு அதிகாரிகளும் தங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகச் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (உ-3)

# கைதான நபர்கள் தாக்கப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது

## படைத் தளபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜுன்26

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்களைத் தாக்கும் அதிகாரம் படையினருக்கு இல்லை என்று 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.என்.ஆர். மாரம்பே தெரிவித்துள்ளார்.

மாகியப்பிட்டிப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின் தாக்குதலுக்குள்ளான இராசரத்தினம் இராஜசேகரம் என்ற குடும்பஸ்தரை அச்செழுவிலுள்ள தனது அலுவலகத்திற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் சகிதம் அழைத்து விசாரணை செய்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விசாரணையின்போது மனித உரிமைகள ஆணைக்குழுவின மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஸ்ரீதரனும் உடனிருந்தார்.

தாக்கப்பட்ட குடும்பஸ்தரின பாதிப்புப் பற்றிக் கேட்டறிந்த தளபதி குடாநாட்டில எப்பகுதியிலேனும் கைது செய்யப்படுபவர்களை காங்கேசன் துறை தடுப்புமுகாமுக்கு அனுப்பி வைப்பதே படையினரின் கடமை என்றும் -

கைதானோர் தாக்கப்படும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் உடனடியாகத் தமது கவனத்திற்குக் கொண்டுவரும்படியும் -

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் மீது தாக்குதல் நடத்தும் படையினர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாரம்பே தெரிவித்தார்.

விசாரணைகளின் பின்னர் படையினரால் தாக்கப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தருக்கு மருத்துவச் செலவுக்கான பண உதவியையும் அவா வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பண்டத்தரிப்பு இராணுவ முகாம் கட்டளை அதிகாரி மற்றும் குடும்பஸ்தரைத் தாக்கியதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஆகியோரும் நேரில் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். (ஐ-5-ரி)

# யாழ்ப்பாணத்தில் கைதான ஐவரை ஏன் வேறிடத்தில் ஆஜர் செய்தீர்கள்?

## பதிலளிக்க வருமாறு அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜுன்26

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து பொதுமக்களை யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தமைக்கான காரணத்தை நீதிமன்றத்தில் தோன்றித் தெரிவிக்குமாறு காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரிக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன உத்தரவு பிறப்பித்தார்.

அரியாலைப் பகுதியில் இராணுவக் கப்டன் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஐந்து பொதுமக்களை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட விவகாரம் நேற்று மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் பணிபுரியும் சார்ஜன்ட் டிங்கிரி பண்டார நீதிமன்றத்தில் ஆஜரானார்.

"காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கிட்டவாக உள்ள நீதிமன்றம் மல்லாகம் நீதிமன்றம் ஆகும். அதன் காரணமாகவே அங்கு ஐந்து பொதுமக்களையும் ஆஜர் செய்தோம்"- என்று நீதிமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

"பிரஸ்தாப நபர்களை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். இந்த நீதிமன்ற உத்தரவை மீறியமைக்கான காரணத்தை எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்க வேண்டும்."

– இப்படி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் பணிப்புரை விடுத்தார். (உ-3-5-க)

# சாவகச்சேரி பிரதேச சபை கூட்டம் இடையில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜுன்26

பலத்த பாதுகாப்புடன் நேற்று ஆரம்பமான சாவகச்சேரி பிரதேச சபைக் கூட்டம் தலைமையுரையின் பின்னர் இடையில் ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி பிரதேச சபையின் தலைவர் அன்ரன் பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மூவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ஒருவரும் பிரதேசசபைச் செயலாளரும் சமுகமளித்திருந்தனர்.

தலைமையுரையைத் தொடர்ந்து பிரதேசபையின் செயலாளர் புரிந்ததாகக் கூறப்படும் முறைகேடுகளைச் சுட்டிக்காட்டிய ஈ.பி.டி.பி. மற்றும்ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் செயலாளரை உடனடியாக மாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

செயலாளர் சில தவறுகளை விட்டிருக்கலாம். அவரை மன்னித்து அவரது பதவியைத் தொடரச் செய்ய வேண்டும் என்று தலைவர் தெரிவித்த போது இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் செயலாளரை மாற்றம் செய்ய வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தியதையடுத்தே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-5)

# தடைசெய்யப்பட்ட மருந்து இங்கு கடைகளில் விற்பனை!

யாழ்ப்பாணம், ஜுன்26

சுகாதாரத் திணைக்களத்தினால் தனியார் கடைகளில் விற்பனைக்குத் தடை செய்யப்பட்ட பன்ஸிடார் (Fancidar) மருந்து யாழ்ப்பாணத்திலுள்ள மருந்துக் கடைகளில் மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்மருந்தினை வாங்கி எவரும் பயன்படுத்த வேண்டாம் என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள அறிவுறுத்தி உள்ளன.

மலேரியா நோய்க்குப் பாவிக்கப்படும் இம்மருந்து தனியார் கடைகளில் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டபோதும் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மலேரியா உட்பட காய்ச்சல் ஏதாவது ஏற்பட்டால் இந்த மருந்தைப் பாவிக்கும் பழக்கமும் மக்கள்மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்த மருந்தினால் பக்கவிளைவுகள் ஏற்படும் அபாயம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சுகாதாரத் திணைக்களத்தில் மட்டுமே இருக்கக்கூடிய இம்மருந்து டாக்டர்களின் சிபார்சின்றிப் பாவிக்கப்படக் கூடாதது என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

இம்மருந்து வெளிக்கடைகளில் விற்பனையாவதைத தடுக்கும் முயற்சியில் சுகாதாரத் திணைக்கள மற்றும் உணவு, மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (உ-5)

## நிர்வாகசேவை பரீட்சை யாழ்ப்பாணத்தில்

கொழும்பு, ஜுன்26

ஸ்ரீலங்கா நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அடுத்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருக்கிறது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பரீட்சை ஆணையாளருடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 79பேர் தோற்றுகின்றனர்.(ஐ-3)

## சைவ சித்தாந்த வகுப்பு

வலிவடக்கு, ஜுன்26

யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான சைவ சித்தாந்த வகுப்புக்கள் இன்று நடைபெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு.து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வகுப்பினை இந்து சமய கலாச்சார அலுவல்கள அமைச்சு நடத்துகிறது. (உ-86)

# அகதிகளிடம் பணம் பறிக்கும் குழு மன்னாரில் கைவரிசை!

மன்னார்,ஜுன்26

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப பகுதியில் இருந்து மன்னார் நகருக்கு வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகதிகளிடம் பணம பறிக்கும் கோஷ்டி ஒன்று மன்னாரில் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்குச செல்வதற்காக மன்னார் வரும் அகதிகளிடம் பேரம் பேசி ஆயிரக்கணக்கில் பணத்தைச் சுருட்டும் பணியில் இந்தக்குழு செயற்படுவதாகவும் கூறப்பட்டது.

"நீங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் என்று பொலீஸாருக்குத்தகவல கொடுப்போம். பணம் வழங்கினால் நீங்கள் எதுவித பிரச்சினைகளும் இன்றி யாழ்ப்பாணம் போகலாம்" என்று தெரிவித்து இந்தக் கோஷ்டி பணம் பறிப்பதாகக் கூறப்பட்டது. (ஐ-3)

# கூரை பிரித்து இறங்கி வீட்டில் நகை சூறை!

அளவெட்டி, ஜுன்26

பட்டப்பகலில் வீட்டின் ஓடு பிரித்து உள்ளே புகுந்த திருடர்கள் இரண்டு லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகளைத திருடியதுடன் வீட்டில் சமைத்து வைக்கப்பட்டிருந்த உணவையும் சாப்பிட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இச்சம்பவம் அளவெட்டிப் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்றது.

அளவெட்டி கிழக்கு மாவத்தை என்ற இடத்தில் வசிக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடமை புரியும் ஒருவரின் வீட்டிலேயே இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் உத்தியோகம் பார்ப்பவர்கள். இவர்கள் காலையில் கடமைக்குச் செல்வதை அவதானித்து உள்ளே சென்ற திருடர்களே நகைகளைச் சூறையாடியுள்ளனர். (ஐ-13)

## மாடு சிக்கியது

வீதியோரத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு அப்பகுதியில் இருந்த மிதிவெடியில் அகப்பட்டு கால்கள் இரண்டையும் இழந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழன் நண்பகல் 12.00 மணியளவில் யாழ். பிரதான வீதியில் சாவகச்சேரி நகர சபை பொது நூலகத்தின் நுணாவில் கிளை முன்பாக இடம்பெற்றது.

# யாழ். பல்கலை மாணவருக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்

யாழ்ப்பாணம், ஜுன்26

கைதடி சித்த மருத்துவ பீடத்தில் மாணவர்களுக்கான இரு விடுதிகளை அமைக்க நேற்று அடிக்கல் நடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அடிக்கல்லை நட்டார்.

ஒரு கோடி 20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த விடுதிக் கட்டடப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மருதனார்மடத்திலுள்ள நுண்கலைப்பீடத்தில இரு விடுதிகளும் யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம விடுதிக்கு அருகில் மற்றுமொரு விடுதியும் அமைக்கப்படவிருப்பதாகத் துணைவேந்தர் தெரிவித்தார். (ஐ-3)

## மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதலில் ஒரு மாணவன் படுகாயம் அடைந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பொலீஸார் அப்பாடசாலைக்குச் சென்று விசாரணை நடத்தினர்.

எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்க முடியாது. இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸார் மாணவர்களை எச்சரித்தனர். (ஐ-3-164)

## மரணம்

நெல்லியடி,ஜுன்26

பனையிலிருந்து தவறி வீழ்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் நேற்றுக் காலை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப் படுகையில் வழியில் மரணமானார்.

புலோலி வல்லிபுரக் குறிச்சியை சேர்ந்த வைரமுத்து நடராஜா (வயது 65) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகையில் வழியில் அவர் மரணமானார். (ஐ-109)

## அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பட்டப்பின்படிப்பு (டிப்ளோமா) கல்விப் பரீட்சைகள் -1997.**

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்கள் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் 02.07.99, 03-07-99 ஆகிய தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் 20-07-99 அன்று ஆரம்பமாகும்.

25-06-99

பதிவாளர்.

(C/8006)


எமது வீடியோ CD (பிரமிட்) வெளியீடு

கார்த்திக் ~ அஜித்தின்

ஆனந்தப் பூங்காற்றே

வீடியோ விமல்

யாழ்ப்பாணம

(C/8007)



பிரபா திரையரங்கு

உடுப்பிட்டி

இன்றுமுதல்

விஜயகாந் நடித்த

கப்டன் பிரபாகரன்

நாளை

ஞாயிற்றுக்கிழமை முதல

ரஜனி நடித்த

படையப்பா

(66929)


## மரண அறிவித்தல்

### முருகேசு செல்லம்மா

காரைநகர் சடையாளியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு - செல்லம்மா 22-06-99இல் வன்னேரியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் வைத்திலிங்கம், இரகுநாதன், சுப்பிரமணியம், சிவகுருநாதன்(சுவிஸ்), சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அம்பலவாணர், நாகேஸ்வரி ஆகியோரின் சிறியதாயாரும் மகாலட்சுமி, தவமலர், புவனேஸ்வரி, புஸ்பராணி(சுவிஸ்), சோமசுந்தரம், நடராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிதம்பரம்(M.P.இண்டஸ்றீஸ் கொச்சிக்கடை) காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, சிவபாக்கியம்(அருளம்மா), பரிமளம்(தங்கரத்தினம்), இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வன்னேரியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
மு.வைத்திலிங்கம்
(மகன்)

சடையாளி,
காரைநகர்.

(66930)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-06-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

ராகங்கள் பலவிதம்;
"ராகம்ஸ்" பட்டுச்
சோலையின் சேலை
களோ புதுவிதம்.

ராகம்ஸ்
பட்டுச்சோலை
24,நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
கிளை:-பிரதானவீதி, (பஸ்நிலையம்அருகில்), சங்கானை.
(66785)

சஞ்சீவி 26-06-1999

## கருத்துக் கலசம்

மயூரா

### விடாமுயற்சி

**வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடா முயற்சியையும் பெரும் மன உறுதியையும் நீங்கள் பெற்றிருக்க வேண்டும்.**
*-சுவாமி விவேகானந்தர்.*

இயற்கையே இரண்டு வகைப்பட்டது. நீரும் நிலமும், மேடும் பள்ளமும், வெயிலும் மழையும், வானமும் கடலும், தென்றலும் சூறாவளியும், காடும் வனாந்தரமும் என்று,ஒன்றுக்கு மற்றது வேறுபட்டனவற்றையே காண்கிறோம்.

அதே போன்று மனித வாழ்விலும் இரு வேறுவகைப்பட்ட தன்மைகளையே காணலாம். இன்பமும் துன்பமும், செல்வமும் வறுமையும், வலிமையும் மென்மையும், வெற்றியும் தோல்வியும் என்று அனுபவிக்கின்றோம். மனிதனில் குண இயல்புகள் கூட இருவகைப்பட்டே உள்ளன. அறமும் மறமும், நட்பும் பகைமையும், கோபமும் அடக்கமும், முயற்சியும் சோம்பேறித்தனமும், பொறுமையும் சினமும் என்று ஒன்றுக்கு மற்றது மாறுபட்டே குடிகொள்கின்றன.

ஒரு மனிதனது உயர்வுக்கும் வெற்றிக்கும் அவனது முயற்சியே மூலாதாரமாக உள்ளது.

வாழ்க்கையில் புகழும் கீர்த்தியும் பெற்றவர்கள், சமூகத்தால் மதிக்கப்பட்டவர்கள், போற்றப்பட்டவர்கள் எவரும் உடனடியாக அந்த நிலையை எய்தியதில்லை. தோல்விகளைச் சந்தித்து, பல தடவைகள் சறுக்கி விழுந்து பள்ளத்தில் வீழ்ந்து பின்னர் உயர்ந்தவர்களே.

ஆனால் நலிவுற்ற போது, முயன்றது கிடைக்காத போது, அவர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை; மனதைக் தளரவிடவில்லை. தோல்வியே எய்தாமையே வெற்றியின் படிக்கட்டுகள் என்ற நம்பிக்கையை இழக்காது மன உறுதியை வளர்த்து உயர்ந்தார்கள்; பெருமை பெற்றார்கள்; புகழ் சேர்த்தார்கள்.

மனிதமனம் மென்மையானது. துன்பத்தை, இழப்பை, எய்தமுடியாமையை, தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இலகுவில் சோர்ந்து விடுகிறது; சுருங்கிப் போகிறது.

இன்பத்தை அனுபவிக்க ஆசைப்படும் மனம் துன்பம் வரக்கூடாது என்று வேண்டுகிறது. வேண்டுவதால் அவ்வாறு நடப்பதில்லை. துன்பத்தை அனுபவித்தாலே இன்பத்தைக் காணலாம் என்பதே நியதி.

அதே போன்று வெற்றியை அனுபவிக்கத் தோல்வியை அனுபவித்தே ஆகவேண்டும்.இந்தஉணர்வை வளர்த்துக் கொள்வதே மன உறுதியைப் பலப்படுத்துவதற்கான பயிற்சியாகும். தோல்வியைக் கண்டு துவளாத மன உறுதியை,மனப்பலத்தை வளர்த்துக் கொண்டால் வெற்றி இன்றில்லா விடினும் என்றோ ஒருநாளில் வந்துசேரும்.

மனஉறுதி இருந்தால் விடா முயற்சி குறையாது; தளராது வெற்றி கிடைக்கும் வரை முயற்சி செய்வதற்குத் தூண்டும். ஆனால் மக்களில பலர் அவ்வாறில்லை. தாம் நினைப்பது உடனே கிடைத்து விடவேண்டும் அல்லது நிறைவேறிவிட வேண்டும் என்றே விரும்புகிறார்கள். விரும்பியது கிடைக்காவிடில் மனம்நொந்து, சலிப்புற்று, விரக்தியடைந்து தற்கொலை, ஒதுங்கிக் கொள்ளுதல் என்பனவற்றை சிக்கெனப் பற்றிக் கொள்கிறார்கள்.

மனச்சோர்வு மனிதனை நலிவடையச் செய்யும் கோடரி. அது வாழ்க்கையை வளமற்றதாக்கிவிடும். தோல்விக்கு இட்டுச் செல்வதும் அதுவே. எதையும் தாங்கும் இதயம் வேண்டும். அதுவே ஒருவனை வெற்றிக்கு ஆற்றுப்படுத்தும்.

ஆகையால் -

மனஉறுதியை இளமையிலிருந்து பயிற்சிப்படுத்திக் கொள்ள வேண்டும். மனதை அலையவிடாது கட்டுப்படுத்தப் பழகினால் மனஉறுதி ஓங்கி வளரும். மனஉறுதி விடாமுயற்சிக்கும், விடாமுயற்சி வெற்றிக்கும் உயர்த்தும்.

# வாசுகிப் பாம்பு கேட்ட வரத்தை நிறைவு செய்யவே வாலி வதம்!

இராமாயணத்திலே வாலி வதம் ஒரு முக்கியமான கட்டம்.

அதற்கு முன்னே, ஒரு வரிசையில் நான்கும் மறுவரிசையில் மூன்றுமாக மொத்தம் இரண்டு வரிசைகளில் இருந்த ஏழு மரங்களை தனது ஓரம்பினால் துளைத்து சுக்ரீவனுக்குத் தான் யார் என்பதைக் காட்டுகின்றான் இராமன்.

இதனுள்ளே அர்த்தம் நிறைந்த ஒரு கதை இருக்கிறது.

வான்மீகி இராமாயணத்தில் நேரே சுட்டப்படாததும், கம்பராமாயணத்தில் மறைமுகமாகக் கூறப்பட்டிருப்பதும், பிற புராணங்களில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளதுமான இந்தப் புராணக் கதை அறிவதற்கு சுவாரஸியமானது.

அதனை அறிவதற்கு முன்னர் திருக்குடந்தை ஸ்ரீ ராமஸ்வாமி கோயிலில், ஸ்ரீராமாயணத் தொடர் ஓவியங்களில் காணப்படும் ஒரு சித்திரத்தை நோக்குவது பொருத்தமானது.

வில்லையெடுத்துப் பூட்டிய அம்பும், இழுத்த நாணுமாக இராகவன் நிற்கின்றான். எதிரே ஏழு ஓங்கி வளர்ந்த மரங்கள். சுற்றிலும் புதர்கள். அடிப்புறத்திலே மலைப்பாங்கான பூமி என்பது தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றது. அவ்விடத்தைச் சுற்றிப் புதர்கள், மரங்களினால் ஏற்பட்ட இருளைக்கூட அந்த ஓவியத்திலே காணமுடிகிறது.

கூர்ந்து நோக்கினால் ஒரு பாம்பின் உருவம் தெரியவரும். சற்று ஆழமாகப் பார்க்க பாம்பு நன்கு புலப்படுகின்றது. நீண்டு வளைந்த உடம்பு; சீறி எழுந்து படம் எடுக்கின்ற தலை.

நீண்டு கிடக்கின்ற பாம்பின் உடலிலே ஏழு வளைவுகள். ஒவ்வொரு வளைவு ஓரத்திலும் சிகரம் போன்ற எழுச்சி. சிகரத்தின் மீது உயர்ந்து வளர்ந்த ஆச்சா மரங்கள். ஒரு வரிசையில் நான்கு வளைவு ஓரங்கள் ஒரு நேர் கோட்டில். அதற்குக் சாமாந்தரமாக - இணையாக - மற்றைய வரிசையில் மூன்று வளைவு ஓரங்கள் மற்றைய நேர் கோட்டில்.

இந்த இரண்டு வரிசை ஓரங்களிலும் உள்ள சிகரங்களிலும் இந்த ஏழு மரங்களும் நிற்கின்றன.

ஆக நான்கு மரங்கள் ஒரு வரிசையில். அவற்றுக்குப் பக்கத்தில் சமாந்தரக் கோட்டில் மற்றைய மூன்று மரங்கள்.

இந்த இரு வரிசை மரங்களின் அடிப்பாகங்கள் ஊடாக மாறிமாறி, வளைந்து செல்கின்றது பாம்பின் நீண்ட உடல்.





ஏழு மரங்களையும் இராமன் ஓர் அம்பினால் துளைத்த சாதனையை இச்சித்திரம் காட்டுகிறது.

இரண்டு தனித்தனி வரிசைகளில் உள்ள மரங்களை இரண்டு முறை தனித்தனியே அம்பு எய்து துளைக்கலாம். ஒரே முறையில் எப்படி அடித்தான்?

அதை உணர்வதற்கு முன்னர் அந்த ஓவியத்தில் உள்ள மற்றைய சில காட்சிகளையும் நாம் அவதானிக்க வேண்டும்.

படத்தில் அந்தப் பாம்பின் வாலைக் காண்கின்றோம். அந்த வாலின் நுனியின் மீது இராமனுடைய திருவடிப் பெருவிரல். அந்த விரலால் இராகவன் பாம்பை அழுக்குகின்ற பாங்கும் தென்படுகின்றது.

இனி இந்த ஓவியத்தைப் புரிந்து கொள்ள புராணக் கதைக்குப் போவோம்.

இராமாவதாரத்திற்கு வெகுநாள் முன்பே பிறந்தவன் வாலி.

**கிருஷ்ணா**

பகவானின் கூர்மாவதாரக் காலத்திலேயே வாலி புகழ்பெற்று விளங்கினான். அப்போது தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற பாற்கடலை கடைந்தனர். உலகத்தில் உள்ள எல்லாப்பொருள்களுமே - மரம், செடி, கொடி, மூலிகைகள் அனைத்துமே - பாற்கடலிலே போடப்பட்டு பாற்கடல் கடையப்பட்டது.

அமுதத்தை வேண்டி ஆர்வத்துடன் ஒரு புறத்தில் அசுரரும், மறுபுறத்தில் தேவர்களும் கயிற்றை இழுத்துக் கடைவதற்குத் தயாராக நின்றனர்.

மந்திரமலை மத்தாகியது. இந்த மாபெரும் மலையாகிய மத்தை இழுத்துக் கடையும் சுற்றுக் கயிறாக வாசுகிப் பாம்பை இருக்க வேண்டினர்.

வாசுகியும் இந்திரன் ஆணைக்கு உட்பட்டு சுற்றுக் கயிறாக இருக்க இசைந்திட, தலைப்புறம் அசுரர்களும் வாற்புறம் தேவர்களும் வாசுகியை சுற்றி இழுக்கத் தொடங்கினர்.

பகவான் கூர்மாவதாரம் எடுத்து பாற்கடலுக்குப் போய், மலை அமிழாது தாங்கினான்; சாயாமல் ஒரு கையால் நுனியைப் பிடித்துக்கொண்டான்.

எப்படி இழுத்தும் மலை சுழலவில்லை. இதனால் 'வாலி எங்கே?', 'வாலி எங்கே' என்று எல்லோரும் குரல் எழுப்பி வாலியைத் தேடினர்.

வாலி வந்தான். அரக்கர் பக்கம் சிறிது நேரமும், தேவர் பக்கம் சிறிது நேரமுமாக மாறி மாறி வாசுகிக் கயிற்றைக் இழுக்கத் தொடங்கினான வாலி. மலை சுழன்றது. தேவர்கள் அமுதம் பெற்றனர். அசுரர்கள் ஏமாந்தனர். அது நமக்குத் தெரிந்த புராணம்தான்.

எம்பெருமான் மோகினி அவதாரம் முடித்துக் கொண்டு சாவகாசமாக எழுந்தருளினான்.

கடல் கடைவதற்குக் கயிறாகப் பயன்பட்டு உடல் வலியடைந்த வாசுகி, வாலிக்கு அஞ்சி பாதுகாப்பாக ஓய்வெடுக்க இடம் தேடியது.

மதாங்க முனிவரின் ஆசிரமத்துக்கு அருகே வாலி வரமாட்டான் என்ற காரணத்தினால் வாசுகி அங்கு சென்று சோர்விலிருந்து விடுபடுவதற்காக படுத்தது. பெருமூச்சு விட்டுக்கொண்டும், முனகிக் கொண்டும், உடம்பை நெளித்துக் கொண்டும் இருந்தது வாசுகி. பகவான் வந்ததைக் கூட வாசுகி கவனிக்கவில்லை.

பகவான் வாசுகியைப் பார்த்து "நல்ல செயலுக்கு உதவியுள்ளாய். இந்திரன் உன்னை மறந்தாலும் நான் உன்னை மறக்கவில்லை." என்று கூறி "வரம் ஏதேனும் வேண்டுமாயின் பெறுக" எனவும் அன்பு ததும்ப அருளினான்.

உடனே வாசுகி "பகவானே! தேவகாரியத்திற்கு என்று இசைந்தேன். ஆனால் தேவர்கள் என்னை இலட்சியம் செய்யவில்லை. வாலியைக் கொண்டு இழுக்கச் செய்து என்னைப் பழி வாங்கினர். வாலி முரட்டுத்தனமாக என்னை இழுத்து விட்டான். என் உடம்பெல்லாம் காயம். மூச்சுத் திணறுகின்றது. கண்கள் பிதுங்கி விட்டன. வலியோ தாளவில்லை. புலம்புவதற்குக் கூட என் உடம்பில் உரம் இல்லை. இந்நிலைக்கு என்னை ஆளாக்கியுள்ளான் வாலி. அவனாலேயே நான் இந்நிலைக்கு ஆளாகினேன். வாலியால் வந்த இந்த வலியை மறப்பதற்கு எனக்கு நீண்ட உறக்கம் தேவை. பகவானே! நீ இதை எனக்கு அருளுவாயா?" - என்றது வாசுகி.

"நீ யுகயுகமாகத் தூங்குவாயாக!" என்று வரமளித்த பகவான் "மேலும் ஒரு வரம் பெற்றுக் கொள்" என்று வாசுகிக்கு அருள்கரம் நீட்டினான்.

"என்னை இந்நிலைக்குத் தள்ளிய வாலி மாண்டொழிந்தான். பாவி இங்கு இல்லை என்ற இன்சொல்லை நான் துயில் நீங்கும் போது என் செவிகளால் கேட்க வேண்டும்." - என்று வாசுகி வேண்டியது. இறைவனும் அதற்கு இசைந்து அருளி மறைந்தான்.

அதற்குப் பின்னர் வராக, நரசிம்ம, வாமன, திருவிக்ரம அவதாரங்கள் நிகழ்ந்து முடிந்து போயின..... யுகங்கள் கடந்தன.

வாசுகி தூங்கியது; தூங்கியது; தூங்கிக் கொண்டே இருந்தது. அதனுடைய உடம்பின் மீது செடி, கொடிகள் படரலாயின. மண் மேடிட்டது; மலை வளர்ந்தது. அது வளைந்து, வளைந்து

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org